KALKI 12.11.95 ரூ. 3.00

கல்கி



"போலீஸை நம்பிப் பயனில்லை..."

புறப்பட்டுவிட்டது பெண்கள் படை!



ரகசிய போலீஸ்

முதலமைச்சரைக் கொல்ல வரும் வில்லனை ஒழிக்கிறார் ஒரு போலீஸ் அதிகாரி. இந்த ஒரு வரிக் கதையை வைத்துக் கொண்டு உலகம் மொத்தம் சுற்றி வருகிறார் டைரக்டர். பாடல்களாகட்டும், சண்டையாகட்டும், சம்பவங்களாகட்டும் - எல்லாவற்றிலும் ஒரு செழுமை. நடிப்பும் கூடவே பரிமளிக்கிறது.


போலீஸ் அதிகாரியாக சரத்குமார். கோபிச்செட்டிப் பாளையத்தின் குறுக்குச் சந்துகளில் மட்டும் ஓடிக் கொண்டிராமல், ஜேம்ஸ் பாண்ட் ஸ்டைலில் விதவிதமாய் துப்பாக்கி தூக்குகிறார்; நெடுஞ்சாலைகளில் தீவிரவாதியைத் துரத்துகிறார். அப்பப்போ நக்மாவோடு பாரீஸ்; செஷல்ஸ் என்று கண்டங்கள் கடந்து போய் பாட்டு பாடி விட்டு வருகிறார். காதலும் வீரமும் அடுத்தடுத்து வந்தாலும் அநாயாசமாக வருகிறது சரத்துக்கு.

கவுண்டமணிக்கு வில்லன் பிரமோஷன். பேச்சில் சிரிப்பு இருந்தாலும், ஆழமான வன்மம் வெளிப்படுகிறது. இயற்கையான நடிப்பு. இன்னும் செந்தில், தேவன், ராதிகா, வினுச்சக்ரவர்த்தி என்று நட்சத்திரப் பட்டாளமே உண்டு. இவ்வளவு பேருக்கும் சரிசமமாய்க் காட்சிகள் கொடுத்து, திரைக் கதைக்கு வலுசேர்த்திருப்பது டைரக்டரின் சாமர்த்தியம்.

இன்னொரு சாமர்த்தியசாலி அசோக்குமார். மனிதருக்குக் கலர் சென்ஸ் மிக அதிகம். பாடல் காட்சிகளில் இயற்கை வனப்புகளின் பின்னணியில், அதற்கு கான்ட்ராஸ்டான கலர் உடைகளில் ஹீரோ - ஹீரோயினை டான்ஸ் ஆட வைத்து, படம் பிடித்துத் தள்ளியிருக்கிறார். விதவிதமான சேஸிங்குகளில் முதுகுத் தண்டை நிமிர்த்தச் செய்வதும் காமிராதான்.

நூறு சதவீதம் பொழுது போக்கையே எதிர்பார்த்துப் போகும் ரசிகர்களை ஒரு சதவீதம் கூட ஏமாற்றாத படம்.

— துளசி



உங்கள் அனைத்து கேள்விகளுக்கும் ஒரே விடை : எஸ்டி அசோசியேடட் பில்டர்ஸ். சென்னை நகரில் டீலக்ஸ் ஃப்ளாட்டுகள் மற்றும் தனி வீடுகள் வாங்க முன்னணி நிறுவனங்கள் மூலம் கடன் வசதி பெற, சுலபத் தவணைகளில் வீடு வாங்க, மேலும் விவரங்கள் அறிய தொடர்பு கொள்ளுங்கள்.

CREATORS
NOT JUST BUILDERS

YESDE ASSOCIATED BUILDERS LIMITED

2nd Floor, 26,
Ranganathan St.,
T.Nagar,
Madras - 600 017.
INDIA
Ph: Off: 4340224/
4340210.
Res.: 2345244
Fax: (044) 2344333

குடியரசுதின விழா அணிவகுப்பு நடந்து கொண்டிருந்தது. ஒரு பெண் போலீஸ் அதிகாரி, ஒரு காவல்துறை அணிக்குத் தலைமை ஏற்று வருவதைப் பார்த்தார் அன்றைய பிரதமர் இந்திரா காந்தி. மறுநாளே அந்த அதிகாரியைத் தம்முடன் காலை உணவுக்கு அழைத்து கௌரவித்தார்.

கிரண் பேடி மட்டும் பிடிவாதமாக இருந்திரா விட்டால் அவருக்கு இந்தப் பெருமை கிடைத்திருக்காது.

"கையில் கனமான வாளை ஏந்தி பதினைந்து மைல் தூரம் நடக்க வேண்டும். உன்னால் முடியுமா...?"- கிரணின் பெயரைப் பட்டியலிலிருந்து நீக்கிய உயரதிகாரி இப்படிக் கேட்டபோது,

"ஒரு போலீஸ் அதிகாரிக்குரிய அத்தனை பயிற்சிகளையும் பெற்ற நான் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும் என்று நினைக்கிறீர்களா?" என்ற பதில்தான் வந்தது.

மறுபேச்சின்றி, "ஓ.கே! டெல்லி போலீஸ் படைக்கு நீங்களே தலைமை ஏற்று, அணிவகுப்பில் கலந்து கொள்ளுங்கள்" என்றார் ஐ.ஜி.

திகார் ஜெயிலை, திகார் ஆஸ்ரமாய் மாற்றினார் கிரண் பேடி என்பது எல்லோரும் அறிந்ததே. ஜெயிலில் தியானம் பயின்ற ஆயுள் தண்டனைக் கைதி



துணிச்சலின் வரலாறு!

டிபி. சிங். அவர் கூறுகிறார் :

"என் மைத்துனனைக் கொலை செய்ததற்காகத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறேன். ஒன்பதரை ஆண்டு ஜெயில் வாசத்தில், என் பெற்றோர் ஒரு தடவை கூட என்னை வந்து சந்தித்ததில்லை. பழிவாங்கும் எண்ணமும், என் பெற்றோர் மீது கோபமும் என்னுள்ளே கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தன. தியானப் பயிற்சிக்குப் பின் நான் முற்றிலும் மாறிவிட்டேன். மனம் அமைதியாகிவிட்டது. என்னை வந்து ஒருமுறை சந்திக்கும்படி என் பெற்றோருக்குக் கடிதம் எழுதியிருக்கிறேன். அவர்களின் காலில் விழுந்து வணங்கி, ஆசிபெற என் மனம் துடிக்கிறது."

திகாரில் கிரண் பேடி நிகழ்த்திய அற்புதங்களைக் கேள்விப்பட்ட அன்னை தெரசா அவரைப் பார்க்க விரும்பினார். அன்னையின் ஆசிரமத்துக்குப் போய், அவரைக் கிரண் பேடி சந்தித்தார். அன்னை, அன்போடு கிரண் பேடியைக் கட்டித் தழுவிக் கொண்டார். சிறிது நேரத்துக்கெல்லாம் இன்னொரு முறையும் தழுவிக் கொண்டார். கிரண் பேடி விடைபெற்றுக் கொண்டு, ஆசிரமத்தின் நுழைவாயில் வரை வந்துவிட்டார். திடீரென, அவரை நிற்கச் சொல்லிவிட்டு வெறும் காலுடன் ஓடிவந்து மூன்றாவது தடவையாய் அவரைத் தழுவிக் கொண்டார். கிரணுக்குச் சந்தோஷமாய் இருந்தாலும் காரணம் புரியவில்லை. "அன்னை தெரசா, என்னவோ தெரியவில்லை. உன்னை இன்னொரு முறை கட்டிக் கொள்ள வேண்டும் போல இருந்தது!" என்றார் சந்தோஷம் பொங்க.

- 'ஐ டேர்' (கிரண் பேடியின் சர்ச்சைக்குரிய பணிக்கால வரலாறு மற்றும் அவரது தனிப்பட்ட வாழ்க்கையைச் சொல்லும் புத்தகம்)

எழுதியவர் : பர்மேஷ் தங்வல்;

வெளியீடு : UBSPD;

சென்னை - 34.

விலை ரூ. 295/-.

இரட்டை அரண்ம

15

கி. ராஜேந்திரன்

வெனிஸ். உலகின் மிக அழகிய நகரங்களுள் ஒன்று. நாள்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகளைக் கவர்ந்திழுக்கும் 'கால்வாய்கள் நகரம்'. ஏட்ரியாடிக் கடல் உப்பங்கழிகளாக உட்புகுந்து நிலத்தைக் கூறுபோட்டதால் நூற்றுக்கணக்கான தீவுகளை உள்ளடக்கிய நகரம். "கிராண்ட் கனால்" என்று அழைக்கப்படுகிற பிரதானமான பெரிய உப்பங்கழியின் கரையோரமாக கருங்கல் தளம் போடப்பட்ட நடைபாதையில் காலாற நடந்து கொண்டிருந்தாள் சாயா. கடற்காற்று காரணமாக அந்த அகண்ட கால்வாயில் "களுக் களுக்"கென்ற சப்தத்துடன் சிற்றலைகள் எழும்பி விழ, ஸ்பிரே ஸெண்ட் போல நீர்த்துளிகள் உடலில் பட்டு சிலிர்ிட்டன.

பெரும் பணக்காரர்களை ஏற்றிக் கொண்டு நாடு நாடாகச் சுற்றுலா போகும் சொகுசு கப்பல் ஒன்று, அந்த ஆழமான, அகன்ற கால்வாயில் 'பூம் பூம்' என்று ஒலி எழுப்பிச் சென்றது. பயணிகள் மேல்தளத்தில் நின்று கையசைத்து, கரையில் இருப்போருக்கு மகிழ்ச்சி தெரிவித்தனர்.

கால்வாயின் மறுகரையில் புராதன அரண்மனைகளும் மாதா கோயில்களும் மறைந்து கொண்டிருந்த சூரியனின் கடைசி கிரணங்களின் ஒளியில் தகதகத்துக் கொண்டிருந்தன. சீக்கிரமே அவை சாம்பல் நிற நிழலோவியங்களாக மாறத் தொடங்கின. ஒரு மாதா கோயிலில் "டண்-டணால், டண்-டணால்" என்று மணியோசை எழ, சாயா நடந்து கொண்டிருந்த எதிர்க்கரையில் அதன் எதிரொலியே போல் இன்னொரு மாதா கோயிலின் மணி ஒலிக்கத் தொடங்கியது. அடுத்து, எதிரும் புதிருமாக கால்வாயின் இரு கரைகளிலுமிருந்த ஏராளமான மாதா கோயில்களின் மணியோசைகள் வானக் கூரையை நோக்கிப் பரவ, எங்கும் ஒரு சாந்நித்தியம்.

கால்வாய்க் கரையில் ஆங்காங்கே நடைபாதை உணவு விடுதிகள். ஆனால் நடப்பவருக்கு இடையூறு இன்றி, கால்வாய் மீதாக மேடை அமைத்து மேஜை நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. வண்ண விளக்குகளும் மலர் அலங்காரமும் பசிக்காதவர்களுக்குக் கூட பசிக்கும் ஆர்வம் ஊட்டி வரவேற்றன. 'பனீர்' வெண்மையில் மேஜை விரிப்புகளைப் பரப்பிக் கொண்டிருந்தான் ஓர் ஊழியன்.


ஒரு நாற்காலியில் அமர்ந்து "ஸ்பகட்டி - டொமேட்டோ ஸாஸ்" என்று ஆர்டர் செய்தாள் சாயா. இடியாப்பம் போல்தான். ஆனால் தடிமனாக இருக்கும்; வழுக்கிக் கொண்டு போகும்; அதை ஃபோர்க் என்கிற முள்கரண்டியில் சுற்றி எடுத்து தக்காளி 'சட்னி'யுடன் சேர்த்து வாய்க்குள்ளே தள்ளுவது அனுபவமற்றவர்களுக்குப் பெரிய சவால்! சாயாவுக்குத் தெரிந்துதான் இருந்தது. ஆனாலும் வயிற்றை நிரப்பியாக வேண்டுமே! அதுவும் சைவ உணவாக இறங்க வேண்டுமே!

ஸர்வர் திரும்பி வரும் வரை 'கோக்' டின் உடைத்து ஸிப் செய்தவாறு சுற்றுப்புற எழிலை ரசித்தாள். இரவு ஒன்பது மணி வரை இருட்டாது என்றார்கள். மங்கலான மாலையே நீடித்தது. எதிர்கரையில் முதல் மின்விளக்கு ஏற்றப்பட்டு மத்தாப்பூவாக கால்வாய் நீரில் பிரதிபலித்தது. சற்று நேரத்தில் இன்னும் ஒன்று, மேலும் ஒன்று. ஒவ்வொரு மின்விளக்கும் இரட்டிப்பாகி நீரில் பூத்தது.

வெனிஸ் பற்றி அவள் படித்ததுண்டு. ஆனால் இத்தனை அழகுக்கு அவள் தயாராக வில்லை. மூச்சு விடவும் மறக்கச் செய்யும் கொள்ளை எழில். அதனை அப்படியே அள்ளிப் பருக தனக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தை எண்ணி மகிழ்வதா அல்லது கணவனிடம் கோபித்துக் கொண்டு கிளம்பி வர நேர்ந்த துரதிர்ஷ்டத்தை நொந்து கொள்வதா? இப்போது கூட இதெல்லாம் ஒரு சொப்பனமோ என்று தோன்றியது.

ஆனால் ஏவி அருகே நிற்பது போல் ஜில்

வென்று உடலைத் தழுவும் காற்று, கால்வாயில் சீறிப் பாய்ந்து செல்கிற மோட்டார் போட், நிதானமாக நகரும் ஒரு கோண்டோலா படகு, தேய்ந்து தேய்ந்து இப்போது தொலைதூரத்தில் கேட்கின்ற மாதா கோயில் மணி ஓசை, ஒரு பெருமிதப் புன்னகையுடன் இத்தாலி நாட்டின் சிறப்பு உணவை அவள் எதிரே வைத்து அதன் இருபுறமும் காவலர் போல ரொட்டிக் கூடையையும் நறுக்கிய பச்சைக் காய்கறி கிண்ணத்தையும் நிறுத்துகிற வெய்ட்டர் – இவையெல்லாம் நிஜம், நிஜம், நிஜமேதான்.



அவள் சென்னையிலிருந்து உதகைக்குச் சென்ற போது, ஃபிராங்க்ஃபர்ட்டுக்குப் பறப்போம், அங்கிருந்து வெனிஸுக்கு வருவோம் என்றா நினைத்தாள்? சூரியா சுவாமியை சந்திக்க முடியுமா, சந்தித்தாலும் பேச முடியுமா, பேசினாலும் அனுதாபத்தைப் பெற முடியுமா, அல்லது அறிவுரை வழங்கி அனுப்பி விடுவாரா என்றல்லவா கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள்! மாலைப் பிரார்த்தனையும், அரை மணி நேர உபந்நியாசமும் முடிந்து, சுண்டல் விநியோகமும் நடந்து, அவரை வணங்கியவர்களுக்கு ஆசி வழங்கிய நேரத்தில் கூட அவளுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. அறிவுரை வழங்கினால் கூடப் பரவாயில்லை; நாலு பேர் முன்னிலையில் கோபித்துக் கொண்டால்...? அவரிடம் என்ன பேசுவது, எப்படிப் பேசுவது என்றெல்லாம் யோசித்து, இரவெல்லாம் மனசுக்குள் ஒத்திகை பார்த்து நெருங்கியவளுக்கு ஆச்சர்யம் காத்திருந்தது.

அவளைப் பார்த்ததுமே ஒரு விரலைச் சுட்டி, புருவம் சுருக்கி, "உன்னோட துக்கத்தின் அனல் அலைகளை நான் உணர்றேன்; முதல்ல சூடு தணியணும், விபூதி வாங்கிக்கோ" என்று கூறிக் கொடுத்தார். அவள் திலகத்துக்கு மேலே உச்சி நெற்றியில் இட்டுக் கொள்ளும் போது, "உனக்கு நெருங்கினவங்க யாரோ சமீபத்துல இங்கு வந்திருக்கணும்; அதனாலதான் இந்த பாதிப்பு எனக்கு ஏற்படறது" என்று கூறி, மெய்சிலிர்க்க வைத்தார். 'மகான்தான் இவர்!'

பக்தர்களுக்கு விடைகொடுத்து அனுப்பி விட்டு பிரதான கட்டடத்துக்குள் அவர் நுழைந்த போது பசுவைப் பின்பற்றும் கன்று போலச் சென்றாள். யாரும் தடுக்கவில்லை. தனி அறையில் கதவு திறந்தே இருக்க, அவர் சிம்மாசனத்தில் சாய, இவள் தரையில் அமர, மறுபடி விபூதி தந்து, "உன் துயரம் எனக்குப் புரியறது; கணவன் சரியில்லே. அப்படித்

னைகள்

தானே?" என்று பரிவுடன் கேட்டார்.

அதுவரை வைராக்கியமாய் இருந்தவள், நிலைகுலைந்து விம்மி அழுதபடியே அவர் பாதங்களை நமஸ்கரித்தாள். "சுவாமி, என்னை இந்த ஆசிரமத்தில் ஏற்றுக் கொள்ளுங்க; சந்நியாசினி ஆகி விட உபதேசம் பண்ணுங்க" என்றாள்.

கொஞ்சமாகச் சிரித்தார் சூரியா சுவாமி. "நீ நினைக்கிறது போல சந்நியாசம் வாங்கிக்கிறது அவ்வளவு சுலபமில்லே. அதுக்குண்டான வயசும் உனக்கில்லே, மனப்பக்குவமும் வரலே."

"சுவாமி எனக்கு ஏற்பட்டிருக்கிற கொடுமைகள் பற்றித் தெரிஞ்சா நீங்க இப்படி சொல்ல மாட்டீங்க."

"அடடா! எனக்குத் தெரியாதா, என் பக்தர்களோட நிலைமை? ஆனாலும் சொல்லு, கேட்டுக்கறேன். மனசு விட்டுப் பேசினா உனக்கு ஆறுதலா இருக்குமே!"

அவள் மடைதிறந்த வெள்ளம் போல் பேசினாள். குழந்தை இல்லாதது; சின்னி வந்து சேர்ந்தது; இப்போ சின்ன வீடுகள் பற்றிய தகவல் தெரியவந்தது; நேரில் சந்தித்து உறுதி செய்து கொண்டது, எல்லாம்....

"உனக்காக அனுதாபப்படறேன்" என்றார். "ஆனால் இல்லற வாழ்க்கையிலே உனக்கு ஏமாற்றம் ஏற்பட்டிருக்கே தவிர, 'போதும்' என்று ஒதுங்கற, துறக்கிற நிலையை நீ எட்டலே. அந்தக் கட்டத்தை நீ அடைஞ்சிருந்தால் இந்த அறைக் கதவை மெனக்கெட்டு திறந்து வைத்து விட்டு இங்க வந்து என் எதிரே உட்கார மாட்டே!" என்று கூறி, கபடமின்றிச் சிரித்தார். "கிரகஸ்தாசிரமம் கசக்கிற வரையிலே கடவுள் சிந்தனையோட, நீ கணவனோட சேர்ந்து அறவாழ்க்கை நடத்தணும்."

"முடியாது சுவாமி! என்னால முடியாது! மறுபடியும் என்னை அந்த நரகத்துல தள்ளி சோதிக்காதீங்க!"

"நரகமாவது? சொர்க்கமாவது? எல்லாம் நம்மோட கற்பனைதான். இப்ப நிகழ்வதுதான் சத்தியம். அதை நிகழ்த்துபவன் சத்தியம்."

"எனக்குப் புரியலே" என்றாள், விசும்பலினிடையே.

"எல்லாம் புரியும். உன் கணவன்கிட்டேருந்து சில காலம் பிரிஞ்சு வாழ்ந்தாலே போதும். உனக்கு அவன் பேரிலும் அவனுக்கு உன் பேரிலும் இருக்கிற பிரியம் ரெண்டு பேருக்குமே புரிஞ்சு போகும். ரெண்டு பேருமே மனம் திருந்தி, ஆண்டவன் மன்னிப்பைப் பெற்று விட்டால் அப்புறமென்ன, ஆனந்த மயம்தானே!"

"பிரிஞ்சு வாழ எங்கே போவேன்? இங்கே இருக்கக் கூடாதுன்னு சொல்றீங்க. அப்பா வீட்டுக்குப் போனா அடுத்த நிமிஷமே இன்பா

> "எப்படியெல்லாம் ஏமாத்த ஆரம்பிச்சிட்டாங்க பாரு..."
>
> "ஏன், என்னாச்சு?"
>
> "அடுத்த வாரம் ஐ.நா. சபை பொதுச் செயலாளர் பதவி காலியாகுது; நம்ம எம்.எல்.ஏ. சிபாரிசுடன் அந்த வேலையை உங்க பையனுக்கு வாங்கித் தர்றேன்னு சொல்லிட்டு, ஒருத்தன் அட்வான்சா, ஐயாயிரம் ரூபாய் வாங்கிட்டுப் போயிட்டானாம்!"
>
> – எம். அசோக்ராஜா

வுக்கு ஃபோன் பண்ணி வரவழைச்சுடுவார்."

"அப்ப... வேறென்ன செய்யலாம்? உம்ம்..." என்று யோசித்து, திடுமென்று தலைதாழ்த்தி, "ஃபாரின் டூர் போறியா?" என்று கேட்டார்.

"என்னது!" – ஆச்சர்யத்தில் திக்குமுக்காடிப் போனாள்.

"ஐரோப்பாவிலே பத்து நாள், அதிகபட்சம் ரெண்டு வாரம் ஒரு டிரிப் அடி. எல்லா ஏற்பாடுகளும் நான் கவனிக்கறேன்."

"ரொம்ப செலவாகுமே சுவாமி. அவ்வளவு பணம்..."

"அந்தக் கவலையெல்லாம் உனக்கு எதுக்கு? எனக்கு அயல்நாட்டுல நிறைய சிஷ்யர்கள் இருக்காங்க. அவங்க கவனிச்சுப்பாங்க."


"இந்த அநாதைகிட்ட இத்தனை கருணையா...?"

"அநாதைன்னு இன்னொருதரம் சொல்லாதே; என்கிட்ட அடைக்கலம்னு வந்தவங்க யாரும் அநாதை இல்லே!"

அதற்கு மேல் அவளுக்கு மறுக்கவோ, தயக்கம் காட்டவோ தோன்றவில்லை.

"நானே அயல்நாடுகளுக்கு ஒரு டூர் போறதாத்தான் இருக்கேன். சூரிய வழிபாடு இயக்கத்தை வளர்க்க, காயத்ரி மகிமையை எடுத்துச் சொல்ல என்னை பக்தர்கள் அழைக்கிறாங்க. கூடவே உன்னையும் கவனிச்சுக்கறேன். ஆனா நாம நெருங்கியிருக்க முடியாது. ஒரே விமானத்துல பயணம் செய்தாக கூட, நீ தனியா, நான் தனியா போற மாதிரிதான் இருக்கணும். தனித்தனி ஹோட்டல்லதான் தங்கணும். நீ உருமாறவும் செய்யணும். ஏன்னா, உன் கணவன் சி.பி.ஐ. இண்டர்போல் பிரிவைச் சேர்ந்தவன். போலீஸிலும் சொல்லியிருப்பான். நூற்றுக்கணக்கான போலீஸார் உன்னை இப்ப கூட தேடிக்கிட்டு இருப்பாங்க. நாளைக்கு பேப்பர்ல உன் ஃபோட்டோ வந்தாக் கூட ஆச்சர்யமில்லே..."

சாட்டை சுற்றி இழுத்து விடப்பட்ட பம்பரமானாள். ஊட்டியில் இருந்த ஒரு ஐந்து நட்சத்திர ஓட்டலின் பியூட்டி பார்லரில் அதிநவீன ஃபேஷன்களில் ஊறித் திளைக்கும் பணக்கார நங்கையானாள். புதிய தோற்றப் பொலிவுடன் ஃபோட்டோ ஒட்டிய பாஸ்போர்ட், இதாலிய, ஜெர்மானிய விஸாக்கள்



எல்லாம் வந்து சேர்ந்தன. மாயாஜாலம் போல் வெகு துரிதமாகக் காரியங்கள் நடக்க, சுவாமிஜியின் செல்வாக்கு எத்தகையது என்று புரிந்து பிரமித்தான். போக வர விமான டிக்கெட், ஏடு ஏடாக எழுதிய ஒரே புத்தகமாகக் கைக்குக் கிடைத்தது. எந்த எந்த நகரில் எத்தனை நாட்கள், என்ன தேதிகளில், எந்த ஓட்டல், அதன் விலாசம், ஃபோன் நம்பர், ஒவ்வொரு நகருக்கும் விமானம் வரும் நேரம், புறப்படும் நேரம், ஃபிளைட் நெம்பர் முதலிய விவரங்களுடன் பயணத் திட்டம் நகலுடன் வந்து சேர்ந்தது. அமெரிக்கன் எக்ஸ்பிரஸ்காரர்கள் நேரில் வந்து ஒவ்வொரு காசோலையிலும் "சாரதா" என்று கையெழுத்து போடச் செய்து, 'டிராவலர்ஸ் செக்' தந்து, அதே பெயரில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட்டில் குறித்து முத்திரையிட்டனர். பெரிதாக இரண்டு ஸூட்கேஸ்கள் வந்து சேர்ந்தன. அவற்றை நிரப்ப ஒரு கட்டு நூறு ரூபாய் நோட்டு தந்து, ஊட்டியின் ஃபேஷன் கேந்திரங்களில் ஷாப்பிங் போகச் சொன்னார் குருஜி. தவிர ஒரு வேனிடி கேஸ் நிறைய அழகு சாதனங்கள்.

"இத்தனையும் தூக்கிக் கொண்டு நான் ஊர் ஊரா அலையணுமே?"

"நீயா தூக்கப் போறே? ஏரோப்ளேன் தூக்கும். ஏர்போர்ட்ல டிராலியில் வைத்துத் தள்ள போர்ட்டர் உதவப் போறான். செலவாகுமேன்னு கவலைப்படறவங்கதான் இதுக்கெல்லாம் யோசிக்கணும். உனக்கென்ன? ஜெர்மனி போய்ச் சேர்ந்ததும் எவ்வளவு வேணுமோ கேட்டு வாங்கிக்க. குடும்பக் கஷ்டத்தை மற. என்னைக் கூட மறந்துடு. நன்றி உணர்ச்சியால் கட்டுப்பட்டுக் கிடக்காதே. எல்லா இடங்களையும் ஹாய்யா சுற்றிப் பாரு. நீ படிச்சவ. நாலு இடம் போக வர முடியும். பேசி, பழகி புரிஞ்சுக்க முடியும். இங்கிலீஷ் தெரிஞ்சா போதும். எல்லா இடத்திலும் சமாளிக்கலாம்" ஏராள தன்னம்பிக்கை விதைத்தார். முளை விட்டு செழித்து வளர்ந்தது.

சென்னை விமான நிலையத்தில் அவர் பத்திரிகையாளரை சந்தித்து தமது அயல்நாட்டுப் பயணத்தின் நோக்கங்களை விவரிப்பதை எட்ட இருந்து கேட்டு மரியாதை வளர்த்தாள்.

ஃபிராங்ஃபர்ட்டுக்கு ஒன்பது மணி நேரம் என்றாலும் முதல் விமானப் பயணம் என்பதால் அலுப்புத் தட்டாததோடு ஒவ்வொரு வினாடியும் சுவாரஸ்யமாகவே இருந்தது.

அங்கு விமானம் மாறி, வெனிஸ் சேர்ந்து, ஏர்போர்ட் பஸ்ஸில் நகர மையத்தை அடைந்தாள். விசாரித்ததில், தனது ஹோட்டலுக்குப் போக கிராண்ட் கெனாலில் படகு பஸ்ஸில் ஏறினால் பதினாலாவது ஸ்டாப் என்று தெரிய வந்தது.

பஸ் போலவேதான் எதிரும் புதிருமாக இருந்த ஸ்டாப்களில் மாறி மாறி நின்று, பயணிகளை ஏற்றி, இறக்கி விட்டுச் சென்றது விசாலமான படகு. அந்தப் பயணமே வெனிஸின் அழகை முழுமையாகக் காட்டிக் கொடுத்தது. கோண்டோலா படகுகளில் தேன்நிலவுப் பயணிகள் திண்டில் சாய்ந்திருக்க, படகோட்டி காதல் பாட்டுக்களை 'கணீர்' குரலில் நெஞ்சு நெகிழப் பாடி அவர்களை மேலும் நெருங்கி வரச் செய்தான். டாக்ஸி போட்களாக விசைப் படகுகள் பல இருந்தும் நீரில் ஒரு சொட்டு எண்ணெய் மிதக்கவில்லை. ஐம்பதடி தூரத்துக்கு ஒன்றாக அழகிய கலை உணர்வோடு கூடிய பழங்காலத்துப் பாலம் கால்வாயின் இரு கரைகளையும் வில்லாக இணைத்து, நகர மாந்தர் கால்நடையாக இரு பக்கமும் சென்று வர உதவின.

ஓட்டல் அறையில் பெட்டிகள் வைத்து, இலேசாக ஒப்பனை செய்து கொண்டு, பாஸ்போர்ட், டிக்கெட், பணம் ஆகியன அடங்கிய கைப்பையை மட்டும் எடுத்துக் கொண்டு புறப்பட்டு, காலாற நடந்து வந்து, இதோ, இந்த உணவு விடுதியில் ஸ்பகடியுடன் போராடுகிறாள். வாயருகே கொண்டு போனதும் வழுக்கி மறுபடி தட்டு நிரப்பியது! வயிறை அரைகுறையாகத் திருப்திப்படுத்தி, 'போதும்' என்று எழுந்த போது, வெனிஸின் எல்லா விளக்குகளும் ஏற்றப்பட்டு கால்வாய் முழுவதும் மினுக்கும் நட்சத்திரங்கள்! அந்த எழிலில் சொக்கியபோதே, 'இன்பா, எனக்கு துரோகம் செஞ்சே! இப்போ பார், நான் ஐரோப்பா டூர் அடிக்கிறேன்!' என்று பெருமிதமும் பொங்கியது.

ஹோட்டல் அறை திரும்பிய போது விமானப் பயணம்தான் என்றாலும் நேர வித்தியாசம் காரணமாக ரொம்பக் களைப்பாக இருந்தது. நைட்டிக்கு மாற பெட்டி திறந்தாள். கலைந்திருப்பது 'பளிச்'சென்று தெரிந்தது. துணுக்குற்று மற்றொரு பெட்டி திறக்க, அதுவும் வைத்தபடி இல்லாது தாறுமாறாக...

'யார் வந்தார்கள்? என்ன சோதனை இட்டார்கள்? எதற்கு?'

குளிரிலும் வியர்த்தாள். விதிர்விதிர்த்தாள்.

(தொடரும்)

ருத்ரா..ருத்ரா..ருத்ரா

கண்டுபிடிச்சாச்சு.... அத்தனைக்கும் மருந்து... மூப்பு, பிணி, சாக்காடு அனைத்தும் இனி இல்லை. இனி மனிதர் அனைவரும் மார்க்கண்டேயன்தான் என்று நான் குதித்துக் கொண்டிருந்ததை எதிர்க்கூண்டில் இருந்து அல்பினோ முயல் பயந்து போய் பார்த்தது.

பார்... உன்னைச் சிறிது நேரத்தில் கிழ முயலாய்க் காட்ட முடியும். எல்லாம் என்னால் எளிதில். இனி நான்தான் உலகத்தின் இளமைக் கடவுள்.

இங்குபேஷன் சேம்பரில் இருந்த நாய் திடீரென முடி இழந்து, தோல் சுருங்கி, கண்களில் காட்ராக்ட் வந்து மாண்டு போக... பக்கத்தில் இருந்த கிழ நாய் ஜம்மென்று இளமையாய் மாறி நின்றது. வெகு சீக்கிரம் – சில மணி நேரங்களில் இந்த மாயாஜாலம் மொட்டு மலர்வது போல்... சூரியன் உதிப்பது போல் அத்தனையும் ஜாலம்... இனி இயற்கை என் கையில்.

'என்ன இந்த கிழட்டுப் புரொபசர் புலம்பிக் கொண்டிருக்கிறானே' என பார்க்கிறீர்களா... கொஞ்சம் இந்த அறிவியல் என்றால் வயிற்றைப் புரட்டுபவர்கள் அடுத்த பாராவுக்குப் போகலாம். ஏஜிங் என்ற மூப்பு இயல் இருக்கிறது இல்லை? அதில் நான் புரொபசர். மேக்ஸ், சூபனர், ஹோபிளிக் போன்றவர்கள் சித்தாந்தங்களைக் கரைத்துக் குடித்து, குடித்து கிழடு தட்டிப் போனவன். இந்த மூப்பை வெல்ல வேண்டும்; சாகும் வரை இளமையாய் அந்த மார்க்கண்டேயன் போல் வாழ வேண்டும் என்ற வெறி. அதான், ஆராய்ச்சி, ஆராய்ச்சி என இந்த 20-க்கு 60 லேபில் உட்கார்ந்து கடைசியில் கண்டுபிடித்து ஆகிவிட்டது. மூப்பை வெல்லும் ரகசியம். அதாவது நம் உடலில் உள்ள ரத்தத்தில் சூசைடு பிக்மெண்ட்ஸ் என்கிற தற்கொலை நிறமிகள் உள்ளன. அதற்கு எதிராக ஆண்ட்டி நிறமிகள் என்றும் ஒரு வகையுண்டு. குழந்தைகளுக்கு எல்லாம் ஆண்ட்டிதான் அதிகம் இருக்கும். நாளாக நாளாக மாற, ஆண்ட்டி கட்சி மாறி தற்கொலை நிறமியாக மாறும். அவை எவ்வளவுக்கெவ்வளவு தற்கொலை நிறமியாக மாறுகின்றதோ அதன்படி நாம் கிழட்டு முண்டம் ஆகி விடுவோம். ஆனால் நான் இந்த ஆண்ட்டி நிறமி செய்யக் கண்டுபிடித்து விட்டேன். ஆண்ட்டி நிறமி சேர்க்கச் சேர்க்க இளமை வரும்...

இதற்கு முப்பத்தி ஏழு வருடங்கள்...

ஆயாசமாய் இருந்தது. ரொம்ப சந்தோஷப்பட்டு விட்டேன். பிபி. ஏறியிருக்கும். திரும்பிப் பார்த்தால் ருதா வந்து நின்றாள். என் இனிய 22 வயது செகரட்டரி.

"இந்த ரிப்போர்ட் முப்பத்தி நாலில் சின்ன கரெக்ஷன் இருக்கு பாருங்க புரொபசர்."

"என்ன ருதா...?"

"பாருங்க.. யு.ஜி.சிக்கு அனுப்ப வேண்டிய ரிப்போர்ட்டில் ஸ்டேட்மெண்ட் டாலி ஆகலை. உங்களுக்குத்தான் தெரியும்... ஏதாவது இன்ஸ்ட்ருமெண்ட் விட்டுப் போயிடுச்சா...."

"சரி, சரி... பார்க்கறேன்... அது என்ன புது மோதிரமா? நல்ல மாதிரி கல்; நல்ல டிசைனா இருக்கே!" என்று கேட்டதும் இயல்பாய் விரல்களைத் தந்தாள். அந்த ஏசி ரூமிலும் சூடாய் இருந்தாள். என் உள்ளங்கையில் அவள் கைகளைத் தாங்கி வருடி, அந்த விரல்களை நீவிப் பார்த்தேன்.

"வரேன்" என்று வெளியே போன பின்னும் அவள் வாசனை என்னிடம் இன்னும் மிச்சமிருந்தது.

எங்கே போய் விடப் போகிறாள்... இத்தனை வருடங்களில் இங்கே, இந்த லேபில் இரவு பகல் அடைந்து கிடந்து ஒன்றும் இல்லை. கல்யாணம், காட்சி, குழந்தைகள், சினிமா... கோயில் ஏதும் இன்றி லாபின் சின்ன சன்னலின் வழியாகப் பார்க்க... குல்மொஹர் மரங்களின் கீழே ஆராய்ச்சி மாணவர்கள் அரட்டை அடித்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு மரத்தினடியிலும் ஒரு ஜோடி....

ராஜன் ஸ்ரீனிவாஸ்

சரேலென்று ஒரு யமஹா சீறிக் கொண்டே போனது. எல்லாம் இளமை! இந்த இளமை, இந்த நாட்கள், விரைந்தாகி விட்டது. எல்லாம் இழந்து விட்டேன். பாழாய்ப் போன ஆராய்ச்சி... ஆராய்ச்சியின் மேல் வந்த காதலால் அந்தக் காலத்துப் பெண்களை விட்டு விட்டதற்காக இப்பொழுது ஏக்கம் வருகிறது. இந்த ருதா மட்டும் கிடைத்தால்? ஆனால், தலை நரைத்த கிழவனைக் கட்டிக் கொள்ளச் சம்மதிப்பாளா...? சம்மதிப்பாள். அதான் இந்த மார்க்கண்டேய தந்திரம்!

நம் சோதனையை நம் மேலே பிரயோகித்தால் என்ன... எல்லாம் சாத்தியம். அந்த உதவாக்கரை ராவுக்கு கிடைத்த பட்நாகர் விருதை விட எனக்குக் கிடைக்கப் போகும் நோபல் சாத்தியம். இளமை சாத்தியம். இத்தனை வருடங்களில் விட்ட அனைத்தும் சாத்தியம். ருதாவும் சாத்தியம். ருதா என்றதும் மனசுக்குள் உள்ளே வாணவேடிக்கை நடப்பது போல் வர்ணஜாலமாய் இருந்தது. உருவம் மாறினால் இந்த தோல் சுருக்கம் போய் நானும் இளைஞன். சீக்கிரம் போய் ஒலிம்பியாவில் கார்டு அடிக்கக் கொடுத்து விடலாம். ருதா வர்ஸஸ்...

எனக்கு இளமை வந்து விட்டாற் போல் இருந்தது. படபடவென்று காரியங்கள் செய்தேன். முதலில் இந்த ஆண்ட்டி நிறமிகள் சேகரிக்க வேண்டும். ருதா ஓடி வந்து என்னைப் பார்க்கும் பொழுது என் நடுங்கும் விரல்களை கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேன். கொஞ்சம் பொறுமையாக இரு... ருதா உனக்காகத்தான் இருக்கிறாள். ஆண்ட்டி நிறமி தேவையான அளவு சேகரித்து ஆகி விட்டது.

யோசித்து, ஒருநாள் ருதாவை தனியே அழைத்து. "ருதா..."

"என்ன சார், கூப்பிட்டீங்களா?"

"நான் எதுல ஆராய்ச்சி பண்றேன் தெரியுமா...?"

"தெரியும்... மூப்பு பத்தி."

"ஆமாம். இப்போ புதுசா நடத்தப் போகிறேன்... இதுவரைக்கும் மனுஷங்களைப் பத்தி நடத்தல இல்லே?"

"ஆமாம் அப்போ... நான்" என தயங்கினாள்.

"பயப்படாதே... உன்னை ஒன்றும் செய்யப்



வாழைத் தண்டு கூட்டு, மற்றும் பொறியல் செய்யும் பொழுது, அத்துடன் சிறிது முருங்கைக் கீரையும் சேர்த்துச் செய்தால், சுவையும் மணமும் மிகவும் நன்றாக இருக்கும். உடம்புக்கும் மிகவும் நல்லது.

— பா. குணா

போறதில்லை:.. நீதான் எல்லாவற்றினையும் செய்யப் போகிறாய்... அதோ பார்! அதுதான் இங்குபேஷன் சேம்பர். அதில் நான் போய் மூன்று நாள் வரை அதில் உள்ள சிவப்பு திரவத்தில் மூழ்கியிருப்பேன். சாப்பாடு எல்லாம் அந்த டியூப் வழியாகத்தான். தாயின் வயிற்றில் இருக்கும் குழந்தைக்குத் தொப்புள் வழியாக உணவு போகுதுல்லே, அது போல் எனக்கும் போகும்'' என்றதும் ருதா, "நானும் கூட இருக்கணுமா?'' என கேட்டது கிளி சொல்வது போல் இருந்தது.

நான் கிடைத்த சான்சை நழுவ விடாமல் இழுத்து தலையில் தட்டி,

"ஏய் ஸ்வீட் கேர்ல்! இதை ஆப்பரேட் பண்ணப் போறதே நீதான்! மூணு நாளைக்கு பின்னர் அந்த சிவப்பு நிற சுவிட்சை அழுத்தினால் எல்லா திரவமும் வடிந்து விடும். அப்புறம் அந்தப் பக்கமிருந்து ஆக்ஸிஜன் வரும்."

"சரி!"

"புரிஞ்சுதா... புரியலையின்னா நல்லா கேட்டுக் கொள். நோட்ஸ் எடுத்துக் கொள். அப்புறம் முழிக்காதே! நான் உள்ளே இருப்பேன். சொல்லித் தர ஆளிருக்காது."

பல்லால் கடித்துக் கொண்டு குனிந்தவாறே உதடு சுழித்த பொழுது சுழித்த அந்த உதடுகளை முத்தமிட வேண்டும் போல் இருந்தது. இடலாம், இடலாம். பொறு. இன்னும் நான்கே தினங்கள்... இந்த ருதா வைரமுத்து சொன்னது போல் ரத்த ஓட்டம் பாய்கிற தங்கம். இது முழுக்க எனக்கே சொந்தம்.

"எழுதிக் கொள்!"

கொண்டாள்.

"ஆக்ஸிஜன் வந்தவுடனே நீ பார்த்துக் கொண்டே இரு... நான் கைகாட்டிய பின் இந்த பச்சை நிற சுவிட்சை அழுத்து. நான் வெளியே வந்து விடுவேன். வந்து....'' என்று சொல்லி நிறுத்திக் கொண்டேன். வெட்கமா யிருந்தது. கிழட்டு வெட்கம்.

ராகு காலம், எமகண்டம் இல்லாத நாளாய்ப் பார்த்து நான் இங்குபேஷன் சேம்பரில் உட்கார, எல்லாம் நிகழ்ந்தது. ருதா சரியாய் செய்தாள். ரொம்பவும் அக்கறையோடு கவனித்துக் கொண்டாள். எனக்கு களைப்பு இல்லாமல் இருக்க... சேம்பருக்கு வெளியே வீடியோ போட்டாள். வீடியோவில் இசகுபிசகான காட்சிகள் வரும் பொழுது தலையைக் குனிந்து கொண்டாள். 'இரு... இரு...' என சொல்லிக் கொண்டேன்.

மூன்று நாள் கழித்து திரவம் வடிந்து, ஆக்ஸிஜனிலிருந்து தொப்புள் வழியே ஆண்ட்டி நிறமிகள் போக வேண்டும்.

ருதாவைப் பார்த்து கண்சிமிட்டினேன்.

பிரஷர் சார்ஜ் சரி பண்ணி சுவிட்ச் ஆன் பண்ணவும், மாற்றம் நிகழ்ந்தது.

தோல் சுருக்கங்கள் நீங்கி முறைப்பாக தோல் மாற, என் வரட்டுவெள்ளை முடிகள் கருப்பாய் மாற, வழுக்கை விழுந்த இடத்தில் கருப்பு முடிகள் முளைக்க, ஸ்பீல்பெர்க்கின் லாஸ்ட் குருசைடு படத்தில் ஒருவன் எலும்புக் கூடாய் மாறுவானே, அதுபோல் மாறிக் கொண்டிருந்தேன். சும்மாவா? 37 வருடங்கள் பின்நோக்கிப் போய்க் கொண்டிருந்தேன். சேம்பரின் மேல் இருந்த பில்லையில் தெரிந்த எலக்ட்ரானிக்ஸ் நம்பரில் வயது சரசரவென்று மாறிக் கொண்டிருந்தது.

என் மாற்றத்தினை எல்லாம் ருதா ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தாள். எனக்கு மேல் சட்டை இல்லாமல் கூச்சமாய் இருந்தது. 'எல்லாம் உனக்காகத்தான் பெண்ணே' என்று சொன்னேன்.

சேம்பருக்கு வெளியே கேட்டிருக்காது.

சேம்பரின் மேலிருந்த என் வயது

65

62

60

என மாறி மாறி

32

30

28

26.........

நான் ருதாவைப் பார்க்க, அவள் ஆவலோடு என் மாற்றத்தினைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நான் நிறுத்து நிறுத்து என்று சைகை காட்டியதை கவனிக்காமல் சுவாரஸ்யமாய் என்னைப் பார்த்துக் கொண்டிருக்க,

18

16

என்று போய் கடைசியில் 0.6 என்று வரவும், சட்டென்று சுவிட்சை நிறுத்தி என்னைத் தன் கைகளில் எடுத்து முத்தமிட்டு, "இதற்குத் தானே ஆசைப்பட்டீர்கள்? இந்தா இன்னொரு முத்தம்!" என்றாள். பின் என் கன்னத்தினைத் தட்டி, "சாயங்காலம் வீட்டுக்குப் போகும் பொழுது அரசாங்கத் தொட்டிலில் போட்டு விட்டுப் போயிடறேன். சரியா? சமத்தா இருக்கணும்'' என்றதும், நான் புரியாமல் மழலையில் அழ ஆரம்பித்தேன்.

மும்பாய் நொறுக்ஸ்

● கொஞ்ச நாளாக பம்பாயில் லோக்கல் ரயில்கள் குறித்த நேரத்துக்குச் சரியாக வருவதில்லை. அலுவலக அவசரத்தில் தவித்துக் கொண்டிருக்கும் பயணிகளுக்கு இது பொறுக்கவில்லை. புகார் கொடுத்தும் பயனில்லை. சில விஷமிகள் இதனால் பொறுமை இழந்து, ரயில் நிலையத்திலுள்ள ஷோ-கேஸ் கண்ணாடிகள், சிக்னல்களை அடித்து, உடைத்து நொறுக்கினர். 'சரியான பாடம் புகட்டியாகி விட்டது; இனி ரயில்கள் ஒழுங்காக வரும்' என்று காத்திருந்தவர்களுக்கு ஒலிபெருக்கியில் வந்த அறிவிப்பு சரியான ஆன்ட்டி-கிளைமாக்ஸாகிவிட்டது! ''சிக்னல்கள் சேதப்படுத்தப்பட்டு விட்டதால் ரயில்கள் தாமதமாகத்தான் வரும்; சில ரயில்கள் வரவே வராது!''

- லட்சுமிசுந்தரம், டோம்பிவிலி.

● சென்னையில் இரு சக்கர வாகனங்களை, முக்கியமான இடங்களில் 'பார்க்' செய்வதில் எப்போதும் சிக்கல்; நெருக்கடிதான். ஆனால் பம்பாயில் இதற்கொரு புதுமையான வழி கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பிரதான சாலைகளில் ஆங்காங்கே உள்ள ரவுண்டானாக்களில் உள்ள புற்களைச் செதுக்கி, தார் போட்டு, இரு சக்கர வாகனங்களை நிறுத்த அனுமதித்திருக்கிறார்கள். அதற்கு அனுமதிச் சீட்டு வழங்குவதுடன், வாகனங்களைப் பாதுகாக்க, ஆங்காங்கே ஆட்களையும் நியமித்திருக்கிறார்கள்.

ரவண்டானாவுக்குள்ளேயே ஓர் ஓரத்தில் மட்டும் சின்ன புல்வெளி அமைத்து, அந்த இடத்தை ஸ்பான்சர் செய்யும் நிறுவனத்தின் பெயரையும் செதுக்கி வைக்கிறார்கள்.

சென்னையிலும் இப்படிச் செய்தால், நடை, நேரம், மனக்கவலை, டென்ஷன் தீருவதோடு, சில இளைஞர்களுக்காவது வேலை கிடைத்த மாதிரியும் இருக்குமே! செய்வார்களா?

- சுதா ரமேஷ், பம்பாய் - 5.

● நாலைந்து சிட்டிகை பீடிப் புகையிலையுடன் ஒரு சிட்டிகை சுண்ணாம்பையும் சேர்த்து உள்ளங்கையில் வைத்துக் கசக்கி, உதட்டுக்கு அடியில் வைத்துக் கொள்வது மராட்டியர்களின் பழக்கம். இப்படிப் புகையிலை மெல்லுபவர்கள், பொது இடங்களில், பஸ்களில் - பக்கத்தில் இருப்பவர்கள் பற்றியெல்லாம் கவலைப்படாமல் கண்ட இடங்களில் புளிச்புளிச்சென்று துப்பிக் கொண்டே இருப்பார்கள்.

இந்தப் பழக்கம், சாதாரண சாமானிய மக்களிடம் மட்டுமில்லை; பெரிய பதவிகளில் இருக்கும் 'டை' கட்டும் ஆசாமிகளிடமும் உண்டு.

அடுத்தவருக்கு அருவருப்பாக இருப்பது

பெயர்மாறும்

ஒரு பக்கம் இருக்கட்டும்; பொது இடங்களை இப்படி அசிங்கப்படுத்துவது தவறு என்று ஏன் இவர்களுக்குத் தோன்றுவதில்லை என்பதுதான் வேதனையான விஷயம்.





● 'VT'யிலிருந்து விரைந்து பறக்கும்
மனிதரைப் பார்த்து,
நகைத்து, நடந்து போகும்
பம்பாய் புறாக்கள்.
- ஜே.பி. அன்புசிவம், டோம்பிவிலி (மேற்கு)

பெண்கள்!


● சாதாரணமாக எல்லோருக்கும் பெற்றோர் இடும் பெயர்கள்தான் கடைசி வரை இருக்கும். பெண்களுக்கு மட்டும் திருமணமானவுடன் இனிஷியல் மட்டும் மாறும். இது வழக்கம். ஆனால் மராட்டியப் பெண்களுக்குத் திருமண மானால் இனிஷியல் மட்டுமல்ல; பெயரே மாறிவிடும்.

உதாரணமாக ஒரு பெண்ணுக்குப் பூர்ணிமா என்று பெயர் இருக்கு மானால், திருமணமான வுடன் அந்தப் பெயரை மாற்றி, தங்கள் விருப் பப்படி கமலா என்றோ சாரதா என்றோ மாற்றி விடுவார்கள், பிள்ளை வீட்டார்! இது இங்கே ஒரு மரபாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது!


- சேரை. முத்துமணாளன், பம்பாய் - 71.

*மும்பாய் துணுக்குகள் இந்த இத ழுடன் நிறைவடைகின்றன. தமது மிகச் சிறந்த 'அப்ஸர்வேஷ'னுக்காக ரூ. 100/- சிறப்புப் பரிசு பெறுபவர் : **ஜே.பி. அன்பு சிவம், டோம்பிவிலி ('VTயிலிருந்து...')***

● "அந்த இடதுகைப் பந்து வீச்சாளர் மட்டும் தனியா ஒரு பந்தை உபயோகிக்க லாம்; மற்ற பௌலர்ஸ் எச்சில் தடவிய பந்தை இவர் வீச வேணாம்னு அம்பயர் சொல்லிட்டாரே, ஏன்?"
"அவர் ஆர்த்தோடாக்ஸ் ஸ்பின்னராச்சே!"



● "அந்த லெக் பிரேக் பௌலர் இந்த மாட்சில் மட்டும் நாலு பேட்ஸ்மென் கையை உடைச்சிருக்காரு!"
"அப்ப ஹாண்ட் பிரேக் பௌலர்னு சொல்லு!"



● "அந்த எம்.எல்.ஏ.வோட கால்களை ஏன் கட்டிப் போட்டு வெச்சிருக்காங்க?"
"அவர் கட்சி தாவப் போறதா நியூஸ் வந்தி ருக்காம்!"

- என். கே. சந்திரசேகர், பம்பாய் - 51.



பாலம்

1950 வாக்கில் என்னால் எழுதப் பெற்ற பின் வரும் நூல்களை எனக்கு அனுப்பி வைப்போருக்கு சன்மானம் தரத் தயாராக உள்ளேன். மறு பதிப்பு வெளியிடத் தேவைப்படுகிறது. 1. துன்பத் தேனீ, 2. மேடம் பவார்.

— **எஸ்.எஸ். மாரிசாமி,**
3, முதல் பிரதான சாலை,
ஷெனாய் நகர் கிழக்கு, சென்னை - 30.

சென்னை கடற்கரையில் பதினைந்து ஆண்டுகளாக "சிலம்பொலி இறந்வெளி கவியரங்கம்" நடைபெற்று வருகிறது. இதன் இயக்கத்தில் உதவ, மாதத்தின் சில நாட்கள் பகுதி நேரம் பணியாற்ற ஆர்வமுள்ள கவிஞர்கள் அணுகவும். சன்மானம் உண்டு.

— **கவிஞர் மங்களம் இளம்பரிதி,**
61, வெள்ளாளத் தெரு, அயன்புரம்,
சென்னை - 23.

பின் வரும் புத்தகங்கள் தேவை. வைத்திருப்பவர்கள் விலை குறிப்பிட்டு எழுதவும். 1. மணிக்கொடி காலம் - பி.எஸ். ராமையா, 2. பண்டைய இந்தியா - அதன் கலாசாரம் பற்றிய வரலாறு - எஸ்.ஆர்.என். சத்யா, 3. நடந்தாய் வாழி, காவேரி -தி. ஜானகிராமன்; சிட்டி, 4. வீட்டின் மூலையில் சமையலறை - அம்பை.

— **ஜி. சந்தானம்,**
96, கற்பகம் நகர், சேலையூர் போஸ்ட்,
சென்னை - 73.

நான் புதிதாக ஏற்றுமதி நிறுவனம் தொடங்கியுள்ளேன். அயல் நாடுகளில் உறவினர்கள், நண்பர்களை உடைய, ஏற்றுமதியில் ஆர்வமுள்ள நபர்களின் நட்புறவை வேண்டுகிறேன்.

— **ஆர். கனகராஜன்,**
12, இன்கம்டாக்ஸ் லைன்,
நாலாவது தெரு, தெற்கு செக்டார்,
ஆதம்பாக்கம் (அ), சென்னை - 88.

மகாகவி பாரதியாரைப் பற்றி உ.வே. சுவாமிநாதய்யர் எழுதிய கட்டுரை அவருடைய நூல் தொகுதி ஒன்றில் இருப்பதாக அறிகிறேன். அந்தக் கட்டுரையை மட்டும் ஜெராக்ஸ் எடுத்து அனுப்ப இயலுமா?

— **வித்யா தேவராஜன்,**
J.H.2, ஜவஹர் ஹாஸ்டல்,
வட்டம் 17, நெய்வேலி - 607 801.

வியாபார சம்பந்தமான அரசாங்கக் கணக்குகள் எழுதி ஸ்டேட்மெண்ட் போடுவதில் இருபது வருட அனுபவம் உண்டு. என்னைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் வியாபார நிறுவனங்கள் தொடர்பு கொள்க.

— **சையத் முர்துஸா,**
94, காஜா தோப்பு (மாடி),
திருச்சி - 17.

1974ம் ஆண்டு எம்.என். ராமசாமி அய்யர் நினைவு அறக்கட்டளை உதவியுடன் வெளியிடப் பெற்ற ஸ்ரீமத் பாகவதம் தேவை. தேவநாகரி ஸ்லோகங்கள், பதவுரை ஆகியவற்றுடன் நூறு பகுதிகளாகப் பிரகரமான 12 ஸ்கந்தங்கள். விலை விவரத்துடன் எழுதவும்.

— **கே. நாராயணன்,**
D-36, தங்கமணி தெரு, திருநகர்,
மதுரை - 625 006.

Hyper active behaviour மற்றும் Mild autism உள்ள எனது ஐந்து வயது மகன் சேர்ந்து படிக்க Special School தேடுகிறேன். பள்ளி நிர்வாகத்தினரோ, பெற்றோரோ, தொடர்பு கொண்டு உதவவும்.

— **இளங்கோவன்,**
12, முதல் சந்து, ஆழ்வார்பேட்டை தெரு,
சென்னை - 18.

Power in Temples என்ற கோயில்கள் அமைப்பு பற்றிய விஞ்ஞான நூல் தேவைப்படுகிறது. ஆசிரியர் : ஸ்ரீகாந்த்.

— **வி. ரகுராமன்,**
2, எல்.ஐ.ஸி. காலனி,
சுப்பிரமணியபுரம், கோவை - 2.

பவர் அண்டு பவர்ஸ் சமூக சேவை மையம் மூலம் இலவச மருத்துவ முகாம்கள், போதை ஒழிப்பு சிகிச்சை நடத்தி வருகிறோம். மருத்துவ வசதி இல்லாத கிராமங்களுக்குச் சென்று பணியாற்ற எங்கள் டாக்டர்கள் சித்தமாய் இருக்கிறார்கள். தேவைப்படுவோர் தொடர்பு கொள்க.


— **டாக்டர் கே. சந்திரா,**
162, வன்னியர் தெரு,
சூளைமேடு, சென்னை - 94.

அமரர் கல்கி அவர்களால் எழுதப் பெற்று நூல் வடிவம் பெற்ற பின்வரும் புத்தகங்கள் மறுபதிப்புக்குத் தேவைப்படுகின்றன. 1. பாரதி பிறந்தார், 2. நம் தந்தையர் செய்த விந்தைகள், 3. பாங்கர் விநாயகராவ், 4. யார் இந்த மனிதர்கள்? அனுப்பி உதவினால் சன்மானமும் மறுபதிப்பு நூலும் உண்டு.

— **சீதாலக்ஷ்மி பதிப்பகம்,**
1, ஐந்தாவது தெரு,
ஏரிவட்டம், சென்னை - 34.

(பாலம் பகுதி மூலம் தொடர்பு கொள்ளும் வாசகர்களின் வெற்றி - தோல்விகளுக்கு கல்கி நிறுவனம் பொறுப்பு ஏற்க இயலாது. — ஆர்.)

MANJU 022





1995 நவம்பர் 12
யுவ ஐப்பசி 26
மலர் : 54
இதழ் : 15

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.



வறுமை ஒழிப்பா? வரிப்பணச் சுரண்டலா?


இந்த மழை சீசனில் ஏரி, ஆறுகளிலிருந்து கிளம்பும் வெள்ளத்துக்குப் போட்டியாக, மத்திய அரசாங்கத்தின் கருணை வெள்ளமும் சுழித்துக் கொண்டு ஓடுகிறது.

ஏழைகளுக்கு ஆண்டுதோறும் பதினைந்து லட்சம் வீடுகள் கட்டித் தருவோம்; இந்தியா முழுவதிலும் பள்ளிக் குழந்தைகளுக்கு மதிய உணவு அளிப்போம்; அதற்கு ஆயிரம் கோடி ரூபாய் செலவழிப்போம்;

கிராமப்புறத்தில் ஏழைமை ஒழிப்புத் திட்டங்களுக்கு, வங்கிகளும் நிதி நிறுவனங்களும் 4200 கோடி ரூபாய் பணத்தை நேரடியாக ஒதுக்கித் தர உத்தரவிடுவோம்....

என்றெல்லாம் நாளொரு அறிவிப்பும் பொழுதொரு உத்தரவும் தேர்தல் சீசனில் பிரவாகம் எடுத்துக் கொண்டிருக்கின்றன.

ஆட்சிக்கு வந்த புதிதில், புதிய பொருளாதாரக் கொள்கையின் பயனைக் கடைநிலை இந்தியன் வரை அனைவருமே அனுபவிப்பார்கள் என்று அடித்து சத்தியம் செய்தது மத்திய அரசு.



சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவுகள், இலவசங்கள், மானியங்கள் போன்றவற்றை முரட்டுத் தனமாகக் குறைத்துத் தள்ளியது.

இன்று அதே மத்திய அரசு அந்தர்பல்டி அடித்து, மீண்டும் இலவசங்களை வாரி வழங்கத் தயாராகியிருக்கிறது. அரசியல் நிர்ப்பந்தங்களுக்காகத் தாம் மாற வேண்டியுள்ளது என்று கூறி மன்மோகன் சிங்கும் ஜகா வாங்கி விட்டார்.


இந்த 'கருணை' வெள்ளத்தில், புதிய பொருளாதாரக் கொள்கையினால் ஏற்பட்ட கொஞ்ச நஞ்சம் முன்னேற்றமும் அடித்துக் கொண்டு செல்லப்பட்டு விடும் என்பது நிச்சயம்.

மற்றொரு சோகம் : இந்தக் 'கருணை' திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதி, சத்தியமாக உரியவர்களுக்குப் போய்ச் சேர்ந்து பலனளிக்கப் போவதில்லை.

இலவசங்கள், மானியங்கள், திரும்பப் பெறாத வங்கிக் 'கடன்'கள் போன்ற வோட்டு உத்தரவாதத் திட்டங்களை அறிமுகப்படுத்தியவர் இந்திரா காந்தி. ராஜீவ் காந்தி பிரதமரான போது, இத்தகைய திட்டங்களுக்கு ஒதுக்கீடு ஆகும் பணத்தில் பதினைந்து சதவிகிதம் கூட மக்களைச் சென்றடைவதில்லை என்று ஒப்புதல் வாக்குமூலமே கொடுத்திருக்கிறார்.

அவர் காலத்துக்குப் பிறகு அரசியல் எவ்வளவோ முன்னேறி விட்டது! இன்றைய அபரிமித ஊழல் சூழலில், அரை சதவிகிதம் தொகையாவது மக்களைச் சென்றடைந்தாலே ஆச்சரியம்தான்.

லஞ்ச-ஊழல் முன்னேறி விட்டதைப் போல் அந்த எளிய மக்கள் முன்னேறிவிடவில்லை. அவர்கள் முன்னெப்போதும் போலவே ஏழைமையிலும் அறியாமையிலும் உழன்று, தங்களுக்காக இந்த அரசாங்கம் தோலைச் செருப்பாய்த் தைத்துப் போடுகிறது என்று நம்பிக் கொண்டுதான் வாக்குச்சாவடிக்குள் நுழைகிறார்கள்.



ஏழை மக்களை இவ்வாறு ஏமாற்றுவது சுலபம். ஆனால் அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என்பது கடினமான காரியம்.

இந்த முன்னேற்றத்தை உண்மையிலேயே விரும்பும் ஓர் அரசாங்கம், கிராமப் பகுதிகளில் தொழில் அபிவிருத்திக்கும் வேலை வாய்ப்புப் பெருக்கத்துக்கும் முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

விவசாயம் சார்ந்த தொழில்களை ஆரம்பிக்க ஊக்குவித்து, அதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை அதிகரிக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதன் மூலம்தான் எளிய கிராம மக்களுக்கு ஆண்டு முழுவதும் வேலையும் சம்பளமும் கிடைத்து, அவர்கள் வாழ்க்கைத் தரமும் உயரும். கூடவே, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெரிய அளவில் உதவியதாகும்.

ஆனால் இதையெல்லாம் செயல்படுத்துவதற்கு, தேர்தலையும் வோட்டுகளையும் கடந்த சுயநலமற்ற தீர்க்கதரிசனம் தேவை.

இலவசங்களைக் கொடுத்து, சுலபமாக வோட்டுக்களைப் பெறுவது என்று ஆரம்பித்த அரசியல்வாதிகள், நலத் திட்டங்களுக்கென ஒதுக்கிய நிதியிலிருந்து கணிசமாக வளைத்துப் போட்டுக் கொண்டு கொழிக்க முடியும் என்றும் கண்டுகொண்டு விட்டார்கள்.

இப்படி இரட்டை லாபம் தரும் காமதேனுவை அவர்கள் கைவிட முன்வருவார்களா என்ன...?





‘கோவாலு’

இப்படி நீட்டி முழக்கி கிராமங்களில் அழைக்கிற வழக்கம் உண்டு. ‘கோபால்’ என்கிற பெயர்தான் கொஞ்சம் வால் முளைத்து– சுயிங்கம் மாதிரி நீண்டு கோவாலு என்றானது. அதே மாதிரி ‘கோபால்’ குடியிருக்கும் ஊர்தான் கோவலூர் ஆகி, ‘திருக்கண்டேன்’ என்று ஆழ்வார் பாடிய வண்ணம் திருக்கோவலூர் ஆகி விட்டது.

ஆன்மாக்களாகிய ‘ஆ’– பசுவை மேய்க்கும் ஆயனாக அவன் விளங்குவதால் திருக்கோவலூரில் உள்ள உற்சவர் திருப்பெயரே ஆயனார் என்று ஆனது. நமது சரீரம் ஒன்பது துவாரங்கள் உடையது. "ஓட்டை வீடு ஒன்பது வாசல்" என்பது பழமொழி. கண்ணன் கையில் ஏந்தும் புல்லாங்குழலும் ஒன்பது துவாரம் உடையது. அரிய இசை எழுப்பும் அற்புதக் கருவி புல்லாங்குழல். இறைவனுக்கு உரியது. அரிய நாதம் விளங்கும் சரீரமே புல்லாங்குழல். அது இறைவனுக்கே உரியது. அந்தக் கோபாலன் குடியிருக்கும் அருமைத் திருத்தலம் திருக்கோவலூர்.

பெண்ணையாற்றங்கரையில் குடியிருந்து, அருள் பாலிக்கும் ஈசன் இவன் என்பதை,

‘துஞ்சா நீர் வளம் சுரக்கும் பெண்ணைத்
தென்பால்’

என்று பாடியருளினார் திருமங்கை ஆழ்வார். அதுமட்டுமல்ல.. உலகமே வாழ ஓலித்தூய்மை செய்யும் "சீரேறு மறையானர் நிறைந்த செல்வத் திருக்கோவலூர்" என்றுபாடி, செல்வம் என்பது வேத ஒலியே என்றும் விளக்கி அருளினார்.

கண்ணன் எம்பெருமானுக்கு உகந்த, பஞ்ச கிருஷ்ணாரண்ய க்ஷேத்திரங்களில் ஒன்றாக இவ்வூர் போற்றப்படுகிறது. மூலமூர்த்தி திரிவிக்ரமன் என்ற திருப்பெயரோடு ஓங்கி உலகளந்த உத்தமனாக இடது காலை ஊன்றி வலது காலை உயர்த்தி நடந்த கோலத்தில் காட்சி தருகிறார். கிழக்கு நோக்கிய திருமுக மண்டலம். எல்லாத் தலங்களிலும் எம்பெருமான் இடக்கரத்தில் இருக்கும் பாஞ்சசன்யம் என்கிற சங்கம் வலது கையிலும், வலக்கையில் வழக்கமாய் விளங்கும் சக்கரம் இடக்கையிலுமாக இடமாறாட்டம் பெற்றது இவ்வூர் சிறப்பு.

மகாபலி மன்னரிடம் வாமனனாக (குள்ளனாக) வந்து மூன்றடி மண் கேட்டான் நாராயணன். மன்னன் எடுத்துக் கொள்ளும்படி வேண்டியபின் ஓரடியால் உலகை அளந்து, ஈரடியால் விண்ணை அளந்தான் நெடுமால். அப்போது "இன்னும் ஓரடி எங்கே" என்கிற கேள்வி எழுப்பும் நிலையில் அவனது ஒருவிரல் நீண்டது. அந்தக் காட்சியில்





பொன்மேனி கண்டோம்!

இங்குப் பெருமாள் சேவை சாதிக்கிறார்.

மேலும் பெருமாள் அருகிலேயே பெரிய பிராட்டியாகிய மகாலக்ஷ்மி, மூன்றடி தருவதாக வாக்களித்து முடியாமல் போனதால் முடிதாழ்த்தி தன்னைத்தந்த மகாபலி சக்ரவர்த்தி, அசுரர் குரு சுக்கிராச்சாரியார், மிருகண்டு முனிவர், முனிவரின் முதல் மனைவி, முதல் ஆழ்வார்கள் என போற்றப்படும் பொய்கையார், பூதத்தார், பேயாழ்வார் ஆகியோர் சூழ்ந்து நிற்கின்றனர். பெருமாளின் இடது திருவடியை மகாபலியின் மகன் நமுசி வணங்க, வலது திருவடியை நான்முகன் ஆராதிக்க காட்சி தருகிறார் திருக்கோவலூர் திருமால். மூல மூர்த்தியின் திருமேனி மரத்தால் செய்யப் பெற்றது. தாயார் பெயர் பூங்கோவல் நாச்சியார். உற்சவர் புஷ்பவல்லி நாச்சியார்.

பொதுவாகச் சிவாலயங்களில், வடக்குப் பிரகார கோஷ்டம் எனப்படும் மாடங்களில், விஷ்ணு துர்க்கை பூசிக்கப் படுவது வழக்கம். ஆனால் பெருமாள் திருக்கோவில்களில் அப்படிக் காண்பது கடினம். அப்படியே இருப்பினும் அவள் சிறப்பிக்கப்படுவது அரிது. ஆனால் இங்கு கருவறைக்கு அருகில் துர்க்கை இடம் பெற்றதோடு, திருமங்கை ஆழ்வார் திருநெடுந்தாண்டகத்தில் இடம் பிடித்து 'கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட' என்று துர்க்கை வரலாறு படைக்கிறாள்.

திருக்கோவலூர் இறையுணர்வுத் தலத்தோடு இலக்கியக் களமும் கூட. கடை ஏழு வள்ளல்களில் ஒருவரான மலையமான் திருமுடிக் காரி, சைவ நெறி நின்ற மெய்ப்பொருள் நாயனார், சுந்தர மூர்த்தி சுவாமிகளை விரும்பி வளர்த்த நரசிங்க முனையரையர் ஆண்ட ஊர் இது. இலக்கியத் தொடர்பும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க இனிய ஊர் திருக்கோவலூர்.

பாரி வள்ளல் பெற்ற பெண் மக்கள் இருவர் அங்கவை, சங்கவை. பாரியின் மரணத்திற்குப் பிறகு மூவேந்தர்கள் எதிர்க்கக் கூடும் என்று அஞ்சி எவரும் அப்பெண்டிரை மணக்க முன்வரவில்லை. கபிலர் என்னும் பெரும்புலவர், பாரியின் உற்ற நண்பர். அவர் முயற்சியால் தெய்வீகன் என்ற அரசன் மணம் புரிந்தான். அவன் ஆண்ட ஊர் திருக்கோவலூர். பாரி மகளிர் மணம் முடித்த பின்பு கபிலர் இங்குள்ள பாறை ஒன்றில் தீ வளர்த்துப் பாய்ந்தார் என்றும் அக்கல்லே கபிலக் கல் என்பதும் குறிப்பிடத்தக்க செய்திகள். ஆண்டுதோறும் கபிலர் நினைவாகக் கபிலர் விழா இங்கு நடைபெறுவது பாராட்டத்தக்க செய்தி.

இத்தனை இலக்கியப் பின்னணி மிக்க திருக்கோவலூர் ஆயனாரை, திரிவிக்ரமனை ஊனக் கண் கொண்டு கும்பிட்டால் போதாது. ஆழ்வார்கள் ஞானக் கண் கொண்டும் சேவிப்பது அவசியம். திருக்கோவலூர் திருக்கோவிலுள் வந்த திருமங்கை ஆழ்வாருக்கு அது திருக்கோவலூராகத் தெரியவில்லை. ஆயர் பாடியாக,

சுகி சிவம்

நந்த கோகுலமாக– அதிலும் யசோதைப் பிராட்டியின் வீட்டு முற்றமாகத் தெரிகிறது.

அங்கு திரிவிக்ரமனாகத் திருவடி தூக்கி உலகளந்த 'சர்வேசர் ஸ்வாமி'யாகத் தெரியவில்லை! 'சர்வேஸ்வர ஸ்வாமியாக'வும் தெரியவில்லை. யசோதை வீட்டு உரலில் வெண்ணெய் திருடிய குற்றத்திற்காகக் கட்டப்பட்டிருக்கும் கள்ளக் கிருஷ்ணனாகத் தெரிகிறது. குண்டு குண்டு என்றிருக்கும் யானைக் குட்டியைக் கட்டிப் போட்ட மாதிரி கொழு கொழு என்றிருக்கும் குட்டிக் கிருஷ்ணனைக் கட்டிப் போட்டிருப்பது அவர் கவிதைக் கண்ணுக்கு மட்டும் கட்டுப் பட்டது. 'உம்–உம்' என்று மூக்கை உறிஞ்சிக் கொண்டு, அம்மா சிரமப்பட்டு அடைத்து வைத்திருக்கும் பாச வெள்ளத்தை உடைத்துப் பார்க்கும் திருட்டுத்தனம் புலப்பட்டது. மாட்டிக் கொண்டோமே என்பதற்கு அஞ்சாமல், அழுகைதான் விடுதலைக்கான அஸ்திரம் என்கிற மந்த தந்திரம் அவருக்கு மட்டும் புரிகிறது. என்ன அழகான படப்பிடிப்பு பாருங்கள்!

"உறியார்ந்த வெண்ணெய்
ஒளியால் சென்று அங்கு
உண்டானைக் கண்டு ஆய்ச்சி
உரலோடு ஆர்க்க
தறியார்ந்த கருங்களிறே போல்
நின்று
தடங்கண்கள் பனிமல்கும்
தன்மையானை"

என்று திருக்கோவலூர் இறைவனை அனுபவிக்கிறார் திருமங்கை ஆழ்வார். திருக்



"தன்னம்பிக்கைக்கு இலக்கணமே நம்ம தலைவர்தான்னு எதை வச்சு சொல்றே?"

"பஞ்சாயத்துத் தேர்தல் அறிவிச்ச மறுநாளே ஊருக்கு வடக்கே ரெண்டு ஏக்கர் நிலத்தை விலை பேசி அட்வான்ஸ் கொடுத்துட்டார்னா பார்த்துக்கோயேன்!"

– நாகலை இளவல்

கோவிலுக்குச் செல்லும் பொழுது உடம்பு, உள்ளம், உயிர் மூன்றும் வழிபாட்டில் பங்கேற்க வேண்டும். தொழுதல், வலம் வருதல், விழுந்து எழுதல் இவையெல்லாம் உடம்பால் நிகழ்த்தும் வழிபாடு. ஆழ்வார்களும் நாயன்மார்களும் பாடிப்பாடி எப்படி அனுபவித்தார்களோ அதை நினைத்து நினைத்து அவர்கள் மனோநிலையை எட்டி வணங்குவது உள்ளத்தால் நிகழ்த்தும் வழிபாடு. உயிரின் கடைசிப் புகலிடம் என்று கரைந்து உருகுவது உயிர் வழிபாடு.

திருமாலியத்தில் முதல் ஆழ்வார்கள் எனப் போற்றப்படும் மூவர் பொய்கையார், பூதத்தார், பேயார், முறையே திருமாலின் சங்கு, கதை, வாள் இவ்வாழ்வார்களாக, செவ்வாய், புதன், வியாழன் கிழமைகளில், வளர்பிறை அட்டமி, நவமி, தசமி திதிகளில், திருவோணம் அவிட்டம், சதயம் நட்சத்திரங்களில் அவதரித்து அருள் சுரந்தனர். மூவரும் ஒருவரை ஒருவர் அறியாது சந்தித்த திருத்தலம் திருக்கோவலூர்.

வானம் கறுத்த மழைநாள் இரவில் திருக்கோவலூர் பெருமானைத் தரிசனம் பண்ணிவிட்டு வந்து ஒரு வீட்டு இடைகழியில் (வீட்டுக்கும் ரோட்டுக்கும் இடையுள்ள காலியிடம்) கால் நீட்டிப் படுத்தார் பொய்கையார். கொஞ்ச நேரத்தில் அதே இடைகழியில் மழைக்கு ஒதுங்கினார் பூதத்தார். சட்டென்று படுக்கைவிட்டு எழுந்து இருந்து இடம் கொடுத்தார். 'ஒருவர் படுக்கலாம். அதைவிட இருவர் இருக்கலாம்' என்று முடிவானது. அந்த முடிவை மறுபரிசீலனை செய்ய வைத்தது மூன்றாம் நபரின் வரவு. பேயாழ்வாரையும் மழை அதே திண்ணைக்குக் கொண்டு சேர்த்தது! இது மழையின் லீலையா? மழை வண்ணன் லீலையா... தெரியவில்லை. இருவர் இருக்கலாம் என்ற நிலை மாறி மூவர் நிற்கலாம் என்று முடிவானது. விட்டுக் கொடுப்பதல்லவா வைணவ லட்சணம்? நெருக்கிய படி மூவர் நிற்க, நடுவே நாலாம் நபர் நுழைந்த மாதிரி தெரிந்தது! நுழைந்தவர், மூவரையும் சேர்த்து நெருக்குவதும் புரிந்தது. இருட்டில் நுழைந்த திருட்டுப் பயல் யார் என்று பார்க்க ஒரு கை விளக்கு இருந்தால் நல்லது என்றெண்ணினார்கள். கை விளக்கு இல்லாவிடினும் கவி விளக்கு ஏற்றுவோம் என்று நினைத்து பொய்கையார் பாடினார்.

'வையம் தகளியாய் வார்கடலே நெய்யாய்
வெய்ய கதிரோன் விளக்காய்'

என்றார். உலகமே அகல் விளக்கு. கடலே அதில் நெய். சூரிய ஜோதியே தீபம் என்று ஏற்றினார். நெருக்குவது யார் என்று விடிந்தால் புரியும் என்பது அதன் பொருள் போலும். வெளி விளக்கை விட உள் விளக்கே உத்தமம் என்று பூதத்தாழ்வார்,

'அன்பே தகளியாய் ஆர்வமே நெய்யாய்
இன்புருகு சிந்தை இடுதிரியாய்'

என்று, சிந்தையைத் திரியாக்கி ஆர்வ நெய்யிட்டு அன்பு விளக்கேற்றினார். உடனே பேயாழ்வார் 'ஆஹா... இவன் திருமால் அல்லவா' என்று கண்டு பிடித்து,

'திருக் கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன்'

என்று மகிழ்ந்து போனார். 'மகாலட்சுமியைக் கண்டேன். திருமால் பொன்மேனி கண்டேன். அவன் அழகு நிறம் கண்டேன்' என்று கூவினார். இருட்டோடு இருட்டாக முதலாழ்வார் மூவர் திருமேனியும் ஒருங்கு தீண்டும் ஆர்வத்துடன் திருமால் நெருக்கினார். இருட்டுக் கறுப்பில் திருட்டுக் கறுப்பும் சேர்ந்ததால் யார் எனத் தெரியவில்லை. விளக்கேற்றிய பின் தப்ப முடியாதபடி அவன் மார்பில் மின்னும் மகாலக்ஷ்மி காட்டிக் கொடுத்து விட்டாள். கறுப்புத் திருமால் தப்ப முடியாதபடி விளக்கு வெளிச்சத்தில் தாயார் மகாலக்ஷ்மி மின்னினாள். அவள் பொன் ஒளி உடையவள். விளக்கேற்றியதும் பொன் 'டால்' அடித்துக் காட்டிக் கொடுத்து விட்டது. அதுசரி, திருமால்மேனி கறுப்பு... அதை ஆழ்வார் பொன்மேனி என்றாரே, எப்படி?

மகாலட்சுமியின் பொன் ஒளிபட்டு இரவல் ஒளியில் அதுவும் பொன்மேனியாயிற்று. பிறகு பெருமாளின் ஒரிஜினல் கறுப்பு நிறமும் (அணி நிறமும்) தெரிந்து விட்டது. அதன் பிறகு ஆழ்வாருக்குப் பெருமாளின் போர் புரியும் பொன்னாழி (சக்கரம்), சங்கு எல்லாமே தெரிந்து விட்டது. மூவரும் கூடி மொழி விளக்கேற்றிய கோவலூர் நெடுமாலை இது:

'திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் திகழும்
அருக்கன் அணிநிறமும் கண்டேன் — செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கம் கைக்கண்டேன்
என்னாழி வண்ணன்பால் இன்று'



- அ. நந்தகுமார், எஸ். ராஜேந்திரன், இரா. திலீப்

மலருக்கு மகுடம்!

● பிரமிப்பாக இருக்கிறது. ஒரு தீபாவளி மலர் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு அற்புத உதாரணமாகத் திகழ்கிறது கல்கி தீபாவளி மலர்!

மயிலாடுதுறை. சின்னஞ்சிறுகோபு.

● ம.செ.வின் அசத்தலான அட்டைப்படமும் கபி. சிவத்தின் அதற்கான விளக்கமும் மலருக்கு மணி மகுடமாய்த் திகழ்ந்தன. பாதுகாக்க வேண்டிய கலைப் பெட்டகம்.

விசலூர் -1. ஜி.ஜி. கிருஷ்ணன்.

● நடைமுறைக்கேற்ற அரசியல் கார்ட்டூன் சூப்பர்! பொம்மி செய்த பொம்மை குழந்தைக் கவிதை அழகு! மங்களகிரி மகிமை - எழிலூட்டும் படங்கள் ஏ ஒன்! கலாசாமியின் ஜோக்ஸ் அத்தனையும் வெடிச் சிரிப்பு! தீபாவளி மலர் தருவதில் கல்கிக்கு நிகர் வேறெதுவுமில்லை!

சாத்தூர். எம். செல்லையா.

● 'கல்கி' தீபாவளி மலர் கண்டேன். மறக்காமல் இந்த வருட தீபாவளி மலரிலும் அமரர் கல்கியின் பிரபல குறுநாவலை வெளியிட்டமைக்கு நன்றி. மலருக்கே இதுதான் மகுடம்!

சென்னை - 33. விஜயா முரளி.

● இவ்வாண்டு கல்கி தீபாவளி மலர் எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு மிக அதிகமாக ஓவியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உள்ளமை பாராட்டுக்குரியது.

உளத்தூர்கரை. கவி. செங்குட்டுவன்.

● காஞ்சிப் பெரியவரின் எழில்மிகு ஆசி நல்கும் வண்ணப்படம் கண்கொள்ளாக் காட்சி!

திருவிடைமருதூர். ஏ. சிவா.ஆனந்த்.

● "பெரியார் பாராட்டிய நாடகம்" தஞ்சை வாணனின் நெஞ்சையள்ளும் கட்டுரை நினைவில் நிற்கும். பாராட்டுக்கள்.

மைலாப்பூர். அகஸ்திய பாரதி.



ஊழல் நாற்றமெடுக்கும் ரிப்பன் பில்டிங்!

சென்னை மாநகராட்சிக்குத் தேர்தல் நடத்தக் கோரியும், அங்கு நிலவும் ஊழல்களைக் கண்டித்தும் சமீபத்தில் பெரிய அளவில் போராட்டம் நடத்தியிருக்கிறது இளைஞர் காங்கிரஸ்.

மாநகராட்சியில் நடக்கிற ஊழல்களைப் பட்டியல் போட்டுக் குமுறுகிறார் இளைஞர் காங்கிரஸ் தலைவர் செல்வகுமார்:

"இப்போது மாநகராட்சியில் நடைபெறும் ஊழலோடு ஒப்பிட்டால் 25 ஆண்டுகளுக்கு முன் நடந்த மஸ்டர் ரோல் ஊழல் கொசு மாதிரி" என்று ஆரம்பித்தார்.

"எழில்மிகு சென்னை 2000 என்ற திட்டத்தின் கீழ், உலக வங்கியின் நிதி உதவியுடன் சென்னை மாநகரத்தை அழகு படுத்தும் வேலை நடந்து வருகிறது. சாலைகளை விரிவு படுத்துதல், நடைபாதைகளை ஒழுங்கு படுத்துதல் போன்றவற்றிற்குக் கோடிக்கணக்கான ரூபாய் மாநகராட்சிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதில்தான் ஊழல்.

"கடந்த எட்டு மாத காலத்தில் மட்டும் சுமார் 80 கோடி மதிப்புள்ள வேலைகள் டெண்டர் விடப்பட்டுள்ளன. அதில் 40 கோடி ரூபாய் மதிப்புள்ள வேலைகளை முறைப்படி டெண்டர் கோராமல் நேரடிப் பணி ஒப்பந்தம் (direct tender) கொடுக்கப் பட்டுள்ளது.

"மிக, மிக அவசரமான வேலை என்றால் தான் நேரடிப் பணி ஒப்பந்தம் கொடுக்க முடியும். ஆனால் அவசரமில்லாத இந்த 'எழில் மிகு சென்னை' திட்டச் செலவுகள் அவசர வேலைகளின் கீழ் காண்பிக்கப்படுவதன் நோக்கம் என்ன என்பதைச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை!"

"ஒரு உதாரணம்– தொலைக்காட்சி நிலையம் இருக்கும் சிவானந்தா சாலையை விரிவு படுத்த குறிப்பிடப்பட்ட குறைந்த பட்சத் தொகை 22 லட்சம். ஆனால் இந்தத் தொகைக்கு டெண்டர் விடாமல் 98 லட்ச ரூபாய்க்கு நேரடிப் பணி ஒப்பந்தம் கொடுத்திருக்கிறார்கள்.

"நடை பாதைகளில் பதிக்கப்படும் சிமெண்ட் பலகைகளிலும் (slab) ஊழல். அந்தப் பலகைகள் எதுவும் குறிப்பிட்ட specification படி இல்லை. அதே போல் சாலையைச் சரிபாதியாகப் பிரிக்கும் 'divider' போடுவதிலும் ஊழல். ஒவ்வொரு 'divider'ம் 85 கிலோ இருக்க வேண்டும். 30 கிலோதான் இருக்கின்றன. ஆக மொத்தத்தில் கோடிக்கணக்கில் பணம் 'ஸ்வாகா' செய்யப்பட்டிருக்கிறது.

"இந்த ஊழல்களையெல்லாம் குறிப்பிட்டு போராட்டம் நடத்தினோம். மாநகராட்சிக் கமிஷனர் 'டெண்டர் கமிட்டி போட்டு முறைப் படிதான் வேலை கொடுத்தோம்' என்கிறார். அதுவும் சமீபத்தில்தான் போடப்பட்டது. என்னுடைய குற்றச்சாட்டே கடந்த எட்டு மாத காலத்தில் நடைபெற்ற ஊழல்கள் பற்றித் தானே! புதிதாகப் போடப்பட்ட டெண்டர் கமிட்டி இனிமேல் வழங்கப்படும் வேலைகளைப் பற்றித்தானே முடிவு எடுக்கும்? இது



செல்வகுமார்

மட்டுமல்லாமல் '80 கோடிக்கெல்லாம் மாநகராட்சியில் வேலை கிடையாதென்று' கூறி யிருக்கிறார். அப்படியென்றால் வருடத்துக்கு 400 கோடி ரூபாய் 'எழில்மிகு சென்னைக்காக' செலவிடப்படும் என்று முதல்வர் சட்டமன்றத்தில் அறிவித்தது பொய்யா? கமிஷனர் விசாரணைக்குத் தயாரா?

"மாநகராட்சியின் மோசமான செயல்பாடு காரணமாக நகரெல்லாம் நாற்றம் அடிப்பது போதாதென்று ரிப்பன் கட்டடமே ஊழல் நாற்றமடிக்கச் செய்துவிட்டது அ.தி.மு.க. அரசு.

"பழைய கமிஷனரை நீக்கிவிட்டு அவரை நியமிக்கச் சிபாரிசு செய்த அமைச்சர் செல்வகணபதியாவது இதற்குப் பதில் சொல்வாரா...?"

சந்திப்பு: **ஸ்ரீநிவாசன்**

திறப்பு விழா சலுகை நீடிக்கிறது..

[illegible]னில் புதிய கிளை திறப்பு விழா தொடர்கிறது..

திருமகள்

மைலாப்பூரில்

நவம்பர் 5 முதல்

165, இராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை-4.
(ஆஞ்சநேயர் கோயில் எதிரில்) போன் : 499 75 40

25% + 5%

வட்டி ஊக்கத்தொகை

காண தவறாதீர்கள் RAJ TVயில்
ஒவ்வொரு ஞாயிறும் மதியம் 1 மணிக்கு
Y.G. மகேந்திரனின்
கிண்டலோ கிண்டல் நகைச்சுவை நாடகம்
வழங்குபவர்கள் திருமகள்

THIRUMAGAL LEASING

HEAD OFFICE : 9, Ramanathan Street, T.Nagar, Madras - 17. Ph : 434 74 08 ◆ CENTRAL OFFICE : 89/12, Perambur Barracks Road, Doveton, Madras-7. Ph : 532 54 55 ◆ BRANCHES : PARRYS - 160, Thambu Chetty Street, Madras-1. Ph : 534 23 35 ◆ CHROMEPET - S.R.S. Complex, New No.52, G.S.T. Road, Madras-44. (Opp. C.M. Marriage Hall) Ph : 40 11 26 ◆ THIRUVARUR - 194, V.V.P. V.V.P. Building Anna Salai, Thiruvarur. Ph : 22 906

திருமகள்.. உங்கள் வீட்டுப் பொன் மகள்.

WORKING HOURS : 10 A.M. TO 6.30 P.M. SUNDAYS : 10 A.M. TO 1 P.M.

இந்தியாவின் மரடோனா!



* பூட்டியா

பத்தொன்பதே வயது நிரம்பிய பாய்சுங் (பாய்சுங் என்றால், சின்னத்தம்பி என்று அர்த்தம்!) பூட்டியா, இந்திய கால்பந்தாட்ட வானில் திடீரென்று உதித்திருக்கும் ஸ்டார்!

சமீபத்தில், பெஷாவரில் நடந்த ப்ரீ-ஒலிம்பிக் தகுதிப் போட்டியில், எகிறி வந்த பந்தை மார்பில் ஒரு நொடி தாங்கி நிறுத்தி, பாதத்துக்கு அது இறங்குவது தெரியாமல் இறக்கி, நேரே ஒரு கோல் போட்டு பாகிஸ்தானை வெல்ல, இந்தியாவுக்கு வெற்றிப் பாதை போட்டுத் தந்தது இந்தச் 'சின்னத் தம்பி'தான். 'அசகாய சூரர்' என்கிறார் நேஷனல் கோச் ருஸ்தும் அக்ரமோவ். 'ரசிகர்களும், பத்திரிகைகளும் அள்ளி வீசும் புகழ்ச்சி தலைக்கேறி விடாமல் இருக்க வேண்டுமே' என்று கவலைப்படுகிறார் கோச் சையத் நயீமுதீன்!

மூன்று வருடங்களுக்கு முன்னால் சிக்கிம் தலைநகர் கேங்டக்கில் ஆடிக் கொண்டிருந்த பூட்டியாவைக் கையோடு கூட்டிக் கொண்டு வந்து, கல்கத்தா ஈஸ்ட் பெங்கால் கிளப்புக்கு ஆட வைத்தவர், முன்னாள் கோல்கீப்பர் பாஸ்கர் கங்கூலிதான். இவர் ஆட்டத்தைப் பார்த்தாரோ இல்லையோ, 'ஆனந்த பசார் பத்திரிகா'வின் ஸ்போர்ட்ஸ் எடிடர் ரூபக் சாஹா, "இது மாதிரி ஒரு கால்பந்து சூரனை நான் பார்த்ததே இல்லை!" என்று கட்டுரைத்தனமாய் எழுதி, ஒரு தூக்குத் தூக்கி விட்டார்.

"பாஸிங் பண்ற போது எப்படி நடந்துப்பான்னு எதிர்பார்க்கவே முடியாது. ஆனா, சரியான நேரத்துல, சரியான இடத்துல இருப்பான் 'சின்னத்தம்பி'. கோல் போடறதுல எக்ஸ்பர்ட்..!" என்கிறார் சாஹா.

இந்த வருட ஆரம்பத்தில், கொழும்பு சார்க் டோர்னமெண்ட்டில், ஸ்ரீலங்காவுக்கு எதிராக இரண்டு கோல்கள் (தலையால் ஒரு கிக்); நேரு கோல்டு கப் மாட்சில் உஸ்பெகிஸ்தானுக்கு எதிராக ஒன்று – இவற்றை குட்டித் திரையில், பிரைம் ஸ்போர்ட்ஸில் பார்த்தவர்கள் பிரமித்துத்தான் போனார்கள். இப்போது ரீபோக் ஸ்போர்ட்ஸ் கம்பெனி, வருடத்துக்கு ஒன்றரை லட்ச ரூபாய்க்கு இவரை விளம்பர மாடலாக அமர்த்திக் கொண்டு விட்டது!

ஹாங்காங்கிலும், ஜெர்மனியிலும் உள்ள கால்பந்தாட்ட கிளப்புகள், இவர் ஆடிய மாட்சுகளின் வீடியோ கேசட்டுகளைக் கேட்டிருக்கின்றனவாம்.

பள்ளிக்கூட நாட்களில் பாஸ்கெட் பால், வாலி பால், கிரிக்கெட், பாட்மிண்டன் எல்லாம் ஆடிப் பார்த்து, கடைசியில் கால்பந்தில் கால் ஊன்றி விட்ட பூட்டியா, கல்கத்தாவில் நார்த் பாயிண்ட் கல்லூரி மாணவர்.

"கிரிக்கெட்டுக்கு சச்சின் மாதிரி ஃபுட்பாலுக்கு நீங்கள் என்கிறார்களே?" என்றால், "ஐயோ, சச்சின் உலகப் புகழ்பெற்ற கிரிக்கெட் வீரர். நான் அப்படியா? ஏதோ உதைத்துக் கொண்டிருக்கிறேன்!" என்கிறார் பூட்டியா.

— சித்தார்த்



• உணர்வுக்கும்.....



.... செவிக்கும் விருந்து!

● தி.க. பாலசுப்பிரமணியன், கீழநத்தம்.

? 'நான் வர வேண்டிய இடத்துக்கு, வர வேண்டிய நேரத்துல, கரெக்டா வந்து சேர்வேன்....' என்ற ரஜினியின் முந்து வசனம் நமக்குத் தரும் செய்தி யாதோ?

! மூப்பனாருடன் பேச்சு வார்த்தை, பிரதமரைச் சந்திக்க ஏற்பாடு போன்ற சுறுசுறுப்பான நிகழ்வுகளைப் பார்க்கையில், 'சரியான இடத்துக்கு அவர் வருகிறார்... வந்து கொண்டேயிருக்கிறார்...' என்றுதான் தோன்றுகிறது!

● இந்திரா, சைதை.

? 'ஜெ' பாரதப் பிரதமரானால் இந்தியா எப்படி இருக்கும்....?

! ஜெ முதல்வராக உள்ள தமிழ் நாட்டில் கடந்த சில நாட்களில் நடந்த நிகழ்வுகள்:

• ராமேஸ்வரத்தில் ரஜினி மன்றம் திறந்து வைக்கப்பட்ட கையோடு நொறுக்கித் தள்ளப்பட்டது.

• மதுரை வானொலி நிலையத்தைத் தாக்கிய அ.தி.மு.க.வினர் பேரில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை இரவோடு இரவாக வாபஸ் பெறப்பட்டுள்ளது.

• சுளத்தங்குடியில் (மதுரை கிழக்கு பஞ்சாயத்து யூனியன்), ஜவகர் ரோஜ்கர் யோஜனா திட்டத்தின் கீழ் ஷெட்யூல்ட் வகுப்பினருக்கென மயான ஷெட் கட்டுவதில் ஊழல் நடந்துள்ளதைக் கண்டு பிடித்து, கண்டித்த கூடுதல் கலெக்டர் இரண்டே நாட்களில் டிரான்ஸ்ஃபர் செய்யப்பட்டார்.

• அவைத் தலைவர் சேடப்பட்டி முத்தையா குடும்பத்தினரின் அபரிமித வருமானம் குறித்து வருமான வரித் துறை விசாரணை மேற்கொண்டுள்ளது.

ஜெ. முதல்வரானால் இது போன்ற நிகழ்வுகள் அகில இந்திய அளவில் இருக்கும் - ஒரு மெகா தமிழ்நாட்டைக் கற்பனை செய்து பாருங்களேன்...!



• [illegible]ருதல்!

● ஆர். சுவர்ண சுபா, திருநெல்வேலி - 1.

? விழாவில் நடனமாடிய பெண்ணிடம் லல்லு பிரசாத் நடந்து கொண்ட முறை பற்றி....?

! கண்டனத்துக்குரிய அநாகரிகம். ஒரு நைட் கிளப் அல்லது 'நாச் கர்' நிகழ்ச்சிக்குச் செல்பவரிடம்தான் இத்தகைய நடத்தையை எதிர் பார்க்கலாம். பெரிய அளவில் பண்பாடும் கலாசாரமும் அறியாதவர்கள் கூட சில அடிப்படை நாகரிகங்களைக் கடைப்பிடித்தல் அவசியம். ஒரு மாநில முதல்வரிடம் அது இல்லாதது வேதனைக்குரியது.

● என். செல்வம், கொப்பம்பட்டி.

? பாஸ்கரனை ஜாமீனில் விட்டு விட்டார்களே....?

! ஜாமீன் கிடைத்தவுடன் சீரியஸான இதய நோயும் பறந்து விட்டதே! மருத்துவர்களால் செய்ய முடியாததை ஜாமீன் செய்த அற்புதம் பார்த்தீர்களா?

● ம. செந்தில்நாதன், மதுரை - 2.

? 'நீங்கள் ஒரு நடிகன். நடிகனாகவே இருக்க வேண்டும்.... எக்காரணம் கொண்டும் அரசியலில் ஈடுபட வேண்டாம்' என்று சஞ்சய் தத்துக்கு பால் தாக்கரே அறிவுரை கூறியிருக்கிறாரே....?

! சஞ்சய் தத்தைப் பொருத்தமட்டில் சரியான அறிவுரைதான்... ஆனால் அறிவுரை சொல்பவருக்கும் பொருந்தக் கூடிய அறிவுரை. கார்ட்டூனிஸ்ட் பால்தாக்கரே இதே ரீதியில் தம்மைப் பற்றிச் சிந்திக்காதது ஏன்...?!

● முந்து வெங்கட ஆனந்தன், வந்தவாசி.

? அ.தி.மு.க. அமைச்சர்கள், எம்.எல்.ஏக்கள் சொத்து கணக்கு காட்ட வேண்டும் என்ற உத்தரவு பற்றி....

! கட்சி மேலிடத்துக்குத் தெரியாமல் அதிகமாகச் சம்பாதித்திருந்தால் பறிமுதல் செய்வதற்குத்தான்!

● என். சண்முகம், திருவண்ணாமலை. ❑

? பஞ்சாயத்து தேர்தல் நடத்துவதால் மட்டும் கிராம மக்களுக்கு என்ன பலன் கிடைத்துவிடும் என்று எண்ணுகிறீர்கள்?

! சமீபத்திய அரசியல் சாசன திருத்தங்களுக்குப் பிறகு உள்ளாட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு ஒதுக்கும் நிதித் தொகை நேரடியாக அவ்வமைப்புகளுக்குப் போய்ச் சேர வழி செய்யப்பட்டிருக்கிறது. (மாநில அரசு மூல

'ஜெ' பிரதமரானால்..?

மாக நிதி விநியோகிக்கப்படும் போது ஏராளமாக அவர்கள் கபளீகரம் செய்துவிட்டு, சொற்ப தொகையையே கிராமங்களுக்குக் கிடைக்கச் செய்கிறார்கள்) எனவே நிதி முழுமையாக வந்து சேர்வதுடன், அது சரியாகப் பயன்படுத்தப்படாவிட்டால் உள்ளாட்சி அமைப்புகளைத் தட்டிக் கேட்கும் வாய்ப்பும் மக்களுக்குத் தரப்படுகிறது. இதனால் மராமத்துப் பணிகள் முறையாக நடக்க வாய்ப்பு அதிகம்.

● பி. உதயகுமார், சென்னை -2.

? வெறும் முப்பதாயிரத்தில் (எஸ்டிமேட் ஐம்பது லட்சம்!) திருச்சி தெப்பக்குளத்தைத் தூர் எடுத்த திருச்சி மாநகராட்சி கமிஷனர் குறித்து....?

! நியாயமான தீர்ப்பு வழங்கும் நேர்மையான நீதிபதிகள் பந்தாடப்படும் போது ஒரு நல்ல கமிஷனரை மட்டும் எப்படி அங்கேயே விட்டு வைத்திருக்கிறார்கள் என்பதுதான் ஆச்சரியமாக இருக்கிறது!

● லட்சுமி ராகவன், பெல்லாரி.

? அம்புஜம் கிருஷ்ணா பாடல்களை உன்னி கிருஷ்ணன் பாடிசுன்ன காசெட் கேட்டீர்களா.....?

! கேட்டேன்; மனமுருகி ரசித்தேன். தங்களுக்குப் 'பாட்டு வருகிறது' என்று கூறிக் கொண்டு வெறும் சொல்லடுக்குகளை சுவரப்படுத்தி பலர் 'கீர்த்தனை' என்று முத்திரை குத்தும் காலம் இது. அவ்வாறு இல்லாமல்; ஆழ்ந்த பக்தியுடன், தேர்ந்த இலக்கிய அறிவும் பன்மொழிப் புலமையும் அளித்த பலமான அஸ்திவாரம் அம்புஜம் கிருஷ்ணாவின் பாடல்களுக்கு உண்டு. அதனால்தான் அவை மனமுருகச் செய்கின்றன. அதுவும் உன்னிகிருஷ்ணனின் கன்னக் குரலில் தவழ்ந்து வரும் போது செவிக்கும் உணர்வுக்கும் ஒருசேர விருந்து....



• அறிவுரை பொருந்துமா?

● கந்தசாமி நாகம்மா இராஜேஸ்வரன், மொரட்டுப் பாணையம்.

? 'பாரி ஒரு முல்லைக்குத்தான் தேர் கொடுத்தார்; ஆனால் புரட்சித் தலைவி 1100 முல்லைக் கொடிகளுக்கு நல்ல கணவர்களைக் கொடுத்து பாரி வள்ளலையே மிஞ்சிவிட்டார் என்று அமைச்சர் ரகுபதி பேசியிருப்பது பற்றி....?

! வள்ளல் ஜெ. கணவர்களை மட்டுமா கொடுத்தார்... கணவர்களுக்கு வேலையும் அல்லவா கொடுத்தார்! சிதம்பரம் மணவிழா பற்றிய அரசு விளம்பரத்தில் பயன்படுத்திய Conjugal Vocation என்ற ஆங்கிலச் சொற்றொடர் அப்படித்தான் அறிவிக்கிறது! (Conjugal - திருமண பந்தம் Vocation - தொழில்). ஆக அ.தி.மு.க. அகராதிப்படி கல்யாணம் செய்து கொள்வதே ஒரு தொழில்!



• பிரதமரானால்....?

● பி. பாலாஜி கணேஷ், கோவிலாம் பூண்டி.

? 'ஜெ'வை எதிர்க்கும் உணர்வு ரஜினி போல் கமல், விஜய்காந்த், பிரபு, சத்யராஜ் - ஆகியோருக்கும் வரவேண்டும் என்று கருணாநிதி பேசியிருக்கிறாரே....?

! ரஜினி காங்கிரஸ் பக்கம் போய்விட்டால் தி.மு.கவுக்கும் மற்ற கட்சிகளுக்கும் தலா ஒரு ஆள் வேண்டுமல்லவா!



• பறக்கு முந்தா வசனம்....

● எஸ்.பி. ராஜா, கோபாலசமுத்திரம்.

? தமிழக அரசு, ஏற்கெனவே முதல்வர் ஜெயலலிதாவுக்கென பதினேழு கோடி ரூபாய் செலவில் ஹெலிகாப்டர் வாங்கியிருக்கிறதே.... இப்போது மீண்டும் பதினெட்டு கோடி ரூபாய் செலவில் ஒரு விமானமா?

! அப்போ வாங்கியது சிதம்பரம் போய் வர்றதுக்கு. இப்போ வாங்கியிருக்கிறது சிங்கப்பூர் பயணத்துக்கு.. இது கூடத் தெரியலையே...!

❑ **ரூ. 25 பரிசு பெறுபவர் :**
என். சண்முகம்
32 - கே, பைபாஸ் சாலை
திருவண்ணாமலை - 606 602.



கவர் ஸ்டோரி

கண் நிறைக்கும் வயல் இருக்கிறது. சலசலக்கும் கால் வாய் இருக்கிறது. வருடிப் போகும் தென்றல் இருக் கிறது. எல்லாவற் றுக்கும் மேல் ஒரு சோகம் இருக்கிறது. சாராய சோகம்.



எங்கே...?

காஞ்சிபுரத்திலிருந்து பதினைந்து கி.மீ. தூரத்தில் உள்ள மாகரல் கிராமத் தில்....

குடிமகன்களால் குடும்பங்களுக்கு ஏற்படும் தொல்லைகள் எங்கும் இருப்பது தான். ஆனால் இங்கே பெண்கள் புலம்பி விட்டு, முந்தானையால் மூக்கு துடைத்துக் கொண்டு சும்மா போய் விடுகிறதில்லை. புற நானூற்றுப் பெண்களில் கொஞ்சம் பேர் இங்கே மிச்சம் இருக்கிறார்கள். சாராய சமூகத்துக்கு எதிராக இவர் கள் தொடங்கியிருக்கிற யுத்தம், முறத் தால் புலி விரட்டியதைவிடத் துணிச் சல் மிக்கது.

போலீஸுக்கும் கிராம அதிகாரி களுக்கும் கலெக்டர் வரைக்கும் கூட மனு கொடுத்துப் பயனின்றி, தாங் களே களத்தில் இறங்கியிருக்கிறார் கள், மாகரல் கிராமத்து மகளிர்.



• அருள்ஜோதி

சாராயம் காய்ச்சுகிற, விற்கிற இடங்களைத் தேடிக் கண்டுபிடித்து, என்ன நடந்தாலும் சரி என்று புகுந்து பானைகளை உடைத்து, கேன்களைக் கவிழ்த்து, கிளாஸ்களை நொறுக்கி, ஆட்களை விரட்டுவது இவர்களது யுத்த முறை.

வெறும் துடைப்பங்களும் கழிகளும் மட்டுமே இவர்களின் ஆயுதங்கள். உதவிக்கு, உள்ளூர் இளவட்டங்கள்.

ஒரு புரட்சிகரமான சினிமாவில் வரக் கூடிய சம்பவம் போல இருக்கிறது இல்லையா?

ஆனால் இது சினிமா இல்லை. கடைந் தெடுத்த நிஜம்.

கள்ளச் சாராயத்தால் மாகரலில் ஒரு ஆசாமி இறந்து விட, அவர் குடும்பம் பட்ட கஷ்டத்தைப் பார்த்துக் கொதித்து எழுந்திருக் கிறார்கள் இந்தக் கிராமத்துப் பெண்கள்.

"எம்.எல்.ஏ., கலெக்டர் இவங்க கால்ல உளுந்திருக் கும்யா.. எப்படியாவது சாராயம் விக்கறவனுங் களைப் புடிச்சி உள்ள போடுங்கன்னு கெஞ்சி யிருக்கோம்! எத்தனை மனு குடுத்துருப்போம்! எத்தனை அழுது புலம்பியிருப்போம்! யாருக்கும் அக்கறை இல்லை. போலீஸ்காரங்களுக்கு மாமூல்தான் முக்கியம். 'சாராயமா? வித்துக் கடா'ன்னிடறானுங்க... 'நம்மளைக் காப்பாத்த ஒரு நாதி இல்ல பாத்தியா'ன்னு எங்களுக் குள்ளவே பேசிக்கிட்ட போதுதான், 'ஏன் நாமே போராடக் கூடாது'ன்னு தோணிச்சி... எறங்கிட்டோம்!" என்றார் தனபாக்கியம் என்ற பெண்மணி.

"சின்னப் பசங்க உதவினாங்கய்யா... எங்க, எவன் விக்கறான், எத்தனை பேர் இருக்காங் கன்னு போய்ப் பார்த்து வந்து சொல்லு வாங்க... நாங்க பத்து, இருவது பொம்பளைங் களா சேர்ந்து, நைட்டு ஆனதும் கிளம்பிடு வோம். உசிரு போனாலும் சரி, ஒரு கிளாஸ்

கூட விக்க உடறதில்லைன்னு முடிவு கட்டிட்டோம். அவனுங்க எங்கள்ல ஒருத்தியையாவது வெட்டி போட்டுடறதுன்னு வெறியா இருக்கானுங்க... செத்தாலும் சாவறோம்னுட்டு அத்தினி பேரும் தயாராயிட்டோம்."



இவர்களுக்கு வில்லன்கள் வெளியே இல்லை. அதே மாகரல் கிராமத்து ஆட்கள் சிலர்தான் சாராயம் விற்கிறார்கள். அன்பாகச் சொல்லியும், கெஞ்சிக் கேட்டும், எச்சரிக்கை செய்தும் போராடியும் பயனில்லாததால் முதலில் வேறொரு வழியைக் கையாண்டிருக்கிறார்கள். சாராயம் விற்கிறவனை, அவன் குடும்பத்தோடு – ஊரை விட்டு ஒதுக்கி வைப்பது. அதாவது, அவர்கள் வீட்டு நல்லது – கெட்டது எதிலும் கலந்து கொள்ளாமல், யாரும் முகம் கொடுத்துப் பேசாமல் எந்த உதவியும் செய்யாமல்... இப்படி.

ஆரம்பத்தில் இதற்குச் சற்றுப் பலனிருந்தாலும், கூடிய சீக்கிரம் முருங்கை மரம் ஏறிவிட்டார்கள்.

அதாவது, ஊர்க்காரர்களுக்குத் தெரியாமல் ஒதுக்குப்புறமாக சில கிலோ மீட்டர்கள் தள்ளி முள் புதர்களுக்கு நடுவே மறுபடி கடைவிரிக்க ஆரம்பித்து

புறப்பட்டுவிட்டது பெண்கள் படை!



விட்டார்கள்!

ஆகவே, வேறுவழியின்றி தங்கள் போராட்டத்தில் தற்போது மிகத் தீவிரமாக இறங்கியிருக்கிறார்கள். "இவர்கள் அத்தனை பெண்களும் விவசாயக் கூலி வேலை பார்க்கிறவர்கள். ரூபா இருபதுக் கும் முப்பதுக்கும் நாயாக உழைக்கிறவர்கள். ஆனால், சில நாட்கள் வேலையை விட்டா வது, சாராய வியாபாரிகளைத் தேடித் துரத்து கிற அளவுக்கு வந்துவிட்டார்கள்" என்றார் அருள் ஜோதி. இவர் 'கெய்ட்' என்கிற சமூக சேவை அமைப் பைச் சேர்ந்தவர். மாகரல் மகளிருக்கு உதவுவதற்காக வந்திருப்பவர்.

அருள்ஜோதியின் ஆலோசனைப்படி, மாக ரல் மகளிர் ஒன்று சேர்ந்து, தங்கள் பலத்தைக் காட்ட, மாதர் சங்கம் ஒன்றை நிறுவி, அதன் மூலம் இப்போது போராடி வருகின்றனர்.

"புலியைக் கூட அடக்கிட லாம். அந்தப் பொம்பளை அடங்க மாட்டா."

ஒரு கட்டத்தில் இவர்களது இடைவிடாத போராட்டத்தைத் தாக்குப்பிடிக்க முடியாமல் பிரதான சாராய வியாபாரிகள் நான்கு பேரில் மூவர் தொழிலை விட்டு ஓடிவிட்டிருக்கிறார் கள்!

"அவர்களைத் துரத்தியது கூட எங்களுக்கு ஒரு சாதனையாகத் தெரிய வில்லை. பெண்ணுக்குப் பெண்ணே எதிரி என்பார்கள். இங்கே இன்னும் சாராயம் விற்றுக் கொண்டிருக்கும் குமுத வல்லியை எப்படிக் கட்டுப்படுத் துவது என்றுதான் தெரிய வில்லை" என்றார் அருள்ஜோதி.



"கேடி லிஸ்ட்ல சேத்துரு வேன்னு பயமுறுத்த றாங்க..."

குமுதவல்லி –

இதே கிராமத்துப் பெண் தான். விதவையான இவர்

என்ன பொருத்தம்!

சென்னை - மடிப்பாக்கம் பொன்னியம்மன் கோவில் அருகே உள்ள ஒரு கிளினிக்கின் பெயர் 'சக்தி' கிளினிக். இதில் என்ன ஆச்சரியம் என்கிறீர்களா? அந்த கிளினிக்கின் டாக்டர் பெயர் சசிகலா!

- டிஎன். பாலகிருஷ்ணன்

இந்தப் பகுதியில் நடத்துகிற அட்டகாசங்களைச் சொல்லி மாளாது என்கிறார்கள்.

"புலியைக் கூட அடக்கிறலாம்ங்க. அந்தப் பொம்பள அடங்க மாட்டா!" என்றார் கனகா.

"கலெக்டர் வரைக்கும் சொல்லிப் பாத்துட்டோம். குமுதான்னாலே ஒதுங்கிடறாங்க. யாரும் கிட்ட போவ முடியாது. அவ பேசற பேச்சை காது கொண்டு கேக்க முடியாது. மிஞ்சிப் போனா, அடியாளுங்களை வெச்சி மிரட்டுவா. அவ மட்டும் தொழில் செய்யறதை நிறுத்திட்டா இந்த கிராமத்துக்கு விடிவு வந்துடுங்க!"

கீழ்மட்டத்திலிருந்து உயரதிகாரிகள் வரை பணத்தால் மடக்கிப் போட்டிருக்கிறார் குமுதா என்று சொன்னார்கள்.

"அவங்களுக்கு கவர்மென்டுல சம்பளம் தராங்களோ இல்லியோ, இவகிட்டேருந்து மாசம் தவறாம மாமூல் போயிடும்" என்கிறார்கள்.

நாம் குமுதாவைப் பார்க்க முயன்று, முடியவில்லை. பகலில் சாராயம் காய்ச்சப் போய் விடுவாராம்! எங்கே என்று யாருக்கும் இதுவரை தெரியவில்லை. இரவில் முன் புதர்களில் அமோக வியாபாரம்! அங்கே போனால் ஆட்களை வைத்து, கையில் கிடைப்பதைக் கொண்டு, நிமிர்த்தி விடுவார்களாம்.

"அந்த பொம்பளைகிட்ட காலல உனாத குறையா சொல்லிப் பாத்துட்டம்... 'நீ இந்தத் தொழிலை விட்ரு. உனக்கு வேற தொழில் நாங்க ஆரம்பிச்சித் தரோம்'னு கூட சொல்லிப் பாத்துட்டம்... கேக்க மாட்டேங்கறாளே!"

வியப்பும் வேதனையும் ஆட்கொள்ள, மாகரல் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றோம்.

எஸ்.ஐ. இல்லை. உள்ளே இருந்த போலீஸ்காரரை - அவர் இருந்த நிலையில் - பார்த்ததும் பலத்த அதிர்ச்சி!

யூனிஃபார்ம் இல்லை. கைலியும் வெற்று மார்பும் சிவந்த கண்களுமாகத் தள்ளாடி எழுந்து வந்தார். நெருங்கிய போது 'குப்' பென்று சாராய வாடை!

அதிர்ச்சியைக் காட்டிக் கொள்ளாமல் நாம் வந்த விவரத்தைச் சொன்னதும்,

"ஐயய்ய.... சாராயமெல்லாம் இந்த ஊர்ல இப்ப இல்லீங்க... எல்லாம் அழிச்சிட்டம்."

சிரிப்பை அடக்கிக் கொண்டு நிதானமாக மக்களிடம் பேசியதைச் சொன்னோம்.

"அத்தனை மக்களுமா பொய் சொல்றாங்கள்?" என்று கேட்டதும் ஏற இறங்கப் பார்த்தார். பின் மெதுவான குரலில், "அது வேற ஒண்ணும் இல்ல சார்... இந்த மாதர் சங்கத்துக் காரங்க, வேற ஒரு வெளியூர் சாராய வியாபாரி யாண்ட இருவதாயிரம் ரூபா வாங்கிட்டு, உள்ளூர் ஆளுங்களைத் தொரத்தப் பாக்கறாங்க..."

"அப்ப இங்க சாராயமே இல்லைன்னு நீங்க சொன்னது பொய்தானே?"

உடனே, "நீங்க என்ட்ட பேச வேணாம். எஸ்.ஐ. வாலாஜாபாத் போயிருக்காரு. அவரு வந்ததும் அவருட்ட பேசிக்கங்க" என்றார்.

நாம் விடாமல் குமுதா பற்றி ஆரம்பித்ததும், "அட நம்ம குமுதா.... சொல்லுங்க, சொல்லுங்க" என்றார்!

விவரம் சொன்னதும் "அந்த பொம்பளை இப்ப விக்கறதில்லியே! நீங்க சொல்றீங்க... இன்னிக்கு நைட்டு வேணா போய்ப் பாக்கறேன். ஆனா ஊருக்காரப் பொம்பளைங்க சொல்றதை நம்பாதீங்க!" என்றார் பதற்றத்துடன்.

மாகரலில் நிலவரம் சரியில்லை. சாராயத்தை ஒழிக்க வேண்டிய போலீஸே பணி நேரத்தில் - அதுவும் ஸ்டேஷனுக்கு உள்ளேயே போதையில் இருப்பதும், பகிரங்கமாகத் தவறு செய்பவர்களை வி.ஐ.பி. போலக் குறிப்பிடுவதும் அப்பாவி கிராமப் பெண்கள்மேல் வீண் பழி போடுவதும் அந்த கிராமத்தைச் சூழ்ந்துள்ள அபாயத்தையே சுட்டிக்காட்டுகின்றன.

உள்ளூர் இளைஞர் மூர்த்தி, "போராடற பொம்பளைங்களுக்கு சப்போர்ட்டா, நாங்க கூடப் போனா, 'கேடி லிஸ்டுல சேத்துருவன் ஜாக்கிரதை'ன்னு பயமுறுத்தறாங்க சார்!" என்றார்.

பொது மக்களே சட்டத்தைக் கையில் எடுத்துக் கொள்ளும் நிலைக்குத் தள்ளிவிட்டிருக்கிறது நிர்வாகம்! இக் கட்டுரை அச்சான பிறகு மாகரல் கிராமத்துப் பெண்கள் படைக்கு அச்சுறுத்தலும் அபாயமும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்பதை காஞ்சிபுரம் கலெக்டர் ராமமோகன ராவுக்கு இங்கே பகிரங்கமாகத் தெரிவித்துக் கொள்கிறோம். உரிய பாதுகாப்புக்கு நடவடிக்கை எடுங்கள் சார்!

தங்களின் கடைசிக் கட்டப் போராட்டமாக, வருகிற நவம்பர் 13-ஆம் தேதி கலெக்டர் அலுவலகம் முன்னால் உண்ணாவிரதம் இருக்கப் போவதாக முடிவெடுத்திருக்கிறார்கள் மாகரல் கிராமத்துப் பெண்கள்.

சமூக நீதி காக்கிறவர்கள் கண்ணில் பட்டால் சரி.


— ஔரங்கசீப்

அட்டை வண்ணப்படம், படங்கள் : **யோகா**

இதுதான் இந்தியா!

● பிரதமர் அலுவலகத்தில் அவர் ஒப்புதலுக்காகக் காத்திருக்கும் கோப்புகளின் எண்ணிக்கை 850-ஐத் தாண்டி விட்டது!

● அஸ்ஸாம் தூர்தர்ஷனுக்கு H H Darshan என்று செல்லப் பெயர். முதல்வர் ஹிடேஸ்வர் சைக்யா, அவர் மனைவி ஹேமபிரபா (இவர்தான் கௌஹாத்தி மேயர்) ஆகிய இருவரையும் தினம்தோறும் டி.வி.யில் காட்டுகிறார்கள் என்பதால்!



• ராவ்

● ரிசர்வ் வங்கி கவர்னர் ரங்கராஜனின் பதவிக்காலம் நவம்பர் மாதத்தோடு முடிகிறது. அவருக்கு மேலும் ஓராண்டு எக்ஸ்டன்ஷன் தர ம.மோ.சிங் முடிவெடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. கவர்னர் பதவிக்கு ஆசைப் பட்டு போட்டி போடும் இதர அதிகாரிகள் ஓராண்டு ஓய்வு எடுத்துக் கொள்ளலாம்...?



• ரங்கராஜன்

● தமது ஐம்பதாவது பிறந்தநாளையொட்டி ஐம்பது பேரைத் தம் தொகுதிக்கு அனுப்பி, தொகுதி மக்களைத் தம் வீட்டுக்கு அழைத்து வரச் செய்து, புடைவை, துணிமணிகள் வினியோகித்திருக்கிறார் மத்திய அமைச்சர் ஜகதீஷ் டைட்லர். தேர்தல் வரப் போகிறதே!



• ஜகதீஷ்

● மேற்கு வங்கத்தில் அஜித் பாஞ்சாவுக்கு எதிராக இந்தி நடிகர் மிதுன் சக்ரவர்த்தி தேர்தலில் நிற்கப் போகிறாராம் – மார்க்ஸிஸ்ட் கட்சி சார்பாக! காலத்துக் கேற்ப கட்சிகளும் மாற வேண்டியதுதானே...!

— மௌஷ்மி

'சுருக் நறுக்' என்று ஒரு சொல்லோவியம் – 5

ஊழல் என்பது...

ரொம்பப் பிரபலமான விஷயம். புராதனமானதும் கூட. இதுவரை இதற்கு யாரும் தனியாக ஒரு சொல்லோவியம் தீட்டியிருப்பதாகத் தெரியவில்லை. நீங்கள் முயலுங்களேன்! உங்கள் கற்பனையில், 'ஊழல்' என்பதற்கு ஒரு, ஒரு வரி விளக்கம் எழுதி 20.11.95-க்குள் அனுப்பி வையுங்கள்.

பிரசுரத்துக்குத் தேர்வாகும் ஒவ்வொரு 'சுருக் நறுக்' விளக்கமும் ரூ. 50 பரிசாகப் பெறும். தவிர இன்னும் 21 வாரங்களுக்குத் தொடரப் போகும் இப் போட்டியில் கலந்து கொண்டு, மிக அதிக முறை பரிசு பெறும் ஒரு திறமைசாலிக்கு ஒரு மெகா பரிசு உண்டு!

போட்டி முடிவுகளில் ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

— ஆர்.

ஊழல் என்பது ....

....


....

....

பெயர் : ....

முகவரி : ....

....



சந்தர்ப்பங்

அன்புள்ள கலா வுக்கு.

நலம். நலமறிய அவா.

உனக்குக் கடிதம் எழுத வேண்டும், வேண்டும் என்று மனசு அடித்துக் கொள்கிறது. என்னென்னவோ சொல்ல வேண்டும், கொட்ட வேண்டும் என்று வரி வரியாய் மனசுக்குள் வார்த்தைகள். கூடவே என்னவோ தடை. என்னவென்று தெரியவில்லை. இந்த அறைக்கு வந்து பத்து நாட்களாகி விட்டன. ஒவ்வொரு இரவும் எழுத வேண்டும் என்று நினைத்துக் கொள்வேன். அப்படியே தூங்கியும் போய் விடுவேன்.

மறுநாள் காலை எப்போதும் போல் வெப்பம். பயங்கர வெப்பம். இது நடுவே குளித்து, மூன்று பிரெட் துண்டுகளைத் தின்று விட்டு, காத்திருக்கும் பஸ்ஸுக்கு ஓட்டம். கூடவே ஒரு நூற்றியிருபது பேர். எல்லாரும் சொந்த மண்ணை விட்டு இந்த ரியாத் புழுதியில் குப்பை கொட்ட வந்தவர்கள்.

பணம். அது மட்டும்தான் குறிக்கோள். உன்னுடையதும் அதுதானே? அதற்கான உன் மௌனப் போராட்டம்தான், என்னை இங்கே கொண்டு வந்து தள்ளியிருக்கிறது.

நான் சாதாரணமானவன். கனவுகளில்லாதவன். படித்த காலத்தில், முதல் ராங்க் வாங்கினவனை தூரே நின்று ரசித்திருக்கிறேன். பொறாமைப்பட்டதில்லை.

அலைச்சலில்லை. பரபரப்பில்லை. ஒரே சீரான ஓட்டம். வேலை கிடைத்தது. சம்பளம் வந்தது. அது போதும். மிச்சம் பிடிக்க முடிந்த போது மிச்சம். கடன் வாங்கியதில்லை. ஒழுங்காய் சாதம் போட்ட அம்மா. தேவைப்பட்ட விஷயம் மட்டும் கேட்ட அப்பா.

உன்னைப் பார்த்து விட்டு அம்மா ஓஹோ என்று சொன்ன போதும் ஏதும் சலனமில்லை. பார்த்த போதும் ஒன்றுமில்லை. பிடித்திருந்தது. கல்யாணமும் ஆயிற்று. என்னைப் போல் நீயும் ஒருத்தி. அப்படித்தான் நினைத்திருக்கிறேன்.

உன் எண்ணங்கள் எனக்குத் தெரியவில்லை. நாலு வரி சேர்ந்து பேசினது, கல்யாணமான மூன்று மாதம் கழித்துத்தான். உன்னைப் பற்றித் தெரியாமலே இருந்திருக்கிறேன்.

தெரிந்த போது... என்ன சொல்வது?

அந்தப் பேச்சு இன்னும் ஞாபகமிருக்கிறது. அப்போது முதல் முறையாய் கம்பெனி லாக்-அவுட் ஆனது. திறந்து விடும் என்ற நம்பிக்கையில் சாப்பிட்டுத் தூங்கி எழுந்த நாட்களவை.

நல்ல மத்தியானம். தூங்கி எழுந்து புதுக்

ஜகதீசன்

ஆர். வெங்கடேஷ்

காப்பியோடு முற்றத்துத் தூணில் சாய்ந்திருந்தேன்.

"பேக்டரி எப்போ திறப்பா?"

"திறந்துடுவா. பத்து, பதினைஞ்சு நாளாகும். யூனியன்ல போய்ப் பேசிண்டிருக்கா."

"இந்த லாக்-அவுட் ஆன நாளுக்கெல்லாம் சம்பளம் தருவாளா?"

"தெரியலை. அரைச் சம்பளம் தரலாம். அதான் திறந்துடப் போறாளே. அப்புறம் என்ன?"

"அப்போ, இது மாதிரிதான் லைஃப் புல்லா இருக்குமா?"

"இது மாதிரின்னா?"

"பேக்டரிய மூடிண்டு, திறந்துண்டு..."

என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்தேன். கம்பெனியில் சேர்ந்த முதல் ஐந்து வருடங்களிலேயே இரண்டு முறை லாக்-அவுட் ஆகியிருந்தது.

"அப்படின்னு இல்ல. நன்னாதான் போயிண்டிருக்கு கம்பெனி. ஒரு சில பேர் தகராறு பண்றாங்க. அதனால லாக்அவுட் ஆகிடறது."

"சரி. அதுக்காக, இந்தக் கம்பெனிய நம்பிண்டே இருக்க முடியுமா?"

அதுவரை யோசித்திராத விஷயம். இப்படியே போய்க் கொண்டிருப்போம் என்றுதான் நினைத்திருக்கிறேன். லாக்அவுட்டானால் கொஞ்சம் சிரமம். திருப்பியும் அடித்துப் பிடித்து திறந்து விடுவார்கள். நாலாயிரம் தொழிலாளிகள் வயிற்றில் அடிக்க யாருக்கு மனசு வரும்? தைரியம்தான். நம்பிக்கைதான்.

இரண்டாவது முறை லாக்அவுட் ஆன போது, உனக்கு எட்டு மாதம். செலவுக்குப் பணமில்லாத போது, பெரியண்ணா உதவினார். பிரகாஷ் பிறந்தான். சந்தோஷமான அந்த நேரத்தில் மீண்டும் உத்யோகம் பற்றிப் பேச்சு வந்தது. இப்போது புதுக் காரணம். புது வேகம்.

"இவன வளக்க வேண்டாமா? படிக்க வெக்க வேண்டாமா? இதுமாதிரி லாக்அவுட் ஆயிண்டிருந்தா, எதிர்காலத்துல என்ன பண்ணப் போறோம்?"

பிரகாஷை மடியில் போட்டுக் கொண்டு கேட்டாய். நியாயமான கேள்வியாகத்தான் தோன்றியது. ஆனால் என்ன மாற்றத்தைக் கொண்டு வந்து விட முடியும்? படிப்பு குறைவு. ஒவ்வொருவரிடமும் சொல்லி, சொல்லி வைத்து, பெறப்பட்ட உத்தியோகம். எந்த உறுதியில் வேலையை மாற்றிக் கொள்ள முடியும்? தெரியவில்லை. நிலைமை சரியாகி விடும் என்ற நம்பிக்கையில் வாழ்வதுதான் சரியென்று தோன்றியது. சாப்பாட்டுக்குக் கஷ்டமில்லை. எதிர்காலம், அது நம் கைகளிலில்லை. எப்படி நடக்க வேண்டுமோ, அப்படியே நடக்கும்.

அப்புறம் ரேவதி பிறந்தாள். உன் கோபம் அதிகமானது. இப்போதே அவள் கல்யாணம் பற்றி யோசிக்க ஆரம்பித்து விட்டாய். விளையாட்டாய் நான் சொன்னவைகளை விபரீதமாக்கிக் கொண்டாய்.

"ரேவதிக்கு நாம பாக்கணுமான்ன? அவளே பாத்துக்கறா!"

"ஏன், நீங்களே ஓடச் சொல்வேள் போலயிருக்கு?"

"ஓடினா என்ன பண்ண முடியும்?"

"என்னால, நாண்டுண்டு சாக முடியும்!"

நான் அதிர்ந்து போனேன். உள்ளடங்கினேன். எல்லாவற்றுக்கும் அடிப்படை பணம் தான் என்ற உன் எண்ணம் புரிபட்டது. இந்த வெளிச்சத்தில் உன் பிற செயல்களும் புரிபட்டன. நல்ல புடவை, நல்ல நகை, சொந்த வீடு, சொல்லிக் கொள்ளும்படியான உத்தியோகம், வாழ்வு என்ற லட்சியங்கள் தெளிவாயின.

நான் லட்சியங்களற்று வளர்ந்தவன். உன் லட்சியங்கள் மலைப்பு தந்தன. பயமுறுத்தின. அதைவிட, அவையெல்லாம் தேவையா என்றும் யோசித்தேன். எனக்குத் தேவையில்லை என்று தோன்றியது.

இதன் பிறகு, நான் ஒரு பெரிய தப்பு செய்தேன். என் லட்சியமின்மையைச் சொல்லியிருக்கக் கூடாது. சொல்லி விட்டேன். உன் மௌனப் போராட்டத்தின் தொடக்கம் இங்குதான்.

அப்புறம் உன் பேச்சில், செயலில், உணர்வில் உத்வேகம் இல்லை. கடனுக்கு மாரடிக்கத் தொடங்கினாய். என்னை எவ்வளவு கஷ்டப்படுத்தியது தெரியுமா, உனது புழுக்கம்? உனது வரட்டுத்தனம் என்னை வாட்டியது.

நான் வேகமற்றவன்தான். லட்சியமற்றவன்தான். ஆனால் நான் உணர்வற்றவனில்லை. எல்லோரும் சந்தோஷிப்பது எனக்குப் பிடிக்கும். குழந்தைகள் புத்தாடை பூண்டு பண்டிகைகளில் குதூகலிப்பது பிடிக்கும். நாலு பேரோடு சத்தமாய்ப் பேசிக் கொண்டு சாப்பிடுவது பிடிக்கும்.

அடுத்த நகரம்-திருநெல்வேலி!

நெல்லை வாசிகளே! இது உங்கள் முறை. பம்பாய்க்காரர்களை அடுத்து சிறப்புப் பக்கங்களை ஆக்கிரமிக்கப் போவது நீங்கள்தான்! உங்கள் துணுக்குகளை, ஜோக்குகளை, கதைகளை, கவிதைகளை, கட்டுரைகளைப் போஸ்ட் கார்டில் (மட்டும்) எழுதி உடனே அனுப்புங்கள். முகவரிப் பகுதியில் நெல்லைத் துணுக்குகள் என்று மறக்காமல் குறிப்பிடுங்கள். அதிக பட்சம் நான்கு வாரங்கள் புகுந்து விளையாடக் களம் தயார்! உங்கள் படைப்புகளின் சுவை, அல்வாவைத் தூக்கிச் சாப்பிட்டுவிடும் என்பதில் எங்களுக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. ஆல் தி பெஸ்ட்!

— ஆசிரியர்.

ஆனால், எல்லாவற்றிலும் சந்தோஷம் அருகியது. மந்தத்தனம் புகுந்து கொண்டது. மௌனமாய் உன்னை நீ வாட்டிக் கொள்வது வீடு முழுவதும் வியாபித்தது. வீட்டுக்கு வரவே பிடிக்கவில்லை. சில சமயம், அப்படியே எங்காவது நடந்து போய் விடலாமா என்று தோன்றியதுண்டு. உன்னை எப்படி சந்தோஷப்படுத்துவது என்று தெரியவில்லை.

பணம்தான் இன்றைய உலகின் மகிழ்ச்சிக்கான அடிப்படை என்பதை என்னால் ஏற்க முடியவில்லை. உன்னிடம் பேசுவது கூட இயல்பில்லாமல் போனது. யாரோ நான்காவது நபரிடம் காட்டும் முகம். ஒரு நிலைக்குப் பின் லேசான பயம் கூட தலையெடுக்கத் தொடங்கியது.

சொல்லி வைத்தாற்போல், கம்பெனியை ஒரு பன்னாட்டு நிறுவனம் வாங்கிக் கொண்டது. டைரக்டர்கள் மாறினார்கள். கருணையெல்லாம் உதவாது என்றார்கள். உற்பத்தி வேண்டும், காசு வேண்டும். மனிதர்களை விட இயந்திரங்கள் வாய்பேசா சேவகர்கள். நாலாயிரத்தை இரண்டாயிரம் பேராக்கு. 'வி.ஆர்.எஸ்.ஸில் வீட்டுக்குப் போ' என்றார்கள். அப்போதுதான் கம்பெனியை மீண்டும் லாபமடையச் செய்ய முடியும் என்றார்கள்.

எவ்வளவோ சண்டை போட்ட போதும், 'பதினைந்து வருடம் குப்பை கொட்டியது போதும், போடா' என்று விட்டார்கள். வீட்டுக்கு வந்து உட்கார்ந்த போது, வயது நாற்பத்திரண்டு. உடம்பு, ஒரு சுகத்துக்குப் பழகி விட்டிருந்தது. நிமிர்ந்து பார்த்த போது, பயமாக இருந்தது.

வேலை இல்லை. ஜீவனத்துக்கு, செட்டில்மெண்ட் பண்ணி அனுப்பிய பணத்தின் வட்டிதான். சிறியவர்களாகவும் இல்லாமல், பெரியவர்களாகவும் இல்லாமல் இரண்டு குழந்தைகள். கூடவே புழுக்கத்தில் இறுகிப் போன நீ.

எப்படியிருக்கும் என்று யோசித்துப் பார்.

அப்போதும் உனக்குக் கருணையில்லை. உன் பார்வை, என்னைக் குத்தம் சொல்லியது. உன் செயல்கள், என்னை இகழ்ந்து பேசின. நான் துவண்டேன்.

நடந்தவைகளுக்கெல்லாம் நானா பொறுப்பு? உலகம் இழுத்த இழுப்புக்கு நான் ஆடியிருக்கிறேன். வேறென்ன செய்ய முடியும்? உனக்கேன் இது புரியவில்லை? எனக்குப் புரிய வைக்கவும் தெரியவில்லை.

விளைவு, ஒதுங்குதல். உனக்குத் தேவையானதை உனக்கும், எனக்குத் தேவையானதை எனக்கும் அருள இறைவனிடம் வேண்டினேன். யார் யாரிடமோ சொல்லி, ஹெவி வெஹிகல் டிரைவராக ரியாத் வந்து விழுந்தேன்.

சம்பளம் ரியாலில். இன்னும் இரண்டு வருடங்களில் உன் லட்சியங்கள் பூர்த்தியாகி விடலாம். அப்புறம், உன் வார்த்தைகளில் 'உட்கார்ந்து சாப்பிடலாம்.'

ஆனால், இதனாலெல்லாம் என்ன பயன்?

அல்ப பணத்துக்காக அந்நிய தேச வாசம். தேவையில்லாப் பிரிவு. குழந்தைகளற்ற தனிமை. ஏன் என்று கேட்கவும் ஆளில்லை. கேரியர் சாதம். கண்ணில் விஷம் கொண்டு காத்திருக்கும் மேலாளர். பேசினால், வீட்டுக்குத் துரத்தி விடுவார்கள். அடிமை வாழ்வு.

சந்தோஷமில்லை. வாழ்க்கைக்கு எது முக்கியமோ, அது இல்லை. அப்புறம் என்னத்துக்கு வாழ்க்கை?

யார் மேல் கோபப்படுவது என்று தெரியவில்லை. என்னை வியாபித்திருப்பது மொத்தமும் நீதான். என்னை இயக்குவதும் நீதான்.

ஏன் என்னை இப்படிக் கொல்லாமல் கொல்கிறாய்?

வருத்தத்துடன்,

எம். ஆர். கண்ணன்.

மறுநாள் தூங்கியெழுந்த கண்ணன், அவசரமாய் கடிதமெழுதிய போது, மேற்கண்ட கடிதத்தின் முதல் இரண்டு வரிகள் மட்டுமே இருந்தன. அப்புறம், குழந்தைகளின் நலம் விசாரித்து, படிப்பு விசாரித்து, வங்கி மூலம் அனுப்பியிருக்கும் பணத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கூறி, கலாவுக்குத் தன் பூரண அன்பைத் தெரிவித்திருந்தான்.

KALKI SHOPPING PAGE

CHROMEPET CULTURAL ACADEMY (Regd.)


3, Indira Gandhi Cross Street, Radhanagar Main Road,
CHROMEPET, MADRAS - 600 044. Phone : 402501

ஒரு வேண்டுகோள்!

குரோம்பேட்டை கல்சரல் அகடமி 1969-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, கடந்த 25 வருடமாக பொது மக்களுக்கு நல்ல முறையில் பயன்பட்டு வருகிறது. இசை, நாடகம், நாட்டிய நிகழ்ச்சிகள் மட்டுமல்லாது ஆன்மீக கதாகாலட்சேபங்கள், யக்ஞங்கள், ஹோமங்கள் மற்றும் சஷ்டி உபநயனம், கல்யாணம், சஷ்டிஅப்தபூர்த்தி, சதாபிஷேகம் போன்ற மங்கல நிகழ்ச்சிகளும் நடைபெறுகிறது. ஜகத்குரு காஞ்சி ஆசார்யாள் இம்மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டியது மட்டுமின்றி மூன்று முறை இங்கு தங்கி பூஜைகள் நடத்தி அருளாசி வழங்கியது பெரிதும் குறிப்பிடத்தக்கது. மேற்கண்டவாறு நிகழ்ச்சிகள் நடைபெறும் சமயங்களில் கடும் வெயில், மழை, பனி இவற்றால் ஏற்படும் அசௌகர்யங்களைத் தவிர்க்க, இம்மண்டபத்தை ஒட்டிய திறந்த வெளியை ஒரு COVERED AUDITORIUM ஆக மாற்ற வேண்டிய நிர்பந்தத்தில் உள்ளோம். அதை செயலாக்க சுமார் பத்து லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. COVERED AUDITORIUM கட்ட மீண்டும் காஞ்சி ஆசார்யாளே அடிக்கல் நாட்டி அனுக்கிரகம் செய்தது நாம் செய்த பாக்கியமாகும். பொது மக்களும், அன்பர்களும் பொருளுதவி செய்து இந்த முயற்சியை திருவினையாக்க வேண்டுகிறோம். நன்கொடைகள் எந்தத் தொகையாக இருந்தாலும் கோரப்படுகிறது. அதே சமயம் ரூ.10,000/- நன்கொடையளிப்பவர்களின் பெயர் அரங்கத்தின் ஒரு தூணில் கல்வெட்டில் பொறிக் கப்படும். நன்கொடைக்கான காசோலை அல்லது டிராப்ட் "குரோம்பேட்டை கல்சரல் அகடமி" என்ற பெயரில் எழுதப்பட்டு கிராஸ் செய்து அனுப்ப அன்புடன் விண்ணப்பிக்கிறோம்.

நிர்வாகிகள்

SPACE DONATED BY : THE AMINJIKARAI BENEFIT FUNDLIMITED, MADRAS - 600 029. PHONE : 6265194, 403077.



கோமலின் கனவுகள்

கட்டுரை ஆசிரியர் வாத்தியார் ராமன், கோமல் சுவாமிநாதனின் நாடகக் குழுவில் நெடுநாள் நடிகர். கோமலின் உயிர் நண்பரும் கூட... கோமல் பற்றி வாத்தியார் ராமன் :

'தண்ணீர் தண்ணீர்', 'சொர்க்க பூமி', 'செக்கு மாடுகள்', 'ஓர் இந்தியக் கனவு', 'நள்ளிரவில் பெற்றோம்', 'ஆளும் கட்சித் தலைவர்' என்று கோமலின் நாடகங்கள் வரிசையாக அமோக வெற்றி பெற்று, அவர் புகழேணியின் உச்சிக்கு ஏறிக் கொண்டிருந்த சமயம் அது.

கோமலுக்கு திடீரென்று ஒரு ஆசை வந்தது. 'வழக்கமான மேடை நாடகப் பாணியிலிருந்து விலகி ஒரு புது முயற்சியாக நவீன நாடகம் ஒன்று எழுதி, அரங்கேற்றினால் என்ன' என்று கருதினார். 'மனிதன் எனும் தீவு' என்னும் நாடகத்தை எழுதினார்.

அது ஒரு சர்ரியலிஸ நாடகம். அதாவது வழக்கமான யதார்த்த பாணி நாடகங்களிலிருந்து மாறுபட்டு, ஒரு கனவு நிலையில் கதை நடப்பது போன்ற சித்திரிப்பு.

"ஒரு சோதனை முயற்சியாக இதை அரங்கேற்றி, மக்கள் எப்படி ரசிக்கிறார்கள் பார்ப்போம்!" என்றார் கோமல்.

எனக்கு இந்த மாதிரி சோதனையிலெல்லாம் நம்பிக்கை இல்லை.

"நாம் சொல்கிற விஷயம் எதுவாக இருந்தாலும் மக்களுக்கு அது தெளிவாகப் புரிய வேண்டும். அதை விடுத்து, சோதனை முயற்சி என்று எதையாவது போட்டுக் குழப்பினால் நாடகம் பார்க்க வருகிற கொஞ்சநஞ்ச பேரும் ஓடியே விடுவார்கள்!" என்றேன்.



• வாத்தியார் ராமன்

கோமல் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஒத்திகை ஆரம்பித்தார். நடிகர்களுக்கு முதலில், முழு நாடகத்தையும் பொறுமையாகப் படித்துக் காட்டினார். முழுக்கப் படித்து முடித்ததும் நிமிர்ந்து பார்த்தார். ஒருத்தர் முகத்திலும் ஈயாடவில்லை! யாருக்கும் 'கதை' என்னவென்று புரியவில்லை!

கோமல் அசரவில்லை. பொறுமையாக நாடகத்தை விளக்கிச் சொன்னார். தான் சொல்ல வருகிற விஷயத்தை எப்படி நவீனப்படுத்தியிருக்கிறார் என்று வரிவரியாக விளக்கினார்.

அப்போதும் யாருக்கும் புரிந்ததாகத் தெரியவில்லை.

"வேண்டாம். எதற்கு விஷப் பரீட்சை?" என்றுதான் எல்லோரும் சொன்னார்கள்.

அவர் கேட்கவில்லை. "மக்களுக்கு நிச்சயம் புரியும்" என்று அடித்துச் சொல்லி நாடகத்தை அரங்கேற்றி விட்டார்.

கோமல் நாடகம் என்றாலே அன்று பலமான எதிர்பார்ப்பு உண்டு. முதல் நாள் கூட்டம் அதிகமாக இருக்கும். குறிப்பாக இந்த நாடக அரங்கேற்றத்தன்று மயிலை ஆர். ஆர். சபாவில் எக்கச்சக்கக் கூட்டம்.

நாடகம் தொடங்கியது. பாத்திரப் படைப்பின் தன்மையை முழுமையாக உணர்ந்து கொள்ளாததாலோ என்னவோ, நாடகத்துடன் மக்களால் ஒன்ற முடியாமல் போய் விட்டது. அதற்கு மேல் 'கதை' என்ன என்பது புரியாமல் போய் விட்டதால் சுவாரஸ்யமில்லாமலாகி விட்டது.

ஒருத்தர் முகத்திலும் ஈயாடவில்லை.

அதன்பின் ஐந்தாறு இடங்களில் இந்த நாடகம் நடத்தப்பட்டு, எங்கும் இதே நிலை தான்.

நாங்கள் குழுவினர் மொத்தமாக கோமலிடம் சென்று, "வேண்டாம். போட்டவரை போதும். நிறுத்தி விடலாம்" என்றோம்.

"இதோ பாருங்கள். உங்களுக்குப் புரியாததால் இது நல்ல நாடகமாக இல்லாமல் ஆகிவிடாது. சொல்லப் போனால் என் மிகச் சிறந்த நாடகங்களில் இது ஒன்று" என்றார்.

அதோடு விடாமல், எழுத்தாளர்கள், அறிவுஜீவிகளுக்காக ஒரு ஷோ போடலாம் என்று ராணி சீதை ஹாலில் ஒரு பிரத்யேகக் காட்சி ஏற்பாடு

செய்தார். அவர்களது விமர்சனம் மூலம் நாடகத்தின் தரத்தை உணர்த்தலாம் என்பது அவர் ஐடியா.

ஆனால் இங்கும் நிலைமை அதுதான்! 'அறிவு ஜீவி'களுக்கும் கோமல் சொல்ல வந்த 'கதை' புரியவில்லை.

கோமலுக்கு இதில் வருத்தம் ஒன்றுமில்லை. "இந்த நாடகத்தைப் பொறுத்தவரை விண்டு விண்டு வைக்க முடியாது, என்னால். உங்களுக்குப் புரியாவிட்டால் எனக்குப் பரவாயில்லை. இது தான் என் சிறந்த நாடகம்" என்று சொல்லி விட்டார்!

அத்தனை தன்னம்பிக்கை அவருக்கு!

கோமல் ஒரு அபாரமான படிப்பாளி. அரசியல், இலக்கியம், சமூகம், பொருளாதாரம், ஆன்மிகம், சரித்திரம் என்று கிடைக்கிற எதையும் படிப்பார். தேடித் தேடியும் படிப்பார். 'எப்படி இவருக்கு இத்தனை படிக்க நேரம் கிடைக்கிறது - அதுவும் நுனிப்புல் மேயாமல் ஆழமாக?' என்று எனக்கு ஆச்சர்யமாக இருக்கும்.

மலையாள இலக்கியங்களை மூலத்திலேயே படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தால் 'மலையாள சுயபோதினி' என்ற நூலை வாங்கி வைத்துக் கொண்டு, தானே மலையாளம் கற்றுக் கொண்டார்.

அப்போது அவருக்கு வயது 54!

கோமலை ஒரு கம்யூனிஸ்ட் என்றே பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது உண்மையல்ல! மற்ற சித்தாந்தங்களை விட கம்யூனிஸ சித்தாந்தத்தில் அவருக்குச் சற்றுக் கூடுதல் பிடிப்பு உண்டு. அவ்வளவுதான்.

அதே போல் அவரை ஒரு ஆத்திகர் என்று சொல்ல முடியாது. ஆனால் பிரசித்தி பெற்ற கோயில்களுக்கு விரும்பித் தேடிச் செல்வார்! கேட்டால், "பல்லாயிரக்கணக்கானவர்கள் போய் வருகிறார்களே, அப்படி என்னதான் அங்கு இருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்காகத்தான் போகிறேன்" என்பார்!

அவருடைய சில கனவுகள் நிறைவேறாது போய் விட்டன. சத்யஜித்ரே, மிருணாள் சென் போல 'காம்ப்ரமைஸ்' இல்லாத, அதே சமயம் வெற்றிகரமாக ஓடக்கூடிய தமிழ்ப் படங்களை அவர் உருவாக்க விரும்பினார். 'ஓர் இந்தியக் கனவு' படம் கூட அவர் நினைத்தபடி வரவில்லை என்று வருத்தப்படுவார். தமது பல நல்ல திரைக்கதைகளைப் படமாக்க யாரும் முன்வராதது பற்றி கோமலுக்குக் கொஞ்சம் வருத்தம் உண்டு!

கோமலின் இன்னொரு கனவு – 'சுபமங்களா' பத்திரிகை வாயிலாக, மாதம்தோறும் ஓர் உயர்தர இலக்கிய நூல் வெளியிட வேண்டும் என்பது. அத்திட்டம் வடிவம் பெறுவதற்குள் கோமல் மறைந்து விட்டார்!

இழப்பு, சாமானியமானதல்ல!

- வாத்தியார் ராமன்



தோழன்/தோழி என்பவர் யார்?

சுருக் நறுக் போட்டி – 2 முடிவுகள்

தோழன்/தோழி என்பவர்...

● கோடி கோடி குற்றங்கள் செய்தாலும் ஓடி ஓடி வந்து காப்பாற்றி விடுபவரே ஆவார்.

– என். கீதா, சென்னை – 28.

● கண்ணுக்கு ஒளிதரும் கண்ணாடியைத் தாங்கும் காதுகளையும் மூக்கையும் போல இருக்க வேண்டும்!

– ஞா. ஞானமுத்து, சென்னை – 28.

● நம்மைப் பற்றி எல்லாம் தெரிந்தும் நம்மை நேசிப்பவர்.

– புதுவை சந்திரஹரி, புதுச்சேரி – 1.

● தொலைக்காட்சியும் Top-10ம் போல இருக்க வேண்டும்!

– ஏ. கோவிந்தன், திருவண்ணாமலை.

● மனப்புழுக்கத்துக்குத் தென்றல் போல இதமும், வேறுபட்ட கருத்துக்கள் கொண்டாலும் ஒத்த உணர்வும் உடையவர்.

– கலையரசி ராமதாஸ், கடலூர்.

● கண்டிப்பதில் தந்தை; கனிவில் தாய்; காப்பதில் தெய்வம்; போதனையில் ஆசான்; காமமற்ற காதலின் மறு உருவம்!

– எல். அபர்ணா, பம்பாய் – 37.

● துன்பத்தைத் துடைக்கும் கரமாகவும், தவறுகளைத் திருத்தும் அமைச்சராகவும், மனதுக்கு இனிய புத்தகம் போலவும் ஆனவர்.

– வி. எம். சுந்தரம், வி.கே.புரம்.

மேற்கண்ட சொல்லோவியங்கள் ரூ. 50/- பரிசு பெறுகின்றன.

பஞ்சாயத்துத் தேர்தல்ல நிக்கலாம்னு பார்த்தா... ஒரே ஷாக்!



• வடிவேலு

பஞ்சாயத்துத் தேர்தல் பற்றிய பரபரப்பு கூடிக் கொண்டே வருகிறது. ஒரு பக்கம் 'பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் குறிப்பிட்ட தொகுதிகள் ஒதுக்கப்படவில்லை' என்று நீதிமன்றக் கதவுகள் தட்டப்பட்டிருக்கின்றன. மற்றொரு பக்கம் எதிர்க்கட்சிக்காரர்கள், 'அண்ணா தி.மு.க.வினர் அதிகாரிகளின் துணையோடு தங்கள் வெற்றி வாய்ப்புக்கு ஏற்றபடி தொகுதிகளை, பெண்கள் மற்றும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 'மாற்றி ஒதுக்கீடு செய்துள்ளனர்' என்று மேடை தோறும் முழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

இதற்கிடையில் புதிதாக ஒரு பிரச்னை. சில இடங்களில் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் பல பேருடைய பெயர்கள் மிஸ்ஸிங்: அதுவும் ஆயிரக்கணக்கில்!

சென்னை திருவான்மியூரை ஒட்டியுள்ள கொட்டிவாக்கம் ஊராட்சியைச் சேர்ந்தது இளங்கோ நகர், வெங்கடேசபுரம் மற்றும் நேரு நகர். பக்கிங்காம் கால்வாய் மேட்டிலுள்ள இந்தப் பகுதிகளில் மட்டும் 3,000 வாக்காளர்களின் பெயர்கள் விடுபட்டுப் போயிருக்கின்றன! மக்கள் விடுவதாக இல்லை. pillar to post என்பார்களே, அது போல அலுவலகம் மாறி அலுவலகம் சென்றாவது காரியத்தை முடித்துக் காட்டுவோம் என்று விடாக்கண்டர்களாய்ப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். என்ன தான் நடந்தது?

"1993-ம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் என்னுடைய வரிசை எண் 3347. பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தின் வார்டு உறுப்பினர் பதவிக்குப் போட்டியிடலாமென்று போய்ப் பார்த்தேன். 1995-ம் ஆண்டு பட்டியலில் என் பெயர் இல்லை. என் பெயர் மட்டுமல்லாமல் சுமார் 3,000 பேருடைய பெயர்கள் விட்டுப் போனதைக் கண்டுபிடித்தோம். பின்னர் ஊராட்சி அலுவலகத்தைத் தொடர்பு கொண்டோம். அவர்கள் ஒன்றிய அலுவலகத்தைக் காட்டினார்கள். அங்கேயும் ஒன்றும் நடக்கவில்லை. பிறகு காஞ்சிபுரம் கலெக்டர் அலுவலகம் சென்றோம். 'சைதாப்பேட்டை தாசில்தார் அலுவலகம் செல்லுங்கள்' என்று அனுப்பிவிட்டார்கள். அங்கு போய் தேர்தல் பிரிவை அணுகியபோது, 'விண்ணப்ப பாரத்தில் எழுதிக் கொடுங்கள்' என்று சொல்லி ஐம்பது விண்ணப்பப் படிவங்களைக் கொடுத்தார்கள். '3,000 பேருக்கு ஐம்பது ஃபாரம் போதாதே' என்றபோது, 'நகல் எடுத்துக் கொள்ளுங்கள்' என்றனர். 'நிறைய செலவாகுமே' என்ற போது, 'சரி, வெள்ளைப் பேப்பரில் வரிசையாக விடுபட்டுப் போன பெயர்களை எழுதி மனு கொடுங்கள்' என்றனர்.

"வீடு வீடாகப் போய் பட்டியல் எடுத்து அப்படி எழுதிக் கொடுத்த போது, வேதாளக் கதையாக, 'இதை நாங்கள் ஏற்க முடியாது. ஒவ்வொருவரும் தனித்தனியாக ஃபாரத்தில் எழுதிக் கொடுங்கள்' என்று லொள்ளு பண்ணுகிறார்கள்" - எரிச்சலுடன் சொன்னவர் வடிவேலு. கொட்டிவாக்கம் ஊராட்சி அ.தி.மு.க. பேரவைத் தலைவர் இவர்.

இந்தப் பிரச்னையில், மற்ற எதிர்க்கட்சிக்காரர்களை விட

அ.தி.மு.க.வைச் சேர்ந்த நடராஜ், பூபதி போன்றோர் மிகவும் தீவிரமாக இறங்கி வேலை செய்கிறார்கள்.

"பட்டியலில் இந்த முறை எப்படிப் பெயர்கள் விட்டுப் போனது?"

"1993-ம் ஆண்டு பட்டியலில் விடுபட்டோரைப் பற்றிய விவரங்களைச் சமீபத்தில் எடுத்திருக்கிறார்கள். 1995-ம் ஆண்டு பட்டியல் அச்சிட்ட போது, பழைய லிஸ்டுடன் விடுபட்டோரையும் சேர்த்து மொத்தமாக அச்சிடுவதற்குப் பதிலாக விடுபட்டோர்களைக் கொண்ட லிஸ்ட் மட்டும் 1995-ன் மொத்த லிஸ்டாக... அல்லது வேறு ஏதாவது குளறுபடிகளைச் செய்திருக்க வேண்டும். ஆனால் அதிகாரிகள் தங்கள் தவறை மறைக்கப் பார்க்கிறார்கள்!" என்றார் நடராஜ்.

"அ.தி.மு.க.வினர் போன்று, இந்தப் பிரச்னையில் நீங்கள் ஏன் தீவிரமாக இறங்கவில்லை?" என்று ம.தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் அண்ணாத்துரையைக் கேட்டோம்.

"அப்படியெல்லாம் கட்சி வேறுபாட்டோடு இங்கே பொதுப் பிரச்னைகளை அணுகுவதில்லை. சாலை வசதி, குடிதண்ணீர், மின்விளக்கு போன்றவற்றுக்கு நாங்கள் ஒன்றுபட்டே போராடியுள்ளோம். தேர்தலின் போது கட்சி சார்பாக நிற்பதோடு சரி. மற்றபடி உள்ளூர்ப் பிரச்னைகள் என்று வரும் போது எங்களிடையே எந்தவிதமான வேறுபாடுகளும் இல்லை. வாக்காளர் பட்டியலில் பெயர்கள் விடுபட்டுப் போன பிரச்னையில் எங்களுடைய முழு ஒத்துழைப்பையும் கொடுத்துள்ளோம்..." என்றார் அண்ணாத்துரை.

இங்குள்ள அ.தி.மு.க. வளாகத்தில் கணிசமான அளவுக்கு ரஜினி ரசிகர்களும் இருக்கிறார்கள். (தலைவர் கட்சி ஆரம்பிச்சாரனா அங்கே போய் விடுவோம்' என்கிறார்கள்!)

1993 ஆம் ஆண்டின் வாக்காளர் பட்டியல்

		கௌரி (ஸ்ரீமன்) பெ 3[illegible]
	[405]	வெம்பு (பரமசிவம்) ஆ 35
334[illegible]	.....	ஜானகி (வெம்பு) பெ 31
3343	.....	சுந்தரம் (எசக்கி) ஆ 42
3344	.....	பட்டம்மாள் (சுந்தரம்) பெ 38
3345	.....	கணேசன் (சுந்தரம்) ஆ 29
3346	.....	மல்லிகா (கணேசன்) பெ 26
3347	[406]	வடிவேலு (குப்புசாமி) ஆ 30
3348	.....	அஞ்சலை (வடிவேலு) பெ 28
3349	.....	கருணாநிதி (முனுசாமி) ஆ 28
3350	.....	லலிதா (கருணாநிதி) பெ 22
3351	.....	சாமிகண்ணு (செல்லப்பன்) ஆ [illegible]
3352	.....	செங்கமலம் (செல்லப்பன்) [illegible] 65
3353	.....	புஷ்பா (சாமி[illegible]) [illegible]
3354	.....	[illegible]
		ராஜேந்திர[illegible]



• அனைத்துக் கட்சியினரின் ஒன்றுபட்டப் போராட்டம்.

"கேட்க ஆளில்லாததால் ஊராட்சி நிர்வாகம் எப்படி பாழ்பட்டுக் கொண்டிருக்கிறது! நேரு நகரில் ஒன்றரை லட்சம் செலவில் சாலை போட்டதாச் சொல்லி பில் வாங்கிட்டாங்க. ஆனால் சும்மா அங்கே இங்கே மண்ணை மட்டும் கொட்டியிருக்காங்க! தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி உறுப்பினர்கள் இருந்தா இதுபோன்ற அநியாயங்களைத் தட்டிக் கேட்கலாமே..." என்று சொல்கிறார் வடிவேலு.

சட்டச் சிக்கல்களில் மாட்டிக் கொண்டு ஒருவேளை பஞ்சாயத்துத் தேர்தல் நடக்காமலே போனால்...?

"எப்படியும் விடுபட்டுப் போன 3,000 பேரைச் சேர்த்தே ஆகணும். ஏனென்றால் அடுத்து சட்டமன்ற, பாராளுமன்றத் தேர்தல்கள் வருகின்றன. நாங்கள் சோர்ந்து போய் உட்கார்ந்து விட்டால் அந்தத் தேர்தல்களில் வோட்டுப் போட முடியாதே!" என்கிறார்கள் வடிவேலுவோடு சேர்ந்து மற்றவர்களும்!

- ப்ரியன்

படங்கள் : ராஜன்

பாபா-70

ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் எழுபதாவது பிறந்த தினத்தையொட்டி, சென்னையில் ஒரு பொதுக் கூட்டம் சமீபத்தில் நடந்தது. தமிழ்நாட்டின் ஸ்ரீ சத்ய சாயி சேவா அமைப்புகள் இணைந்து நடத்திய இக் கூட்டத்தின் எளிமையும் அமைதியும் கட்டுக்கோப்பும் பாபா உணர்த்தும் கோட்பாடுகளுக்கு உதாரணமாக அமைந்திருந்தன. கூட்டத்தில் அச்சிட்டு வழங்கிய பகவானின் அருளுரையிலிருந்து சில பகுதிகள்....



◆ காலத்தை வீணாக்காதே. காலம்தான் கடவுள். காலாய நம:, கால காலாய நம:, காலகர்த்த கமனாய நம: கால தீர்த்தாய நம: காலஸ்வரூபாய நம: காலநிர்மிதாய நம:, எல்லாமே காலம்தான். காலத்தை வீணடிப்பது என்பது வாழ்க்கையையே வீணாக்குவதுதான். ஒழுங்காக சேவை செய்வதில் காலத்தைப் பயன்படுத்து....

◆ இன்று இந்தியாவில் கடவுளை நினைக்காதவர்கள் ஒருவரும் இல்லை. ஆனால் அவர்கள் கடவுளின் பணிகளில் பங்கேற்பதில்லை. எப்போதும் பிறருக்குத் தொண்டாற்றுவது என்பதே கடவுளின் பணி. மற்றவர்களுக்கு உதவக் கூடிய காரியங்களில் நாம் பங்கேற்க வேண்டும். நல்ல நடத்தை, நல்ல எண்ணங்கள், நல்ல ஒழுக்கம் - இவைதான் நற்பணியாற்றுவதற்குத் தேவையானவை. இதன் மூலம் இறையருள் கிடைக்கும்.

◆ ஒருவனுக்குச் சம்பளமாக ஆயிரக்கணக்கான ரூபாய் தரப்படுகிறது. அவன் நூறு ரூபாய் பெறுமானமுள்ள வேலையைக் கூடச் செய்வதில்லை. குறைந்த பட்சம் நீ வாங்குகிற சம்பளத்துக்கு ஏற்ற அளவாவது வேலை செய். அப்போது இந்தியா மிகவும் முன்னேற்றமடையும். ஆனால் 'குறைவான வேலை, அதிகமான ஊதியம்' என்பதே கொள்கையாகிவிட்டது போல் தோன்றுகிறது. இது நாசகரமானது. இந்த நாட்டுக்காகப் பணியாற்று. 'இது என்னுடைய தேசம்... இது என் தாய் நிலம்' என்கிற ஈடுபாட்டுடன் பணியாற்று. இந்த விதமான உரிமையுணர்வையே நாம் மக்களிடம் வளர்க்க வேண்டும்.

◆ ஆயிரக் கணக்கான ஆண்டுகள் முயன்ற பின் இன்றைய விஞ்ஞானிகள் ஒவ்வோர் அணுவும் கடவுளின் தோற்றம் என்பதை உணர்கிறார்கள். ஆனால் திரேதா யுகத்திலேயே, அந்தச் சிறுவன் பிரகலாதன் இதை அறிந்திருந்தான். 'இறைவன் அங்கே இல்லை; இங்கே இருக்கிறான்' என்பது போன்ற சந்தேகம் வேண்டாம். எங்கெங்கு தேடினாலும், அங்கே அவன் இருப்பான்'' என்று அவன் சொன்னான்.

தொகுப்பு : **கலைசை**

✉ கான்ட்ராஸ்ட் கதாநாயகர்கள் - அட்டைப்படக் கட்டுரை படித்தேன். வியாபாரரீதியில் கமலை விட ரஜினி என்றுமே வெற்றி நடிகராக வலம் வருகிறார் என்பதை சரியாக எழுதியுள்ளீர்கள். மகிழ்ச்சி. கமல் தனது திறமைகளை வளர்ப்பதிலும், அதனை வெளிக் காட்டுவதிலுமே அக்கறை செலுத்துவது உண்மைதான். கமலின் திறமையை ரசிகர்கள் உணர்வர். ஆனால் அதற்காகத் தனது வியாபார ரீதியிலான வெற்றியை ஒவ்வொரு படத்திலும் 'பணயம்' வைப்பதைத்தான் அவர்கள் விரும்பவில்லை. கமல் இனி யோசிக்கட்டும்.

மணக்காடு, சி. தெ. ரஜினி அருள்.

✉ கான்ட்ராஸ்ட் கதாநாயகர்கள் கமல், ரஜினி பற்றிய அலசல் அசத்தல். இருவரும் இணைந்து நடிக்க சம்மதம் தெரிவித்தால் போதும், மகா டைரக்டர்கள் சிலிர்த்துக் கொண்டு தயாராகி விடுவார்கள்!

பொன்மலை, ஆர். பிரகாஷ்.

✉ 'பி.ஜே.பி.யின் மாயா(வதி) ஜாலம்' படித்தேன். காங்கிரஸ"க்கு மாற்றாக உருவாகிய நல்ல கட்சி என்று எல்லாரும் நினைத்துக் கொண்டிருக்கையில், 'காங்கிரஸே தேவலாம்' என்கிற மாதிரியல்லவா பி.ஜே.பி. நடந்து கொள்கிறது! மஹாபாரதத்தில், "ஒரு மனிதனுடைய உண்மையான குணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அவன் கையில் அதிகாரத்தையோ அல்லது பணத்தையோ கொடுத்துப்பார்" என்று சொல்லப்பட்டிருக்கும். இப்போது அதுதான் ஞாபகம் வருகிறது!

அந்தியூர், மு. தவசியப்பன்.

✉ விஷ சாராயத்தினால் விலைமதிக்க முடியாத மனித உயிர்கள் மடிவதும், மடிந்தவர்கள் குடும்பங்களுக்கு முதல்வர் நிதி வழங்குவதும் முதல்வருக்கு 'பரோபகாரி' என்ற விளம்பரத்தை வேண்டுமானால் தேடித் தரலாம். ஆனால் மிகப் பிரம்மாண்டமாக விழா எடுத்து, போலீஸாருக்கு பதக்கம் வழங்கும் முதல்வர், இதுபோன்ற சம்பவங்கள் நடக்கக் காரணமான காவல் துறை ஊழியர்களுக்கு மிகக் கடுமையான தண்டனையும் வழங்க வேண்டும்.

மதுரை - 4, வீ. பா. கிருஷ்ணன்.

✉ அடிப்படை வசதிகளே இல்லாமல் அல்லாடிக் கொண்டிருக்கும் சங்கர் போன்ற பிளாட்பாரவாசிகளின் அன்றாட வாழ்க்கை எவ்வளவு சிக்கலில் இருக்கிறது என்பதை அறியும்போது மனம் வேதனையில் துடிக்கிறது. இந்த லட்சணத்தில், தமிழகத்தை ஆளும் கூட்டம் தமது ஆட்சியை 'பொற்கால ஆட்சி' என்று தம்பட்டம் அடித்து வருவது எத்தனை வெட்கக்கேடு!

மணக்காடு, ஸ்ரீலலிதா மேரி.

✉ இருட்டு அரண்மனைகள் தொடரில், 'இன்னும் உயிருடன் வேதனையில் கால்களையும், மீசையையும் இயந்திர கதியில் அசைத்துக் கொண்டிருந்தது' என்று படித்த போது அந்தக் கரப்பான் பூச்சியை நானே விடுவிக்க வேண்டும் எனத் தோன்றியது. தத்ரூபமான வருணனை.

சென்னை - 34, ச. நாகரத்தினம்.

✉ பட்டுக்கோட்டை பிரபாகரின் 'வயசு' படித்தேன். காலமும் சூழலும் அமையுமாயின் "வயசு"க்குத் தக்கபடி மனம் சஞ்சலப்பட்டே தீரும் என்பதை உணர்த்திய படைப்பு.

திருவண்ணாமலை, என். சண்முகம்.

✉ 24-ம் தேதியன்று நிகழ்ந்த கிரகணம் பற்றிய செய்தி 26-ம் தேதி எங்கள் பார்வையில்! சுடச்சுட அப்-டு-டேட் நியூஸ்! வெல்டன் கல்கி!

பவித்திரமாணிக்கம், டி. வரதன்.

ரூ. 20/- பரிசுக் கடிதம்

✉ அ.இ.அ.தி.மு.க. 1100 ஜோடிகளுக்குத் திருமணம் நடத்திய விழாவில் ஜெயலலிதா பேசுகையில், "ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள் என்ற குடும்பப் பாச உணர்வில் கட்டுப்பட்ட மாபெரும் குடும்பம் அ.தி.மு.க." என்று கூறியுள்ளார். உண்மையிலேயே அப்பேர்ப்பட்ட குடும்பப் பாச உணர்வு கொண்டவராக இருந்தால் தன் வளர்ப்பு மகனுக்கு நடத்திய திருமணத்தோடு இந்த 1100 ஜோடிகளையும் சேர்த்து 1101 ஜோடி திருமண விழாவாக நடத்தியிருக்கலாம். அப்படிச் செய்திருந்தால் ஆடம்பரச் செலவு செய்தார் என்ற பழிச் சொல் இல்லாமல், "1101 ஜோடிகளுக்குத் திருமணங்கள் நடத்தியதால்தான் பணம் கோடிக் கணக்கில் செலவு செய்யப்பட்டது" என்று நியாயப்படுத்துவதோடு தொண்டர்களுக்கும் வளர்ப்பு மகனுக்கும் இடையே எந்த ஒரு வித்தியாசமும் பாராட்டாமல் சமுகநீதி காத்த தன்னிகரில்லா புரட்சித் தலைவி என்ற பாராட்டையும் எளிதில் பெற்றிருக்கலாமே!

சேலம் - 6, அ. ந. அழகிரிசாமி.

வட்டமேஜை

பதிவு எண்: 26383 போன்: 583241

கல்பதரு பெனிபிட் பண்டு லிமிடெட்

(கம்பெனிகள் சட்டப்படி பதிவு செய்து நிறுவப்பட்டது)
பதிவு அலுவலகம்: 134, ராசப்ப செட்டி தெரு,
(ஸ்ரீ கந்தகோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-600 003.

பிக்சட் டிபாசிட் திட்டம் மாத வட்டிக்கான காசோலைகள் முன் கூட்டியே வழங்கப்படும்

காலம்	46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு
வருட வட்டி வீதம்	14%	15%	16%	17.5%	18.5%	19%	19.5%	20% *



குபேரன் வைப்பு திட்டம்

வட்டி 21% குறைந்த அளவு டிபாசிட் ரூ. 50,000/- காலம் : 5 வருடம்.
மாத வட்டிக்கான செக்குகள் முன்னதாகவே வழங்கப்படும்



அமுத சுரபி டிபாசிட் திட்டம்

டிபாசிட் தொகை	காலம்	கிடைக்கும் தொகை
ரூ. 5,600	15 வருடம்	ரூ. 1,00,000
ரூ. 7,000		ரூ. 1,25,000



கல்பதரு மணிபேக் திட்டம்

அ) பிரதி மாதம் ரூ.100/- வீதம் தொடர்ந்து 15 வருடம் செலுத்த வேண்டும்.
முதல் 5ம் ஆண்டு முடிவில் நீங்கள் செலுத்திய ரூ. 6000/-ஐ பெறுவீர் !
2வது 5ம் ஆண்டு முடிவில் மீண்டும் ரூ.6000/-ஐ பெறுவீர் !
3வது 5ம் ஆண்டு முடிவில் ரூ.51,000/-ஐ பெறுவீர் !



முதியவர் நலத்திட்டம்: வயோதிகர் விதவைகள் கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

தொகை	காலம்	வட்டிவீதம்
ரூ. 10,000	12 மாதங்கள்	20%
ரூ. 10,000 கீழ்		19%

சேமிப்பு டிபாசிட் திட்டம் - 10% வரை வட்டி வழங்கப்படும்





கடன்

நகைகள் பேரில் கிராம் 1க்கு ரூ.300/- வழங்கப்படும்
சென்னை மாநகரில் உள்ள சொத்துக்கள் பேரிலும் வழங்கப்படும்

வட்டி விகிதம் ரூ.1.95

அலுவலக நேரம் : காலை 8.30 முதல் 12.30 வரை மாலை 2.00 முதல் 6.00 வரை ஞாயிறு காலை 8.30 முதல் 12.30 வரை

பயன் பெற ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். (செவ்வாய் விடுமுறை) பாதுகாப்பு • சேவை • சுபிட்சம்

5 மாலை மயங்குகின்ற நேரம்

ரமணிசந்திரன்

உள்ளே படபடத்ததை மறைத்து, "பார்த்தால் தெரியவில்லை? தூக்கம் வராததால் படிப்பதற்குப் புத்தகம் எடுத்துக் கொண்டு இருக்கிறேன்!" என்று மிடுக்காக மொழிந்தாள் உதயரேகா.

தன் கேள்விக்குக் கிடைத்த பதிலில் கிருஷ்ணசந்திரனின் கோபம் மிகுதியாயிற்று என்றே சொல்லலாம். "புத்தகம்? புத்தகம் எடுக்கிற நேரமா இது?" என்று எரிந்து விழுந்தான்.

"ஏன், நேரத்திற்கு என்ன?" என்றாள் உதயரேகா. "சொல்லப் போனால், இதுதான் சரியான நேரம். பாருங்கள் மிஸ்டர் கிருஷ்ணசந்திரன், பகலில் பொழுது போகவில்லையென்றால் என்னென்னவோ செய்யலாம். குறைந்தது கூடச் சேர்ந்து பேசவேனும் ஆள் கிடைக்கும். இந்த நேரத்தில் தனியாகப் படிப்பது மட்டும்தான் செய்ய முடிகிற காரியம்" என்று நிதானமாக விளக்கினாள்.

"ஆனால் இரவில், இப்படி இரவு உடையில் சுற்றுவது ஆபத்து என்று தெரியாதா?"

"என்ன ஆபத்து?" என்று புருவத்தைச் சுருக்கியவள், உடனேயே அலட்சியமாகத் தோளைக் குலுக்கினாள். "எந்த ஆபத்திலும் என் கராத்தே எனக்குக் கை கொடுக்கும்."

"அப்படியா? ஆனால், இந்த நாட்டில் உனக்கு மட்டும்தான் கராத்தே கற்றுக் கொடுக்க வேண்டும் என்று ஏதாவது சட்டம்... கட்டாயம் இருக்கிறதா?" என்றான் அவன் கேலியாக.

விழி அகல, "ஓ!" என்றாள் உதயரேகா.

"ஆமாம். 'ஓ...'வேதான். ஆசிரியருக்குப் பதிலாக அடிக்கடி வகுப்பு எடுக்கும் அளவுக்கு நான் கெட்டிக்காரன். எனவே, இப்போது என்ன செய்யப் போவதாக உத்தேசம்?" என்று கேலியாகக் கேட்டபடியே அவளை நோக்கி முன்னேறினான் அவன்.

சற்றுத் திகைத்து, உதயா பின்னடைந்தாள்.

இதை அவள் எதிர் பார்க்கவில்லையே! 'ஒரு மாதிரிப்பட்ட' இடங்களுக்குப் போகிறவன் ராமபிரானாக இருப்பான் என்று எண்ணி வந்தால் அது மடத்தனம்தான். ஆனால், காந்திமதி - செல்வரங்கத்தினுடைய பிள்ளை, அவர்களது சொந்த வீட்டில்.. ஊஹூம். சும்மா மிரட்டுகிறான்.

"நானும் கெட்டிக்காரிதான். நம் சண்டையில் மிக அபூர்வமான இந்தப் புத்தகங்கள் என்ன ஆகும்? யோசியுங்கள்" என்று அவள் எச்சரிக்கவும், அவன் நின்று வாய்விட்டு நகைத்தான்.

அவள் திகைத்து நோக்குகையில், "என்னை மாதிரி ஒரு பயங்கர வில்லன், இப்படி ஓர் அருமையான வாய்ப்புக் கிடைத்திருக்கிற போது, இந்தப் புத்தகங்களுக்காக அதை விட்டு விடுவானா? நீயும்தான் கொஞ்சம் மூளைக்கு வேலை கொடுத்துப் பாரேன்!" என்று கேட்டு விட்டு மீண்டும் சிரித்தான்.

அகங்காரச் சிரிப்போ, வெற்றிச் சிரிப்போ அல்ல; ஆனால், வேறு எதையும் யோசிக்க விடாமல் அவளது மூளையைச் செயலிழக்கச் செய்தது அது.

அவள் அயர்ந்து நிற்கையிலேயே, விரைவான ஓர் அசைவில் முன்னே வந்து அவளைப் பற்றித் தூக்கி, "இப்படியே என் அறைக்கு உன்னைக் கொண்டு சென்று விட்டால்?" என்று அவன் வினவவும் உதயாவுக்கு மயிர்க்கூச்செறிந்தது. கூடவே, அவனிடம் ஒரு சிரிப்பை அவளால் உணர முடிந்தது.

அவளுக்கு ஓர் ஆணின் இந்த நெருக்கம் புதிது; ஆனால் அவனுக்கு? ஒருவேளை, எந்தப் பெண்ணைத் தொட்டாலும், இவனுக்கு இப்படித்தான் சிலிர்க்குமோ?

கண நேர மவுனத்தின் பின், நெருப்பு சுட்டது போல அவளை இறக்கி நிறுத்தினான் கிருஷ்ணசந்திரன். "நல்ல நேரம் பார்த்து வந்தாய்! முதலில், இந்த இடத்தை விட்டு வெளியேறு... ஓடு..." என்று விரட்டியவன், அவள் ஒன்றும் புரியாதவள் போல அப்படியே நிற்கவும், அவள் கையைப் பற்றி வேகமாக இழுத்துச் சென்றான்.

கதவை அடைந்ததும், நின்று, கதவைத் திறக்க முயன்றால், முடியாது போயிற்று.

சற்று முன் ஏற்பட்ட பதற்றம் அடியோடு மறைந்துவிட, கிருஷ்ணசந்திரனின் திகைப்பையும் திணறலையும் கால தாமதமாக வேடிக்கை பார்த்தாள் உதயா.

இரண்டு மூன்று தரம் கதவுக் குமிழைத் திருகி, உலுக்கி, தாழ்ப்பாள் இருந்த பகுதியில் லேசாகத் தட்டி அவன் பலவாறாக முயற்சி

செய்யச் செய்ய, உதயரேகாவுக்குப் பழைய திடம் முழுமையாகவே திரும்பி விட்டது. அவனைப் பற்றிய அவளது கணிப்பு நூற்றுக்கு நூறு சரியே.

சில நிமிடங்கள், கிருஷ்ணசந்திரனின் பதற்றத்தை ரசித்திருந்து விட்டு, "சரியான ஓட்டை வீடு. உங்கள் தாத்தாவுடைய தாத்தா கட்டிய வீடாக்கும்!" என்றாள் ஏளனமும் கிண்டலுமாக.

"நிலைமை புரியாமல், என்ன பேச்சு இது?" என்று எரிச்சல் காட்டினான் அவன்.

"என்ன நிலைமை?" என்றாள் அவள் புரியாதது போன்ற பாவனையுடன்.

"இப்போது நீ வெளியே போக இயலாது."

"ஏனோ? யாரையாவது கூப்பிட்டு வெளிப் புறமாகக் கதவைத் திறக்கச் சொல்ல வேண்டியது தானே?"

"அறிவிருக்கிறதா உனக்கு?" என்றான் அவன் ஆத்திரத்துடன். "இந்த நேரத்தில் நாம் இருவரும் இங்கே தனியே இருப்பது வெளியே தெரிந்தால் என்ன ஆகும்? இந்த அழகில் 'நைட்டி' வேறு. எதையாவது ஒழுங்காக உடுத்துக் கொண்டாவது வந்திருக்கக் கூடாதா?"

"எத்தனையோ பேர் 'நைட்டியில்' கடைகளுக்கு... கோயிலுக்குக் கூடப் போகிறார்கள்."

"அவர்கள் யாரும் அன்னிய இளைஞன் ஒருவன் தனியே இருக்கும் இடத்துக்கு அர்த்தராத்திரியில் போய் நிற்க மாட்டார்கள்."

"ஒரு புத்தகம் - தூக்கம் வரவில்லையே என்று படிப்பதற்கு ஒரு புத்தகம் எடுக்க வந்தால் அதற்கு இத்தனை விமரிசனமா?" என்று சாது வாய்க் கையை விரித்தாள் உதயரேகா.

ஒரு கணம் பேசாதிருந்து விட்டு, "உன்னைச் சொல்லியும் குற்றம் இல்லை. ஆனால், இந்த நேரத்தில், நீ இங்கே இருப்பது வெளியே தெரிந்தால், உன் பெயர்தான் கெட்டுப் போகும். அதனால்..." என்று அவன் கூறிய போது, உதயாவுக்கு உள்ளூரச் சிரிப்பு வந்த போதும் மனதுக்கு இதமாகவும் இருந்தது. அவன் அவளுக்காக, அவளது நல்ல பெயருக்காக அல்லவா கவலைப்படுகிறான்?



"...ஒன்று செய்யலாம். ஒரு போர்வை தலையணையோடு நான் இந்த அறையில் படுத்துக் கொள்கிறேன். நீ உள்ளே என் அறையில் படுத்துத் தூங்கு. உட்புறம் தாளிட்டுக் கொள்ளலாம். விடிந்ததும், யாரையாவது அழைத்துக் கதவைத் திறக்கும் வரை மறைந்திருந்து விட்டு யாரும் அறியாமல் போய் விடு" என்றான் கிருஷ்ண சந்திரன்.

கிட்டத்தட்ட இன்றைய ஏற்பாடுதான்.



ஸ்ரீராம் நிறுவனங்கள் நடத்தும் மகாகவி பாரதியார் 114-ஆவது பிறந்த நாள் விழா

மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டி

மொத்தப் பரிசு ரூ. 20,000/-

முதல் சுற்றுப் போட்டி திருச்சி, மதுரை, கோவை, சென்னை மற்றும் காரைக்குடி நகரங்களில் நடைபெறும், நிறைவுப் போட்டி சென்னையில்.

* (மாணவர்கள் என்று கூறும்போது மாணாக்கியர்களும் சேர்வர்)

ஆண்டுதோறும் நடத்துவது போல் இந்த ஆண்டும் மாணவ/மாணாக்கியர் களுக்கு மகாகவி பாரதியார் இலக்கியத்திலும், ஈடுபாட்டிலும் பேச்சுத்திறனையும் மேலும் வளர்க்க, நடுநிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குப் பேச்சுப்போட்டி நடத்த முடிவு செய்துள்ளோம். இந்தப் போட்டி திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், சென்னை, காரைக்குடி நகரங்களில் நடைபெறும். ஒவ்வொரு நகரத்திலிருந்தும் நிறைவுப் போட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்படுப வர்கள் சென்னைக்கு வந்து செல்லப் பயணச் செலவு, தங்குமிடம், உணவுச் செலவுக்காக ரூ. 250/ - அளிக்கப்படும் (சென்னை நீங்கலாக). பேசுபவர்கள் 5 மணித்துளிக்குள் பேச வேண்டும். நடுவர்கள் தீர்ப்பே முடிவானது.

பேச்சுப் போட்டி நடைபெறும் இடங்கள்

கோவை : 03.12.95
காலை 9 மணி
இடம் : மணி மேல்நிலைப் பள்ளி G.K.N.M. ஆஸ்பத்திரி எதிரில், பாப்பநாயக்கன் பாளையம், கோவை - 641 037

திருச்சி : 03.12.95
காலை 9 மணி
இடம் : E.R. மேல்நிலைப் பள்ளி சிந்தாமணி (அண்ணா சிலை அருகில்) திருச்சி - 620 002.

மதுரை : 02.12.95
காலை 9 மணி
இடம் : தூய பிருட்டோ ஹையர் செகண்டரி பள்ளி, ஞான ஒளிவுபுரம், அரசரடி, மதுரை - 625 016

காரைக்குடி : 03.12.95
காலை 9 மணி
இடம் : ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் மேல்நிலைப்பள்ளி நகர் சிவன் கோயில் (தெற்கு) காரைக்குடி-623 001

சென்னை : 03.12.95
காலை 9 மணி
இடம் : பாரத் சீனியர் செகண்டரி பள்ளி 121, காமராஜ் அவென்யூ, (அடையாறு தொலைபேசி நிலையம் எதிரில்), அடையாறு, சென்னை-600 020.

பேச்சுப்போட்டி - 1

(வகுப்பு 6 முதல் 8 வரை)

தலைப்பு :

பாரதி காட்டிய புது நெறி

(அல்லது)

ஒன்று பட்டால் உண்டு வாழ்வு

(ஐந்து மணித்துளிகளுக்கு மிகாமல் பேச வேண்டும். இவற்றுள் ஏதாவது ஒரு தலைப்பில் பேசலாம்) நிறைவுச் சுற்றுக்குச் சிறந்த இருவர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

பேச்சுப்போட்டி - 2

(வகுப்பு 9 முதல் 12 வரை)

தலைப்பு:

இன்று புதிதாய்ப் பிறந்தோம்

(அல்லது)

இனி ஒரு விதி செய்வோம்

(ஐந்து மணித்துளிகளுக்கு மிகாமல் பேச வேண்டும். இவற்றுள் ஏதாவது ஒரு தலைப்பில் பேசலாம்) நிறைவுச் சுற்றுக்குச் சிறந்த இருவர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

பேச்சுப் போட்டி - 3

(கல்லூரி பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு - தொழிற்கல்லூரி மாணவ /மாணாக்கியர்கள் மட்டும். அஞ்சல் வழி மூலம் படிப்பவர்கள் நீங்கலாக)

தலைப்பு :

புதிய அறம் பாட வந்த அறிஞன்

அல்லது

பாரதியின் உரை நடைத்திறன்

நிறைவுச் சுற்றுக்குச் சிறந்த இருவர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

போட்டியில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் கவனத்திற்கு:

போட்டியில் பங்கு கொள்ள விரும்பும் மாணவ மணிகள், தங்கள் பள்ளி/கல்லூரியிலிருந்து சான்றுக் கடிதத்துடன் சென்னை, திருச்சி, மதுரை, கோவை, காரைக்குடி நகரத்திலுள்ள ஸ்ரீராம் நிறுவன அலுவலகங்களில் போட்டி நடக்கும் முதல் நாளுக்குள் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். போட்டி தொடங்கியபின் சேர விரும்புபவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். சென்னையில் பங்கு கொள்ள விரும்புபவர்கள் நேரே வந்தோ/தபால் மூலமாகவோ சான்றிதழுடன் பதிவு செய்து அனுமதிச் சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பரிசுகள் (ஒவ்வொரு பிரிவுக்கும்)

முதல் பரிசு	ரூ. 3,000/
இரண்டாவது பரிசு	ரூ. 2,000/-
மூன்றாவது பரிசு	ரூ. 1,000/ -

முதல் பரிசு பெறும் மாணவ/மாணாக்கியர் பயிலும் பள்ளி கல்லூரிக்குக் கேடயங்கள் வழங்கப்படும்.

ஸ்ரீராம் நிறுவனங்கள்

10, கஸ்தூரி எஸ்டேட்,
சென்னை-600 086.
போன்: 4990805/4992113.

பதிவு செய்துக் கொள்ள வேண்டிய கிளைகளின் முகவரி:

சென்னை : 10, கஸ்தூரி எஸ்டேட்,
(ஹோட்டல் சோழா அருகில்)
சென்னை - 600 086.
(தொலைபேசி : 4990805/4992113)

திருச்சி : 22, சித்ரா காம்ப்ளெக்ஸ், முதல்மாடி,
சிந்தாமணி திருச்சி - 620 002
(தொலைபேசி : 34042)

கோவை : 406-C, D.G. காம்ப்ளெக்ஸ்,
இரண்டாவது மாடி,
டாக்டர் நஞ்சப்பா சாலை,
கோவை - 641 018
தொலைபேசி : 231151)

மதுரை : 184, வடக்கு வெளி வீதி,
மதுரை - 625 001.
(தொலைபேசி : 543765)

காரைக்குடி : 34, மஹர் நோன்பு அக்ரஹாரம்,
காரைக்குடி - 623 001
(தொலைபேசி : 22311/23356)

போட்டி நடைபெறும் நேரம்:
காலை 9 மணி முதல் 12 மணி வரை முதல் பிரிவு.
காலை 12 முதல் 2 மணி வரை இரண்டாவது பிரிவு.
பகல் 3 முதல் 5 மணி வரை மூன்றாவது பிரிவு

நிறைவுப்போட்டி : (மேலே குறிப்பிட்டுள்ள நகரங்களில் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்கு) 9.12.95 சனிக்கிழமை காலை 9 மணிக்கு. இடம் : ஹோட்டல் காஞ்சி, கமாண்டர் இன் சீப் சாலை, சென்னை-600 105.

பரிசளிப்பு விழா: 9.12.95 சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சென்னை ஆழ்வார்பேட்டை, டி.டி.கே. சாலையிலுள்ள, நாரதகானசபை அரங்கில் நடைபெறும், மகாகவி பாரதியார் 114-ஆவது பிறந்தநாள் விழாவில் பரிசுகள் வழங்கப்படும்.

ஆனால், இந்த அளவு சினம் இல்லாததால், 'ஜென்டில் மேன்' ஆக அவளுக்குக் கட்டில் மெத்தையை அவனாக விட்டுக் கொடுத்தான். ஆனால் என்றேனும் ஒரு நாள் இந்தக் கோபம் சற்று ஆறிய பிறகு எல்லாவற்றையும் எடுத்துச் சொன்னால் அவன் அதை ஏற்காமலா போய் விடுவான்? உண்மை புரிந்ததும் அவளைத் தலைமேல் தூக்கிக் கொண்டாடப் போகிறான்.

தொப்பென்று அருகில் ஏதோ விழவும் சிந்தனை கலைந்து, இறுக மூடியிருந்த கண்களைத் திறந்து பார்த்தாள் உதயா.

அவள் அருகில் ஒரு போர்வையைப் போட்டுவிட்டு கிருஷ்ணசந்திரன் திரும்பிச் சென்று கொண்டிருந்தான். "போர்த்திக் கொண்டே தூங்கலாம். குளிரில், 'கையது கொண்டு மெய்யது போர்த்தி, காலது கொண்டு மேலது தழுவி' என்று குறுக்கிப் படுத்தால் எங்கேனும் சுளுக்கிக் கொண்டது என்று நாளைக்கு யாரும் என்னைக் குற்றம் சொல்ல வேண்டாம்" என்றான் போகிற போக்கிலேயே.

ஏ.சி. குளிரில், மெய்யாகவே சுருண்டு கிடந்தவள், நன்றியோடு போர்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டாள். உள்ளூர, நம்பிக்கையும் நன்றாகவே தலைதூக்கியது. அவள் நலனை விழைகிற புத்தி இருக்கத்தானே செய்கிறது!

ஆனால், அந்த ஒன்றில், அன்றைக்கும் அவனைக் குற்றம் சொல்ல முடியாது. அவளது பெயர் கெட்டு விடக் கூடாது என்பதற்காக மற்றவர் அறியாமல் அவளை அங்கிருந்து வெளியேற்றி விடக் கிருஷ்ணசந்திரன் முயன்றுதான் பார்த்தான்.

"தமிழர்களின் விழிப்புணர்ச்சிக்கு நீங்க ஏதாவது செய்தா என்ன தலைவரே?"

"வேண்டாம்! விழிப்புணர்ச்சி வந்துட்டா நிதினு நம் கட்சிக்கு எவனும் ஒரு பைசா தர மாட்டான்!"

— உ. ராஜாஜி



ஆனால் அந்த முயற்சி வெற்றி பெற்றால், அப்புறம் உதயரேகாவின் திட்டம் என்ன ஆவது? காலையிலேயே எழுந்து, ஜன்னல் அருகே தவம் கிடந்து, தன்னை வெளிப்படுத்திக் கொண்டாள்.

விஷயம் நேராகக் காந்திமதிக்குச் சென்றிருக்க வேண்டும். ஏனெனில் அவசரமான காலடிகளுடன் வந்து கதவைத் தட்டியது அவர்தான்.

"உள்ளே இருந்து திறக்க முடியவில்லை. அங்கிருந்து முயன்று பாருங்கள்" என்று கிருஷ்ணசந்திரனின் குரலும், கதவு திறக்கும் ஓசையும் கேட்டதும் உதயரேகா மெல்ல வெளியே தலையை நீட்டினாள்.

அவளை விழியால் உறுத்தவன், தாயின் முகம் போன போக்கை காணவும், "உடனே தப்பாக எண்ண வேண்டியது இல்லை. இவள், இரவில் படிக்கப் புத்தகம் எடுக்க வந்தாள். தாழ்ப்பாளில் ஏதோ சிக்கிக் கொண்டு கதவைத் திறக்க முடியவில்லை. அவ்வளவுதான்" என்றான் வரண்ட குரலில்.

"உதயரேகா தப்பு செய்ய மாட்டாள் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். ஆனால் நீ என்ன மாதிரிப் பெயர் சம்பாதித்து வைத்திருக்கிறாய்? கூடவே இந்த வேலைக்காரர்கள்! சின்னப் பையன் இவளைப் பார்த்துவிட்டுப் பரமனிடம் சொல்லி, பரமன் மூலம் எனக்கு விஷயம் வந்திருக்கிறது. இவர்களில் யார் வாயை நாம் மூட முடியும்? பரமன் சென்னையிலிருந்து நம்மோடு வந்தவன் வேறு..."

பரமன், வீட்டு சமையல்காரன். சின்னப் பையன் எடுபிடி ஆள்.

"சின்னப் பையன் பார்க்கும்படி ஏன் நின்றாய்?" என்று உதயாவிடம் பாய்ந்தான் கிருஷ்ணசந்திரன்.

"காலையில் சூரிய ஒளி, மூடிய கண்கள் மேல் படும்படி ஓர் ஐந்து நிமிடம் நிற்பது என் வழக்கம். உங்கள் வேலையாள் உங்கள் அறையை வேவு பார்ப்பான் என்று எனக்கு எப்படித் தெரியும்?" என்று திருப்பினாள் அவள்.

"என்னை நம்பி மகளை என்னோடு அனுப்பினார்கள். அவர்களுக்கு நான் என்ன பதில் சொல்லட்டும்?" என்று கலக்கத்துடன் கேட்டார் காந்திமதி.

"உண்மையைச் சொல்வது?" என்று எரிந்து விழுந்தான் மகன். "என்னவோ அவர்கள் வரை இந்த விஷயம் போய், அவர்கள் உங்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப் போவது போலப் பிரமாதப்படுத்துகிறீர்களே?"

"போகாமல் எப்படி நிற்கும்? இதற்குள் வேலைக்காரர்கள் அத்தனை பேரும் கசமுசத்திருப்பார்கள். யாராவது வேண்டுமென்றே உதி

வீட்டு வேலையாளிடம் வத்திவைப்பான். அப்புறம் அவர்கள் வீடு மட்டுமல்ல, ஊர் முழுவதும் பரவி விடும்" என்றார் தாயார் கவலையுடன்.

"அப்படியானால் என் பெயர் கெட்டுப் போய் விடுமா, ஆன்ட்டி?" என்று விழிகளை அகல விரித்தாள் உதயரேகா. "அச்சோடா! அப்புறம் கல்யாணமே ஆகாது என்பார்களே! யாரும்..." என்றவள் சுப்பென்று பேச்சை நிறுத்தி, காந்திமதியின் கையைப் பற்றி, "ஆன்ட்டி, நான் உங்களோடு தனியா பேச வேண்டும்" என்றாள்.

தனிமையில், "ஆன்ட்டி, உங்களுக்கு என்னைப் பிடித்திருக்கிறதா?" என்று கேட்டாள்.

"இது என்ன கேள்வி, தங்கம்?"

"இல்லை... நான் உங்கள் மகனை மணந்து கொண்டால் இப்போது எல்லாப் பிரச்னைகளும் தீர்ந்துவிடும் இல்லையா?"

ஒரு கணம் ஆர்வத்தோடு பளபளத்த காந்திமதியின் கண்கள் உடனேயே சோர்ந்தன. "இது நடக்கிற காரியமா, அம்மா? உன் பெற்றோர் சம்மதிப்பார்களா? அத்தோடு, புதுப்பூ மாதிரி நீ. என் மகனைப் பற்றி எல்லாமே உனக்குத் தெரியும்...."

"நன்றாகத் தெரியும். அவரை என்னால் திருத்த முடியும் ஆன்ட்டி.. அவரை நான் தனியேயும் அவரது அலுவலக அறையில் கூடச் சந்தித்திருக்கிறேன். அதனாலேயே எனக்கு நிச்சயமான நம்பிக்கை, ஆன்ட்டி. ஆனால், இந்தக் கட்டுப்பாடற்ற வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டு விட்டதால் உங்கள் பிள்ளைதான் முரண்டக்கூடும். அவரைச் சம்மதிக்க வைப்பது உங்கள் பொறுப்பு. என் பெற்றோரை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள் நம்பிக்கையோடு.

ஆவலைச் சோகம் மீற, "உதிம்மா, நான் ஒரு பிச்சைக்காரியின் நிலையில் இருக்கிறேன். பல நாள் பட்டினி கிடந்த பிச்சைக்காரி. எனக்குப் பழைய சோறே அமிர்தம்தான். நீயானால் பல்சுவை விருந்தே தருகிறேன் என்கிறாய். ஆசைதான். ஆனால் இதை ஏற்றுக் கொண்டால் நான் சுயநலம் பிடித்தவள் ஆகிவிட மாட்டேனா? நீ இளம் குருத்து... வேண்டாம்மா" என்றார் காந்திமதி.

"ஆன்ட்டி, உண்மையை என் வாயாலேயே சொன்னால்தான் விடுவீர்களா? கேளுங்கள், நான் உங்கள் மகனைத் தவிர வேறு யாரையும் மணந்து கொள்ள மாட்டேன். அவரிடம் எனக்கு... இன்னுமா புரியவில்லை? தயவு செய்து நான் விரும்புகிற இந்த வாழ்வை எனக்கு அமைத்துத் தாருங்கள் ஆன்ட்டி?" என்றாள் உதயா கொஞ்சலாக.

ஆசையாகச் அவள் கன்னத்தை வருடி



"உங்க பேர்தான் மாயாண்டின்னு இங்கே கணக்கு உள்ளவங்க யாராவது சாட்சிக் கையெழுத்து போடணுமே...?"

"நம்ம இன்ஸ்பெக்டர் இமயவரம்பன் போட்டா போதுங்களா...?"

- சீர்காழி. வி. ரேவதி

முத்தமிட்டு விட்டு, மகனை நாடிச் சென்றார் காந்திமதி.

எதிர்பார்த்தது போலவே கிருஷ்ணசந்திரன் திருமணத்தை வெகுவாக மறுத்தான். "தப்பாக எதுவும் நடக்கவில்லை என்று நான் சொல்கிறேன். அந்தப் பெண்ணிடம் நம்பிக்கை இருப்பதாக நீங்களே சொன்னீர்கள். பிறகு திருமணத்துக்கு என்ன அவசியம்?"

"ஒரு நல்ல பெண்ணின் வாழ்க்கை கெட்டுப் போய் விடக் கூடாது என்பதுதான்" என்றார் காந்திமதி.

"என்னைக் கல்யாணம் செய்வதால் அவள் வாழ்க்கை கெட்டுப் போய்விடாது என்று நினைக்கிறீர்களா?" என்று ஒரு மாதிரிக் குரலில் வினவினான் கிருஷ்ணசந்திரன்.

தொண்டையில் அடைத்ததை விழுங்கிவிட்டு, "இதற்கு ஒரு தாய் என்ன பதில் சொல்லக் கூடும்? ஆனால் சந்திரா, நீ யார் யாருடனோ எப்படி எப்படியோ பழகியதை நான் பல்லைக் கடித்து சகித்துக் கொண்டேன். ஆனால் உதயா விஷயம் அப்படியல்ல. ஒன்று அவளை நீ மணந்து கொள். அல்லது என்னை ஒரேயடியாக வழியனுப்பத் தயாராகிக் கொள்" என்றார் பெற்றவர் வெகு கடினமான குரலில்.

சற்று நேரம் பேசாதிருந்தான் மகன். புன்னகையின் சாயை ஒன்று தோன்றி மறைய, "சினிமா வசனம் பேசி மிரட்டுகிறீர்கள். என்னவோ, உங்கள் விருப்பம் போலச் செய்யுங்கள். ஆனால் அந்தப் பெண்ணிடம் இது பற்றி நன்றாகக் கேட்டு விட்டுச் செய்யுங்கள்" என்றவன், எழுந்து தன் அறைக்குள் சென்று, கதவைச் சாத்திக் கொண்டான்.

(தொடரும்)

எம்.ஏ.சுசீலா

அன்று விடிந்த அந்தப் பொழுது, ஏதோ ஓர் அசாதாரணத் தன்மையை உள்ளடக்கிக் கொண்டிருப்பது போல அவளுக்குப் பட்டது. அறையின் மூலையிலுள்ள நார்க்கட்டிலில், மரக்கட்டையைப் போல அசைவற்றுப் படுத்துக் கிடந்தான் கலைப்பிரியன். இயற்கை உபாதைகளுக்காகவும் கூட நேற்றிரவு அவன் தன்னை எழுப்பியிராதது, ரத்னாவின் மனத்துக்குள் நெருட, அவன் முகத்தருகே கைவைத்துப் பார்த்தாள். திக்கித்திக்கிப் பாடம் ஒப்புவிக்கிற மாணவனாய் சுவாசம் தயங்கித் தயங்கி வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. அடங்கிக் கொண்டிருந்த அவனுடைய மூச்சுக் காற்றைப் போலவே... வாழ்க்கையின் சவாலான சந்தர்ப்பங்களிலும்கூட, அணைந்துவிடாமல் அவன் பாதுகாத்து வந்த ஆர்வங்களும் வேகங்களும் கொஞ்சம் கொஞ்சமாய் அடங்கிக் கொண்டு வருவதை அவளால் உணர முடிந்தது.

"அக்கா!" - கதவைத் தட்டியது கலாதான். அந்த எட்டடிக் குச்சுக்குள் சுழன்று கொண்டிருந்த குடலைப் புரட்டும் நோய் வாடையும் புழுக்கமும் ஏதோ தனக்கு மட்டுமே உரிய அந்தரங்கச் சொத்தென்று பாதுகாத்துக் கொள்பவளைப் போலக் கதவை அரைகுறையாகத் திறந்தாள் ரத்னா. கதவு, முழுவதுமாகவே திறந்திருந்தாலும், உள்ளே வருகிற உத்தேசம் இல்லாதவளாய்க் காணப்பட்ட கலா, உல்லாச மனநிலையில் படபடத்தாள்.

"என்னக்கா... இன்னும் குளிக்கப் போகலியா? ஒரு மணிக்கெல்லாம் வண்டி வந்திடும்! நினைவிருக்கு இல்லே! இன்னிக்கு ஏவி.எம்மிலே ஷூட்டிங்! அண்ணனைக் கவனிக்கிறதிலே மறந்திடாதீங்க!"

கலாவின் நினைவூட்டலால் தன்னிலை பெற்ற ரத்னாவின் கண்களில் அந்தச் சுற்றுப்புறமே புதியதாய்த் தென்பட்டது. கூரைக் குடிசைகளுக்குச் சற்றே மேலான அந்த சிமெண்ட் லைன் வீடுகள்... எத்தனையோ மாத இடைவெளிக்குப் பிறகு... முற்றம் தெளிக்கப்பட்டு, வண்ணக் கோலங்களை அணிந்து கொண்டு... ம்! உள்ளும் புறமும் வேறானவை என்று எப்படிச் சொல்லி விட முடியும்? இங்கே 'உள்'தானே புறத்தை நிர்ணயித்துக் கொண்டிருக்கிறது? இந்த வீடுகளுக்கு... இவற்றில் வசிக்கிற மனிதர்களுக்கு... இன்றைய 'ஷூட்டிங்' ஒரு செயற்கை சுவாசத்தையல்லவா உட்செலுத்தியிருக்கிறது?

"என்ன ரத்னா, இங்கே நின்னுக்கிட்டிருக்கே? குழாய்லே அதிசயமாய்த் தண்ணி வருது! நமக்கு நல்ல காலம் வந்தாப்பிலே! சீக்கிரமாப் பிடிச்சு வச்சுச் சோறு பொங்கிட்டுக் கிளம்பற வழியைப் பாரு!"

"கிளம்பணுங்கா!"

"இதோ பாரு ரத்னா! தம்பி உடம்பையே நெனச்சு மறுகிக்கிட்டிருக்காதே! ஏதோ... பணம் பெருத்தவங்க அடிச்சுக்கிட்டாங்க! மூணு மாசம் ஸ்டிரைக்குன்னு நம்ம வயத்திலே ஈரத்துணியைப் போட்டு வச்சிட்டாங்க! இப்பத்தான் விடிவுகாலம் வந்திருக்கு! நாம என்ன லட்சக்கணக்கிலே கறுப்புப்பணமா சேர்த்து வச்சிருக்கோம்? இந்த மூணு நாள் 'ஷூட்டிங்'கை நம்பி எத்தனை இடத்திலே கடன் வாங்கியிருக்கேன் தெரியுமா? நீயும் கிடைக்கிற காசிலே தம்பிக்கு நல்ல வைத்தியமாய்ப் பார்க்கலாம், கிளம்பும்மா!"

- ஒரு மூத்த சகோதரியைப் போன்ற கரிசனத்தோடு பேசிவிட்டுப் பார்வதி அக்கா சென்ற பிறகு, கதவைத் தாழிட்டுவிட்டு உள்ளே வந்தாள் ரத்னா. அவன் படும் வேதனையைக் காண மனம் சகிக்காத நிலையிலும், கால்கள் அனிச்சையாக அவனருகிலேயே அவளை அழைத்துச் சென்றன.

ஆறடி உயரமும் அதற்கேற்ற கம்பீரத் தோற்றமுமாய்த் திரைப்படக் கல்லூரி மாணவனாக அவள் சந்தித்த அந்த சதீஷ்...! உலக சினிமாவையே உள்ளங்கை விரல்களில் அடக்கி வைத்திருந்த ஆழ்ந்த ஞானமும் கர்மயோகியைப் போல சதாகாலமும்

இருவேறு உலகம் இதுவென்றால்..

இலட்சியமே குறியென நிலைத்திருக்கும் தீட்சண்யம் வாய்ந்த காந்தக் கண்களும் ரத்னாவை அவனருகிலேயே கட்டிப் போட்டன. ஆசையோடு தான் தேர்ந்து கொண்ட துறையைத் தான் விடுகிற சுவாசமாகவே ஆக்கிக் கொண்டு, உலகத்தையும் வாழ்க்கையையும் கலைக்கண்களால் மட்டுமே பார்த்துக் கொண்டிருந்த அவனுக்குக் கலைப் பிரியன் என்ற பெயரைச் செல்லமாகச் சூட்டியவளே அவள்தான்!

"இத பரு ரத்னா!... 'எ ஃபிலிம் பை கலைப்பிரியன்'னு போட்டுக்கிட்டுப் பேரு வாங்கிட்டுப் போயிடறது என் னோட லட்சியமில்லை! தாய், தங்கச்சி, தாலி, தாரம்ங்கிற சென்ட்டிமென்ட்டுகளுக்குள்ளேயே குதிரை ஓட்டிக்கிட் டிருக்கிற நம்ம தமிழ்ப் படங்கள்... உலக மேடையிலே பேசப் படற அளவுக்கு உயர்ந்தா... அதுதான் எனக்குச் சந்தோ ஷம்..."

- உண்மையான தாகமும் வெறியுமாய்ப் பேசும் அவனது கலைத்தவம், பணம், புகழ், விருது என்ற எல்லைகளையெல்லாம் கடந்த தொலைதூர இலக்கொன்றில் மையங்கொண் டிருந்தது.

ரத்னாவும் அவனுமாய் வாழ்க்கைப் பயணத் தில் இணைசேர்ந்த பிறகும் கூட காதல் பேசா மல் விதம் விதமாகத் திரைக்கதைகளையே பேசி, விவாதித்து, ஒவ்வொரு 'ஷாட்'டாக எழுதிப் பார்த்துத் தங்கள் கற்பனைப் படத்தை எந்த 'ஃபைனான்சியரி'ன் துணையுமின்றி மனத்திரை யில் ஓட்டிப் பார்த்து... ஓ... எத்தனை இனிமை யான காலங்கள் அவை...!

தன்னுடைய இலட்சியக் கனவுக்கும் நடை முறை யதார்த்தத்துக்கும் இடையே... தூர்க்கவே முடியாத அகழிகள் கிடப்பது, கலைப்பிரிய னுக்கு நன்றாகவே தெரிந்திருந்தாலும் கூடத் தன் மனத்தின் அழைப்பை மீறி, அன்றாட வாழ்க்கையை ஓட்டுவதற்காகவென்றுகூட, எத னோடும் யாரோடும் சமரசம் செய்து கொள் வது, அவனுக்குத் துளியும் சம்மதமில்லாமல் போயிற்று. அந்தக் காரணத்தினாலேயே ரத்னா, ஒரு துணை நடிகையாகிற நிர்ப்பந்தம் நேர்ந்த பொழுது, அவன் அதை ஏற்க முடியாமல் துடித் துப் போனான்.

"உன்னைச் சம்பாதிக்க விட்டுட்டு நான் உட் கார்ந்து சாப்பிட வேண்டியிருக்கேங்கிற பாமரத் தனமான காரணத்துக்காக இதை நான் எதிர்க் கலை ரத்னா! நம்ம ரெண்டு பேர்ல யாருடைய திறமை ஏற்கப்பட்டாலும், அது ரெண்டு பேருக் குமே வெற்றிதான்! ஆனால்... இந்தத் துறை யிலே... உன்னோட 'டெக்னிகல்' அறிவுக்கும், கதை சொல்ற திறமைக்கும் பக்கத்திலே கூட வர முடியாதவங்களுக்குக் கீழே.... நீ... பத்தோட பத்தொண்ணா அவமதிக்கப்படற கொடு மையை என்னாலே தாங்கிக்க முடியாதும்மா!"

ஆனாலும்... தினந்தோறும் அவர்களின் அரைவயிறு நிரம்புவதற்காகவாவது... அவன் அதைத் தாங்கித்தான் ஆகவேண்டுமென்ற நிலை ஏற்பட்டபோது, இடிந்து போனான் அவன். ஆனால்... அவன் நோய்ப்படுக்கையில் விழுந்துவிட்ட அந்த நாட்களி லுங்கூட... அவனது கதையைக் கலைப்படம் எடுக்கப் போவ தாய்ச் சத்தியம் செய்து வாங்கிக் கொண்டு போன ஒருவர், அதனை அழகுபடுத்துவதான நல்லெண்ணத்தில், அசிங்கப் படுத்திக் குலைத்தபோது... 'மூலக்கதை'க்குச் சன்மானமாகத் தன் முன்பு நீட்டப்பட்ட காசோ லையை வாங்க மறுத்து, அதை மூர்க்கமாய்க் கிழித்தெறிந்தான்



அவன்.

சலனமின்றிப் படுத்திருந்த கலைப்பிரியனிடமிருந்து விக்கல் ஒலி ஒன்று வெளிப்பட, நினைவு கலைந்தாள் ரத்னா. இனிமேல் தாமதிப்பதில் பொருளில்லை. அவனைச் சுத்தம் செய்து ஆகாரம் ஊட்டிவிட்டு அவளும் கிளம்பியாக வேண்டும்! நீண்ட நாள் முடக்கத்திற்குப் பிறகு, சோம்பல் முறித்துக் கொண்டு இன்று எழுந்திருக்கும் கனவுத் தொழிற்சாலை தரப்போகிற வருமானத்தில், அவன் அவனுக்கு மருந்து வாங்கியாக வேண்டும்!

தண்ணீர் பிடிக்கும் இடத்தில், கேலியும் சீண்டலுமாகக் கூடியிருந்த பெண்களின் முகங்களில்... திருவிழா பூரிப்பு!

"நீ என்னதான் சொல்லு! காமிரா முன்னாடி நிக்கிறதே ஒரு தனி ஜோருதான்... இல்லே!"

"ஆமாம்! இவ பெரிய சரோசாதேவி! இவளைத்தான் காமிரா 'டைட் குளோசப்'பிலே காட்டப் போகுதாக்கும்."

"முகம் தெரியுதோ... மூக்குநுனி தெரியுதோ... அதைப் பத்தி நமக்கென்ன? ஷூட்டிங்கை நடத்தறது பெரிய கம்பெனி! வழக்கமா நமக்குக் கிடைக்கிற வருமானத்துக்கு மேலேயே கொடுக்கிறதோட, மூணு நாள் நல்லா... வாய்க்கு ருசியாய்ச் சாப்பாடும் கிடைக்கும்..."

"ஏங்கா! பொதுவாய்ப் பாட்டு... டான்ஸ் காட்சின்னா... பத்து, இருபது துணை நடிகைகளைத்தானே கேட்பாங்க? இவங்க... ஒரே சமயத்திலே நூறு பேருக்குமேலே வேணும்னு கேட்டிருக்காங்க!"



"இல்லேடி.... இது... ஏதோ பூசைக்காட்சியாம்! மஞ்சப் புடைவை, ரவிக்கையோட ஹீரோயின் கூடச் சேர்ந்து..."

"வேப்பிலை அடிக்கணுமாக்கும்...?"

- இவர்கள் இத்தனை பேருமாய்ச் சேர்ந்து பேசிச் சிரித்துத்தான் எத்தனை நாளாயிற்று? பொருள்தான் அத்தனைக்கும் ஆதாரம் என்று சொல்லிவிட்டுப் போன மார்க்ஸ், ஒரு பொய்யனா என்ன?

ரத்னாவின் வருகை... அவர்களது பேச்சில் சிறியதொரு இடைவெளியை ஏற்படுத்திவிட்டுத் தொடர்ந்தது.

"ரத்னாக்கா! நீங்களும் வர்றீங்கதானே?"

"ம்...! அக்காவுடைய அழகுக்கும், நடிப்புக்கும் அதிர்ஷ்டம் மட்டும் இருந்திருந்தா, ஒரு சுகாசினியாகியிருக்கலாம்!"

"அண்ணன் மட்டும் என்னவாம்...? நல்ல காலம் வந்திருந்தா... மணிரத்னத்துக்கும் மேலெயே போயிருப்பார்...!"

- பணத்தின் பாதை அடைபட்டுப் போனாலும், அன்பின் ஊற்று வற்றிப் போகாத அற்புதமான பெண்கள்! நடிகையர் திலகங்களாய்... நாட்டியப் பேரொளிகளாய் மின்னுவதற்கு ஆசைப்பட்டு வந்துவிட்டு, வெள்ளித்திரையில் மின்மினிப் பூச்சிகளாய் மட்டுமே தலையை நீட்டிவிட்டுப் போனாலும்... அடுத்தவர்களின் வாய்ப்பைக் கண்டு பொறாமைப்படாதவர்கள் அவர்கள்!

வாழ்க்கை நெருக்கடிகளால் தங்கள் கூட்டத்தோடு இணைந்திருந்தாலும்... ரத்னாவும், கலைப்பிரியனும் திறமைகளில் தங்களைவிட மேலானவர்கள் என்ற உணர்வும், அவர்கள் இருவரின் வித்தையும் ஞானமும் வீணாய்ப் போகிறதே என்ற ஆதங்கமும் அந்தப் பெண்களுக்கு நிறையவே இருந்தது.

"ரத்னாக்கா! உங்களுக்குத்தான் இந்தி நல்லாத் தெரியுமே! இன்னிக்கு நம்ம கூட நடிக்கிற ஹீரோயினுக்கு அதுதான் தாய்மொழியாம்! கொஞ்சம் அவங்க கூட நைசாப் பேசி... ஒரு அக்கா வேஷத்துக்காவது சான்ஸ் வாங்கிடுங்



"அடுத்த தடவை வேற தொகுதியில் நிற்கப் போறேன்!"

"ஏன், இந்தத் தொகுதியில் எல்லாக் குறைகளையும் நிவர்த்தி செஞ்சாச்சா?"

"ஊஹூம். எல்லாப் புறம்போக்கையும் ஆக்கிரமிச்சாச்சு!"

- வேதபுரி எஸ். ரமேஷ்

களேன்!"

"என்ன இது... இன்னும் கிளம்பாமே சளசளன்னு பேசிக்கிட்டு...? இன்னும் ஒரு மணி நேரத்திலே ஸ்டுடியோவிலேயிருந்து பஸ் வந்திடும்! போய்ப் புறப்படற வழியைப் பாருங்கம்மா!"

- விரட்டிக் கொண்டே வந்த அவர்களின் ஏஜெண்ட்டான மணியண்ணன், அங்கே நின்றிருந்த ரத்னாவைக் கண்டதும், குரலைத் தணித்துக் கொண்டான்.

"தங்கச்சி! நீயும்... கவலைப்படாமே இவங்க கூடப் போயிட்டு வாம்மா! நீ திரும்பி வர்ற வரைக்கும்... 'கலைத்தம்பி'யை நான் பார்த்துக்கறேன்!"

- கோடம்பாக்கம் வட்டாரத்திலேயே முரடனென்று பெயரெடுத்திருந்த மணியண்ணன், திரைக்கல்லூரி வாழ்க்கையில், அவர்கள் இருவருக்கும் சீனியர்! கலைப்பிரியனின் ஆற்றல்களையும் பரிமாணங்களையும் முழுவதுமாய் அறிந்திருந்த அவனது தீவிர அபிமானி!

"இந்தா பாரு பார்வதி! இன்னிக்கு என்னாலே உங்ககூட வர முடியாது! எல்லோருக்கும் கம்பெனியிலே சாப்பாடு வாங்கித் தர்றது.. சம்பளம் வாங்கிக் கொடுக்கிறது.. இதையெல்லாம் இன்னிக்கு நீ பார்த்துக்க" என்று பார்வதியை அழைத்துக் கூறியவன், மீண்டும் ரத்னாவிடம்,

"எல்லாரையும் பஸ்ஸிலே ஏத்திவிட்ட பிறகு, நான் உங்க வீட்டுக்கு வந்து தம்பியை 'சார்ஜ்' எடுத்துக்கறேம்மா! அப்பாலே கடைசியா நீ வந்து இவங்க கூட 'ஜாயின்' பண்ணிக்கலாம்" என்றபடி அங்கிருந்து அகன்றான்.

அந்தக் குறுகிய சந்தை முற்றாக அடைத்தபடி, விஸ்தாரமான சுற்றுலாப் பேருந்து ஒன்று நின்று கொண்டிருக்க, தங்களின் தனி அடையாளங்களையே துறந்தவர்களாய்... மஞ்சளுடை அணிந்த பெண்கள், அதன் இருக்கைகளை நிறைத்திருந்தார்கள்...

"என்ன... எல்லாரும் வந்தாச்சா? ஒழுங்காப் போய்ச் சொன்னபடி வேலை செஞ்சிட்டுச் சண்டை போடாம பணத்தை வாங்கிக்கிட்டு வந்து சேருங்க! நான் போய் ரத்னா தங்கச்சியை அனுப்பறேன்! அது வந்தப்புறம் பஸ் கிளம்பலாம்!"

மணியண்ணன் மூன்று முறைக்கும் மேலாகத் தட்டிய பிறகு கதவைத் திறந்த ரத்னா, மஞ்சள் புடைவை உடுத்திக் கொண்டு கிளம்புவதற்குத் தயார் நிலையிலிருந்த போதும், அவள் விழிகள் நீர்க்குளங்களாக மாறியிருந்தன.

"என்னம்மா இது...? புறப்படற நேரத்திலே இப்படிக் கண்கலங்கிட்டு...?"

"முதல்லே உள்ளே வாங்கண்ணே!"

- ஒன்றும் புரியாதவனாய் அவன் உள்ளே நுழைய... கதவை அழுத்தித் தாழிட்ட ரத்னா, அவனுக்கு மட்டுமே கேட்கும் அடங்கிய குரலில் அதனை அறிவித்தாள்.

"அவர் போய்ச் சேர்ந்துட்டார் அண்ணே!"


- கலைப்பிரியன் இருந்த திசையில் அப்போதுதான் கண்களைச் செலுத்திய மணியண்ணன், போர்வை போர்த்தப்பட்டுச் சடலமாய்க் கிடந்த அந்தக் கலைஞனின் சன்னதியில் பொடிப்பொடியாய் நொறுங்கிப் போனவனாய்த் "தங்கச்சி..." என்று அழுவதற்கு உரத்த குரலெடுத்தான்.

அதற்குள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, தன்னைச் சுதாரித்துக் கொண்டாள் அவள்.

"அண்ணே! வேண்டாண்ணே! குருவிக் கூட்டைப் பிரிச்சுப் போடற மாதிரி.. இந்த வீடுகளோட சந்தோஷத்தை என் புருஷனோட சாவு கெடுத்திட வேண்டாண்ணே! நம்மளை மாதிரி ஏழைங்க எல்லாம் காக்கா ஜாதி! இப்ப இங்கே ஒரு சாவு விழுந்திட்டது தெரிஞ்சா... இங்கே உள்ள எந்தக் காக்காயும் இரைதேடப் போகாது! இன்னிக்குத் தொழில் இருக்குங்கிறதைச் சொல்லிச் சொல்லி வாங்கின கடன்லே எத்தனை நாளா இங்கே உள்ள அடுப்பெல்லாம் எரிஞ்சுக்கிட்டிருந்ததுன்னு எனக்கு நல்லாவே தெரியுண்ணே! கலைஞர்கள் வயத்திலே பணக்காரங்கதான் அடிக்கிறாங்கன்னா... என்னோட கலைப்பிரியனும் அடிச்சிடக் கூடாதுண்ணே...! இப்ப... நான் அவங்க கூடப் போகாட்டியும் கூட அவங்களுக்குச் சந்தேகம் வந்திடும்! அதனாலே நான் போறேன்."

- இந்தக் கட்டத்தில் பொறுத்துக் கொள்ளவே முடியாதவனாய்த் தேம்பி வெடித்தான் அவன்.

"கடைசியா... எனக்கு ஒரே ஒரு உதவி மட்டும் செஞ்சிடுங்கண்ணே.... நான் வர்ற வரைக்கும் இவரை... என்னோட 'கலை'யைப் பத்திரமாய்ப் பார்த்துக்கங்க! நான் கொண்டு வர்ற காசு.. இவரோட கலைப்பயணத்தைக் கடனில்லாம முடிக்கிறதுக்காச்சும் உதவட்டும்!"



சி.பி.ஐ: சில குறிப்புகள்

சி.பி.ஐ.க்கு 'பவர்' எப்படி வருகிறது என்பது பற்றிச் சற்று விவரமாகப் பார்க்கலாம்.

நான் முன்பே குறிப்பிட்டபடி, தில்லி ஸ்பெஷல் போலீஸ் எஸ்டாப்லிஷ்மெண்ட் ஆக்ட் பிரகாரம்தான் சி.பி.ஐ.க்கு புலன் விசாரிக்கும் அதிகாரம் வருகிறது. அதுவும் தில்லி, கோவா, பாண்டி, சண்டிகர் போன்ற யூனியன் பிரதேசங்களில் மட்டும்! இதோடு மட்டுமல்லாமல் மேலும் சில சட்டச் சிக்கல்களும் இதில் உண்டு. சட்டம்-ஒழுங்கு பிரச்னைகள் எதிலும் சி.பி.ஐ. நுழையாது. ஊழல் குற்றங்கள், வரி ஏய்ப்பு, அந்நிய செலாவணி மோசடி - இந்த மாதிரி விவகாரங்கள் தாம். அதுவும் இவற்றை மத்திய அரசு ஊழியர்கள் செய்திருந்தால் மட்டுமே, கேஸ் சி.பி.ஐ.க்கு வரும்.

இன்னும் விளக்கமாக சொல்வதென்றால், ஒரு உதாரணம் பாருங்கள். பாண்டிச்சேரி அரசு ஊழியர் ஒருவர் ஏதோ ஊழல் செய்து விட்டார்; லஞ்சம் வாங்கிவிட்டார் என்று வழக்கு வந்தால், அது சி.பி.ஐ.க்கு வராது. பாண்டிச்சேரி மாநில போலீஸ், விஜிலன்ஸ் பிரிவுதான் விசாரிக்கும்! இதுவே, பாண்டிச்சேரியிலுள்ள சென்ட்ரல் எக்ஸைஸ் அலுவலகப் பிரிவில் அல்லது கஸ்டம்ஸ் ஆபீஸில் ஒரு ஊழல் - லஞ்ச விவகாரம் என்றால் சி.பி.ஐ. நுழைந்து விடும். ஏனெனில் கஸ்டம்ஸும் சென்ட்ரல் எக்ஸைஸும் மத்திய அரசுக் கட்டுப்பாட்டில் வருபவை.

சி.வி. நரசிம்மன்

அருள்வாக்கு

அகண்டமாக இருக்கிற பரமாத்மாவை கண்டம் கண்டமாக, உருவமும் குணமும் உள்ளவனாக, தியானம் பண்ணிக் கடைசி நிலையாக நிர்குணத் தியானம் செய்ய ஆரம்பித்தால் சண்டை, பூசல் ஒன்றுமே வராது. துக்கம், பயம் எதுவுமே இராது. பரமசாந்திதான் இருக்கும். இதுதான் ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் உபநிஷத மரத்திலிருந்து நமக்குப் பறித்துக் கொடுத்த பழம்.



இந்தப் பழுத்த நிலையை நாம் அடைவதற்கு முன் மொட்டாக, பூவாக, பிஞ்சாக, காயாக இருந்துதான் முதிர வேண்டும். பழுக்கும் நிலைவரைக்கும் பொறுமையாகத்தான் இருக்க வேண்டும். காயாக இருக்கும் போதே பழமாவதற்கு அவசரம் காட்டி, வெம்பி விழுந்து விட்டால் பயன் இல்லை.

'வெம்பி விழுந்திடுமோ?' என்று ராமலிங்கர் சொல்லுகிறார். நமக்கும் அந்தக் கவலை இருக்க வேண்டும். கனிந்த பழம் ஆகும் வரையில் பூஜை, ஜபம், தபம் எல்லாம் இருக்க வேண்டும். வேதத்தின் அந்தத்தில் இருக்கும்படியான தத்-த்வம் என்கிற உண்மை நிலைக்கு நாம் வரும் வரையில் அவை வேண்டும். அப்போதுதான் வெம்பாது பழுக்கும். கடைசியில் அந்த தத்வம் - மூலம் - எங்கே இருக்கிறது? 'தன்னிடத்திலேயேதான் இருக்கிறது; எந்த அறிவு, தத்துவத்தை ஆராய்கிறதோ அந்த அறிவுக்குள்ளேயே இருக்கிறது' என்பதை அநுபவத்தில் உணரலாம்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்.

கடவுளின் மிக உயர்ந்த தன்மையின் மையத்தை அடைவதற்கு, ஒருவன் தன்னுடைய உள் மையத்தையாவது முதலில் அடைய வேண்டும். தன்னை முதலில் அறிந்து கொள்ளாத யாரும் இறைவனை அறிய இயலாது.

— மீஸ்டர் எக்கார்ட்

சி.பி.ஐ. மாநில அரசுகளின் எல்லைக்குள்ளும் மத்திய அரசு ஊழியர்கள் பணியாற்றுவதுண்டே? டெலிபோன், தபால்-தந்தி அலுவலக ஊழியர்கள் மத்திய அரசு ஊழியர்கள் தாம். ஆனால் மாநில சரகங்களில் பணியாற்றுகிறவர்கள் தானே! அவர்கள் ஊழல் செய்தால்?

இந்த மாதிரி குற்றங்களில் மாநில அரசு சம்மதித்தால்தான் சி.பி.ஐ. விசாரிக்க வரும். அல்லாத பட்சத்தில் அதையும் ஸ்டேட் போலீஸ் கவனிக்க வேண்டியதுதான்!

ஏன் இப்படி?

சுதந்திரத்திற்கு முன்பு சி.பி.ஐயின் விசாரணைகளுக்கு மாநில அரசுகளின் சம்மதத்தைப் பெறுவதில் சிக்கல் இல்லை. எல்லாமே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் கீழ் இருந்ததால்! ஆனால் சுதந்திரத்திற்குப் பிறகு நமது அரசியல் சாசனப்படி போலீஸ் துறை முழுமையாக மாநிலங்களுக்கு கொடுக்கப்பட்டது. இதனால் சி.பி.ஐயின் பணிகளுக்குத் தடங்கல் வரலாம் என்று கருதி, "மத்திய அரசு ஊழியர்கள் செய்யும் ஊழல் புகார்களை விசாரிக்கும் உரிமையை - அக்குற்றங்கள் மாநிலங்களுக்குள் நடந்திருந்தாலும் - சி.பி.ஐக்கு அளித்து விடுகிறோம்" என்று 1951ம் ஆண்டு வாக்கில் மத்திய அரசு எல்லா மாநில அரசுகளிடமிருந்தும் எழுதி வாங்கிக் கொண்டு விட்டது. அதன்படிதான் சி.பி.ஐயும் இயங்க ஆரம்பித்தது.

ஆனால் பனிரெண்டு வருடங்களுக்கு முன்பு, நாடு முழுவதும், மாநிலங்களில் காங்கிரஸ் அல்லாத வேறு கட்சி அரசுகள் ஏற்படத் தொடங்கியதும் பல்வகையிலும் மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம் வேண்டும் என வற்புறுத்திப் பெற ஆரம்பித்து விட்டன. அந்த வகையில் முன்பு மாநில அரசுகளால் எழுதித் தரப்பட்ட இந்த ஒப்புதல் கடிதங்கள் அடுத்தடுத்து வாபஸ் பெறப்படுவதும், ஆளும் கட்சி மாறிய பின் திரும்பக் கொடுக்கப்படுவதுமாக ஒரு இழுபறி நிலை ஏற்பட்டது.

மாநில அரசு ஒப்புக் கொண்டால் மட்டுமே மாநில சரகங்களில் சி.பி.ஐ. விசாரிக்க முடியும் என்கிற நிலைதான் இப்போது! மாநிலங்களின் எல்லைக்குள் சி.பி.ஐ.க்கு உரிமை இல்லை.

இதுவே ஜனாதிபதி ஆட்சி நடக்கிற கால கட்டம் என்றால் நிலைமையே வேறு. அப்போது சி.பி.ஐ. கொடிதான் உயரப் பறக்கும்!

இருப்பினும் பாரபட்சமில்லாத, ஒழுங்கான, ஆழமான விசாரணை, எங்கு தேவைப்பட்டாலும் உடனே 'கூப்பிடு சி.பி.ஐ.யை' என்கிற நிலைதான் இன்றும் இருக்கிறது என்ற வகையில் எனக்கு எப்போதும் சந்தோஷம்தான்.

இதற்குப் பல உதாரணங்கள் காட்ட முடியும்! வெகு நாள் முன்பு நடந்த ஒரு வழக்கைப் பாருங்கள். வடமாநிலம் ஒன்றில் - ராஜஸ்தான்



''கேட்டால் சிரிக்க வேண்டும். யோசித்தால் அழுகை வர வேண்டும். அதுதான் உண்மையான நகைச்சுவை.''
— என்.எஸ். கிருஷ்ணன்
தகவல் : குகை. பிரகாஷ்

என்று நினைவு - நடந்த சம்பவம் இது.

மாநில முதலமைச்சரின் மகன் வேகமாகக் கார் ஓட்டிச் சென்றதில் விபத்து ஏற்பட்டு ஒரு நபர் பலியாகி விட்டார். ஓட்டுநர் அஜாக்கிரதை காரணமாக ஒரு மரணம் ஏற்பட்டது என்ற பிரிவில் வழக்கு பதிவாகிவிட்டது. கேஸை மாநில போலீஸ் எடுத்துக் கொண்டு ஆரம்பிக்கவிருந்த சமயம்.

ராஜஸ்தான் மாநில எதிர்க்கட்சிகள் அத்தனையும் ஒன்று சேர்ந்து, "இந்தக் கேஸை மாநில போலீஸ் விசாரிக்கக் கூடாது; பாரபட்சமற்ற தீர்ப்பு அதில் கிடைக்கும் என்கிற நம்பிக்கை எங்களுக்கு இல்லை" என்று ஒரேயடியாகப் பொங்கி எழுந்தன!

விளைவு -

அந்தக் கேஸ் சி.பி.ஐ. வசம் அளிக்கப்பட்டது! எதற்கு இதைச் சொல்கிறேனென்றால் சி.பி.ஐக்கு ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பாகுபாடுகளெல்லாம் எப்போதுமே கிடையாது. லகான் மாட்டப்பட்டு நேர்ப்பார்வையுடன் செல்லும் குதிரை அது!

முக்கியமான இன்னொரு விஷயம் -

பொருளாதாரக் குற்றங்கள் (Economic Offences) என்று சில வகைக் குற்றங்கள் உள்ளன. அதாவது இறக்குமதி, ஏற்றுமதிகளில் நடக்கிற ஒழுங்கீனங்கள், விதிகளுக்குப் புறம்பான வியாபாரம், இதனாலெல்லாம் அரசுக்கு வரவேண்டிய வரிகளில் ஏய்ப்பு; வருமான வரி ஏய்ப்பு, அந்நிய செலாவணி மோசடி - இப்படி நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கக் கூடிய எந்த ஒரு குற்றமும் சி.பி.ஐயின் விசாரணைக்குத்தான் வரும்!

இதற்கென சி.பி.ஐயில் 'Economic Offence Wing' என்றொரு தனிப் பிரிவே இயங்கிக் கொண்டிருக்கிறது. நாட்டில் நடைபெறுகிற ஊழல்களை உற்று நோக்கியபடி இருக்கும் இக்குழு, சரியான சந்தர்ப்பத்தில் பாய்ந்து, அமுக்கிப் பிடிக்கும்!

சி.பி.ஐ. விசாரிக்கும் குற்றங்களை, இப்படி மூன்று வகைகளுக்குள் அடக்கி விடலாம்.

1. ஊழல் குற்றங்கள்
2. பொருளாதாரக் குற்றங்கள்.
3. மாநில அரசு கேட்டுக் கொள்வதன் பேரில் விசாரிக்கப்படும் - அங்கே நடக்கிற சில பிரத்யேகக் குற்றங்கள்.

இதில் தற்சமயம் சி.பி.ஐ. விசாரித்துக் கொண்டிருக்கும் ராஜீவ் காந்தி கொலை வழக்கு கடைசிப் பிரிவில் வரும்.

வெளி நாட்டுச் சதிகாரக் கும்பல் ஒரு வி.ஐ.பி.யைக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட இவ்வழக்கை, மாநில போலீஸ் புலன் விசாரித்து, துப்புத் துலக்குவது மிகவும் கடினம்.

காரணம் வெளிநாடு சம்பந்தப்பட்ட கேஸ்களில் மாநில போலீஸால் - வெளிநாட்டு போலீஸ் - அரசு உதவியை நேரடியாகப் பெற முடியாது. மத்திய அரசின் ஒப்புதலுடன் இன்டர் போல் (Interpol) வழியே இயங்க வேண்டிய இக்காரியம் சி.பி.ஐக்கு மட்டுமே சாத்தியம்! (இது ஏன், எப்படி என்கிற விவரத்தைப் பின்னால் விரிவாகப் பார்க்கலாம்.)

சி.பி.ஐ.யின் பலமான அம்சங்களில் ஒன்று, அதன் சட்டப் பிரிவு (Legal Wing). மாநில போலீஸின் அமைப்பில் அதற்கென்று தனியாக இப்படி ஒரு சட்டப் பிரிவு இல்லை.

போலீஸ் துறை, தனக்கென ஒரு 'சட்டப் பிரிவை' ஏற்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும் என்பது தேசிய போலீஸ் கமிஷனின் பரிந்துரைகளில் முக்கியமானதொன்று.

சி.பி.ஐயில் இப்படி ஒரு பிரிவு - அதுவும் மிக பலமான பிரிவு - நெடுங்காலமாக இயங்கி வருகிறது. சி.பி.ஐ விசாரிக்கும் எல்லா கேஸ்களையும் இந்தப் பிரிவுதான் கோர்ட்டில் நிறுத்தி வாதாடும்.

இப்படி உள்ளுக்குள்ளேயே ஒன்றுக்கொன்று சம்பந்தமுள்ள துறைகள் பல இணைந்து பணியாற்றுவதால் சி.பி.ஐ. விசாரிக்கும் கேஸ்களில், கோர்ட்டில் வெற்றி பெறும் கேஸ்களின் சதவீதம் மிக அதிகம். (80% to 90%)

தவிர, சி.பி.ஐயில் புலனாய்வு செய்யும் அதிகாரிகள் உயர் ராங்கில் இருப்பவர்கள்.

உதாரணமாக, மாநில போலீஸில் ஒரு கேஸை சப்-இன்ஸ்பெக்டர் விசாரிக்கிறார் என்றால் - அதே கேஸ் சி.பி.ஐக்கு வந்தால் இன்ஸ்பெக்டர் அல்லது டி.எஸ்.பி.தான் விசாரிப்பார்! அவருக்கு உதவி செய்வதுதான் சப்-இன்ஸ்பெக்டரின் பணி.

எல்லா சி.பி.ஐ. கேஸ்களும் டி.ஐ.ஜி., அல்லது ஐ.ஜி. ராங்கில் உள்ள ஆபீஸர்களின் உன்னிப்பான மேற்பார்வையில் விசாரிக்கப்படுகின்றன என்பதால் விசாரணையின் தரம் எளிதில் விளங்கும்!

முக்கியமான கேஸ்கள் எனில் சி.பி.ஐ. இயக்குநரே களத்தில் இறங்கி விடுவார்!

அது சரி. எதற்காக இதையெல்லாம் இத்தனை விரிவாகச் சொல்கிறேன்?

இனி வரப்போகும் சி.பி.ஐ. கேஸ்கள் சிலவற்றை, வெறும் மர்மக்கதை போல் படிக்காமல், சற்று 'டெக்னிகலாக' அணுகுவதற்கு வசதியாகவே இதெல்லாம்!

(அடுத்த வாரம்)





BARSAAT (மழை)

இந்தி ஜாம்பவான்களின் இரண்டாவது எடிஷன்கள் களம்காண வரத்தொடங்கியிருக்கிறார்கள்.

இந்தப் படத்தில் தர்மேந்திராவின் மகன் பாபி தியோல், ராஜேஷ் கன்னாவின் மகள் ட்விங்கிள் கன்னா இருவரும் அறிமுகம். பர்ஸைக் கவிழ்த்து விட்டிருப்பவர் தர்மேந்திரா.

படத்தின் பெரிய பலம் சந்தோஷ் சிவனின் ஒளிப்பதிவு. கண்ணை அள்ளிக் கொண்டு போகிறது! திகைப்பூட்டும் செய்நேர்த்தி. முதல் பாராட்டு அவருக்கு.

கதைக்கு வரலாம். வழக்கமான ஃபார்முலாக் கதை (காதல், மோதல், கல்யாணம்)தான்.

நடுவே ஹீரோயினுக்கு ஒரு வளர்ப்புத் தந்தை வில்லன்; போலீஸ்கார வில்லன், அடிதடி, கசமுசா, பிசுபிசு. லட்சம் படம் வந்தாலும் மாறாத சூத்திரம்.

ஆனாலும் முழுப்படமும் உட்கார்ந்து பார்க்க முடிவதற்கு ஒரு காரணம் இருக்கிறது. சுத்தமாக இந்தியே தெரியாதவர்களுக்குக் கூடப் புரியும்படி, மெல்லிய நகைச்சுவை கலந்த அந்த வசனங்கள்!

காட்டில் வேட்டையாடிக் கொண்டு தேமே என்று காலம் கடத்தும் ஹீரோ, தந்தை சொல் தட்டாமல் நகரம் வந்து காலேஜில் சேருகிற போது ஆரம்பிக்கிற அந்த மத்தாப்பு போன்ற ஹ்யூமர், ஒரு மணி நேரத்துக்கு விடாமல் துரத்தி கிச்சுக்கிச்சு மூட்டுகிறது.

பின்னால் சீரியஸாகிப் போய் சேஸிங், அது இது என்று வழக்கமான இந்திப் படமாகிவிட்டாலும் நெளியாமல் இருக்க முடிவது - அந்தப் புதுப்பூ ட்விங்கிள் உபயம். கொஞ்சம் ரவீனா, கொஞ்சம் ப்ரியா அரோரா, கொஞ்சம் டிம்பிள் கபாடியா என்று தேர்ந்தெடுத்து, ஒட்ட வைத்து செதுக்கிய முகம். மின்னல் புன்னகை. ஏ.கே. 47 லுக்!

மில்லிமீட்டர் ஆபாசம் கூட இல்லாமலே தியேட்டரில் விசில் வாங்கியிருக்கிறார்!


பாடல்கள், 'சல்தாஹை' ரகம். ஆனால் நொடிக் கொன்றா! ஹே பகவான்!

மழை என்று தலைப்பு வைத்து விட்டதாலேயே பெரும்பாலான காட்சிகளில் பிரதானர்களை நனைய விட்டிருக்கிறார்கள்.

ஆனாலும் நமுத்துப் போகவில்லை.

— ஆர்.பி.ஆர்.

பாதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி. பாதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : கி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; மானேஜிங் டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.


சிகரத்தின் உச்சியிலே தனித்து நிற்கும் ஒனிடா கேஸய்.
தன்னிகரற்ற டிவியின் அனைத்து சிறப்பம்சங்களுடன் காத்திருக்கிறது.
சரி நிகர் போட்டிக்காக ... கடுமையான சவாலுக்காக. சவால் எனில் எப்படிப்பட்ட பிராண்டுகளிடமிருந்து ... ஒனிடா கேஸய்யின் மகா சக்தி வாய்ந்த மாஸ்டர் கமாண்ட் கன்ட்ரோல் ...
உலகின் முதன் முதலான கராவ்கே தேர்வுடன் கூடிய 53 செமீ டிவியின் வெல்ல முடியாத தரம்...
அல்லது வீட்டிலேயே அரங்க ஒலியின் அனுபவத்தைத் தரும் இதன் ஜி-ஹார்ன் ஒலி. இவற்றைக் கண்டு மிரளாத பிராண்டுகளிடமிருந்து.
உலகிலே முன்னேற்றம் கண்ட சில நாடுகளில் இப்போது இதே போன்ற பிராண்டுகள் மெதுவே தலை தூக்கி இருக்கலாம்.
ஆனால் அவற்றோடும் போட்டியிடத் துடியாய் துடிக்கிறது ஒனிடா கேஸய். வெற்றி வாகை சூடப் போவது ஒனிடாதான் ... மற்றவரை காக்கப்போவது கடவுள்தான்.
ஒனிடா
கேஸய் சீரீஸ்
இந்தியாவிற்குப் பெருமை ...
உலகிற்குப் பொறாமை.
இது தெள்ளத் தெளிவு.
ஒரு இந்திய பிராண்ட் காத்திருக்கிறது
சர்வதேச போட்டிக்காக
Avenues O 395.95

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka

